# தாழ்மையின் வெற்றி

அல்லது

## ( ஜெயமடையவே பணிகிறாள் )

*By*


**" கௌசிகா "**

*and*

" கே. வி. பாக்கியலெக்ஷ்மி "



UNIVERSITY
625021


**இரண்டாம் பதிப்பு.**


*All rights reserved.*



PRINTED AND PUBLISHED BY
THE C. M. V. PRESS,
MADURA.


# SHE STOOPS TO CONQUER


**1947.**

# முகவுரை.

---

"தாழ்மையின் வெற்றி" என்பது, ஆங்கிலத்தில் "ஷீ ஸ்டூப்ஸ் டு கான்கர்" என்று பெயர் வழங்கி வரும் அரிய ஹாஸ்ய நாடகத்தின் மொழிபெயர்ப்பு. இது ஆலிவர் கோல்ட் ஸ்மித் என்பவரால் கி. பி. 1771-ம் வருஷம் எழுதப்பட்டு, 1773-ம் வருஷம் மார்ச்சு மாதம் 15-ந் தேதி முதல் முதலாக "கவெண்ட் கார்டன்" என்ற நாடகமேடையில் நடிக்கப்பட்டது. அன்றுமுதல் இன்று வரை இந்த ஹாஸ்ய நாடகத்தை புகழாதவர்கள் இல்லை. பல தேசங்களில், பல பாஷைகளில் மொழிபெயர்க்கப் பட்டு கணக்கற்ற ஜனங்கள் அந்த ஹாஸ்யச் சுவையை அருந்தியிருக்கின்றனர்.

இவ்வுலகில் ஐரிஷ் தேசத்தவர் இயற்கையாகவே ஹாஸ்யம் ததும்பும்படி பேச வல்லமையுள்ளவர்கள்; அவர்களிலும், மிக உன்னதமான மொழிகளில், ஹாஸ்ய அமைப்புடன் எழுத வல்லவர் ஆலிவர் கோல்ட் ஸ்மித். அவர் அயர்லாந்து தேசத்தில் பிறந்தவர்; ஆங்கில பாஷை யில், பளிங்குபோன்ற மொழிகளால் எழுத சக்தி பெற்றவர்; தேனினும் இனிய வார்த்தைகள் அமை யும்படி எழுத வல்லவர்; ஹாஸ்யமே உருவெடுத் தவர்; அமர்ந்த சொல்லொழுக்கமும் இசையும் பெற்றவர்.

அத்தகையவர் எழுதியதும், உலகம் முழுவதும் பாராட்டும் ஹாஸ்ய நாடகமாகிய "ஷீ ஸ்டூப்ஸ் டு கான்கர்"

என்ற நாடகத்தை "தாழ்மையின் வெற்றி அல்லது ஜெய மடையவே பணிகிறாள்" என்றபெயருடன் இங்கு தமிழில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. நமது தாய் பாஷையி லும், அதின் அமுதை அருந்த வேண்டுமென நினைத்து எழுதப்பட்டுள்ளது. இதில் ஏதேனும் பிழைகள் இருப் பின் அது மொழிபெயர்த்தவரைச் சார்ந்தது. அழகும், வனப்பும், சுவையுமுள்ளதாயிருப்பின் அவை இந்நாடகம் எழுதிய ஆலிவர் கோல்ட் ஸ்மித் என்பவரின் திறமையை எடுத்துரைக்கின்றன. இதில் ஏதேனும், இலக்கணம், இசை, அச்சுப் பிழைகள் முதலிய தவறுகள் இருப்பின் அதைப் பாராட்டாது, அதிலுள்ள உயர்ந்த அம்சங்களைக் கருதி, தமிழ் வாசகர்கள் மனமகிழ்ச்சியுடன், இந்த தமிழ் மொழிபெயர்ப்பை அங்கீகரிக்க வேண்டுமென தமிழ் வாசகர்களை வணக்கத்துடன் கோருகிறோம்.

"கௌசிகா."

AND

1—11—47

"K. V. பாக்கியலெக்ஷ்மி."

UNIVERSITY LIBRARY

# முக்கிய நடிகர்கள்.

---

1. ஹார்ட்காஸில்.
2. ஹார்ட்காஸில் மனைவி.
3. மார்லோ.
4. ஸர் சார்லஸ் மார்லோ.
5. டோனி.
6. கேட்.
7. மிஸ் நேவில்.
8. ஹேஸ்டிங்ஸ்.

---



" படிப்பா? விஷமும், கல்லித்தனத்தையும்
தவிர, வேறு அவனிடம் என்ன இருக்கிறது?"

UNIVERSITY LIBRARY
RAI-625021

# தாழ்மையின் வெற்றி

அல்லது

## (ஜெயமடையவே பணிகிறாள்)

---

## முதல் பாகம்.

ஸீன்:— [ஓர் புராதன வீட்டில் ஓர் அறை: ஹார்ட்காஸில் என்பவரும் அவர் மனைவியும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

ஹார்ட்காஸில் மனைவி:— *உங்களைப்போல் நான் பார்த்ததேயில்லை! உலகத்தில் நம்மைப்போல் வீட்டை விட்டே வெளிக்கிளம்பாமலும், டவுனுக்கு அடிக்கடிப் போய் நாகரிகம் கற்றுக்கொண்டு, பட்டிக்காட்டு வழக்கங்களைப் போக்காமலும், யாராவது இருக்கிறார்களா? அடுத்தாற்போல் உள்ள ஹாக்கினுடைய பெண்கள், கிருஸ்பியின் மனைவி, எல்லோரும் வருஷத்திற்கு ஒரு தரம் டவுனுக்குப்போய் ஒரு மாதமாவது தங்கிவிட்டு மெருகு கொடுத்தாற்போல் பளபளவென்று வரவில்லையா?*

புருஷன்:— *அடடா! போய்விட்டு வந்து ஒரு வருஷத்திற்கு வேண்டிய தளுக்கும், நாஸுக்கும் கொண்டுவருகிறார்கள். லண்டனிலுள்ளவர்கள் அவர்களுடைய மதியீனத்தையெல்லாம் ஏன் அங்கேயே வைத்துக்கொள்ளுவதில்லை என்றுதான் புரியவில்லை. என் காலத்தில் கொஞ்சங் கொஞ்சமாகத்தான் டவுனிலிருந்து இதெல்லாம் வெளிவந்தது. இப்பொழுது கோச் வண்டியைவிட துரிதமாக வந்துகொண்டிருக்கிறது.*

லண்டனிலுள்ள "ஷோக்" எல்லாம் வண்டியில் வருகிற வர்கள் கொண்டுவருவது போதாது என்று மூட்டை முடிச்சுகளில்கூட வந்துவிடுகிறது.

மனைவி:— ஆமாம்; உங்கள் காலமெல்லாம் ரொம்ப அழகாகத்தானிருந்தது. இத்தனை வருஷங்களாக அதைப் பற்றி உங்களிடம் கேட்டாய்விட்டது; எப்பொழுது பார்த்தாலும் அதே பாட்டுத்தான். நாமோ இந்த சரிஞ்சு விழும்படியான பழய வீட்டில் அசையாமல் உட்கார்ந்து கொண்டு நல்ல நாகரிகம் தெரிந்தவர்களான மனிதர் களுடன் பழகக்கூட முடிவதில்லை. வீடோ, பார்த்தால் ஹோட்டல் மாதிரியாக இருக்கிறது. போது விடிஞ்சா இங்கே கிழம், கட்டைகளெல்லாம், வந்து விடுகிறது. உங் களுடைய பழங்கதைகளையும் இளவரசர் யூஜீன், மார்ல் பரோவைப்பற்றிய கதைகளையும் கேட்க வந்துவிடுகிறார் கள். அதற்கேற்றாற்போல், அந்த கிழட்டு ஆட்பிஷ், குள்ளன் க்ரிப்பிள்கேட், இன்னொரு நொண்டிப்பாடகன்:- எனக்கு இதையெல்லாம் கண்டால் எரிச்சலாயிருக் கிறது.

புருஷன்:— எனக்கு ரொம்ப பிடித்திருக்கிறது. எது பழசானாலும் பிடிக்கும்; பழய சிநேகிதர்கள், பழய நாட்கள்; பழய வழக்கம்; பழய புத்தகம்; பழய சாராயம்; (அவள் கையைப் பிரியமாகப்பிடித்துக்கொண்டு) டோரதீ! உண்மையாகச் சொல்லுகிறேன். எனக்கு எல்லாவற்றை யும் விட என்னுடைய பழய மனைவியைத்தான் ரொம்ப பிடிக்கும்.

மனைவி:— கொரச்சலில்லே! உங்களுக்கு எப்போ பார்த்தாலும், டோரதியும், பழய மனைவியும்தான். நீங்கள் வேணு கிழத் தன்மையடைந்திருக்கலாம். நான் ஒன்றும் கிழமில்லே; எனக்கொன்றும் வயதாகவில்லே. இங்கே! எனக்கு வயது என்ன பாருங்கள்? இருபதும் இருபதும்.

புருஷன்:— எங்கே! எங்கே! கூட்டிப்பார்ப்போம். இருபதும், இருபதும், கிட்டத்தட்ட ஐம்பத்தி ஏழு ஆகிறது.

மனைவி:— ஏன் பொய் சொல்ரேள்? என் முதல் புருஷன் மகன் டோனி பிறக்கும் பொழுது எனக்கு வயது இருபது. அவனுக்கு விவரம் தெரியக்கூடிய வயது இன்னும் வரவில்லேயே?

புருஷன்:— அதெங்கே வரப்போகிறது? நீ தான் அவனே லக்ஷணமாகப் பழக்கி வளர்த்திருக்கிருயே?

மனைவி:— பரவாயில்லே; அவனுக்குத்தான் நல்ல ஆஸ்தியிருக்கிறதே; படித்து ஒன்றும் ஆகவேண்டிய தில்லே. வருஷம் 1500 பவுன் வருகிற வரும்படியைச் சிலவழிக்க படித்துத்தான் ஆகவேண்டுமோ?

புருஷன்:— படிப்பா! விஷமமும், கல்லித்தனத்தை யும் தவிர வேறு அவனிடம் என்ன இருக்கிறது?

மனைவி:— வேடிக்கையாக, தமாஷாக இருக்கிருன் பாவம்! இந்த இளம் வயதில், விட்டுத்தான் பிடிக்க

வேண்டும். குழந்தைகள் இப்போதானே தமாஷா யிருக்கமுடியும்?

புருஷன்:— விட்டுப் பிடிப்பதா? குளத்திலே கொண்டுபோய்தான் விடவேண்டும். வேலைக்காரனுடைய செருப்பை கொளுத்துவதும், வேலைக்காரியை கதிகலங்க வைத்து பயமுறுத்துவதும், பூனைக்குட்டிகளின் உயிரை எடுத்துத் துலைக்கிறதும் வேடிக்கையா? இதெல்லாம் தமாஷ் என்றால் அவனிடம் நிறைய இருக்கிறது. நேற்று பிஸ்ஸில் என்பவர் வந்துவிட்டுப் போகும் பொழுது நான் எழுந்து தலைவணங்கி நமஸ்கரித்தேன். அப்பொழுது எனக்குத் தெரியாமல் என் பொய்த்தலை மயிரை நாற்காலியின் பின்னால் ஓர் கயிற்றினால் கட்டிவிட்டான். நான் எழுந்து நமஸ்கரித்தபோது என் வழுக்கைத் தலையை பிஸ்ஸிலுக்கு தரிசனம் காண்பித்தேன். ரொம்ப அழகாயிருக்கோல்யோ?

மனைவி:— அதற்கு நானா ஜவாப்தாரி? பாவம், ரொம்ப, பட்ட உடம்போல்யோ; ரொம்ப கிடந்ததினால் புத்திகூட கொஞ்சம் மட்டுத்தான். பள்ளிக்கூடத்தில் இப்பொழுது சேர்த்தால் உடம்பு ரொம்ப க்ஷீணித்துவிடும். கொஞ்சம் திடமானதும் ஒரு வருஷம், இரண்டு வருஷம், படித்தால், தானே எல்லாம் தெரிந்துவிடுகிறது.

புருஷன்:— அவனுக்கு படிப்பா! பிடிலும் பூனையும்தான் படிப்பு. அவன் படித்து வாழவில்லையா? குதிரை லாயமும், சாராயக் கடையும்தான், அவனுக்குப் பள்ளிக்கூடம்.

மனைவி:— இப்போ பிடிச்சு, அவனை மட்டந்தட்டாதேயுங்கள். அவன் ஆயிஸோடே, அதிக நாள்கூட இருக்கமாட்டான் போலிருக்கிறது. 'பாவம்'. அவன் முகத்தைப் பார்த்தால் அவனுக்கு க்ஷயத்தினுல் உடம்பு இளைத்து, க்ஷீணித்துவிட்டது போலிருக்கிறது.

புருஷன்:— ஆமாம் பாவம். உடம்பு நிதானம் தெரியாமல் பெருத்துக்கொண்டேவந்தால் அதுதான் க்ஷயத்திற்கு அடையாளமோ?

மனைவி:— ஐயோ பாவம்! அவன் இருமிக்கொண்டேயிருக்கிறுனே.

புருஷன்:— குடிக்கும்பொழுது புறை ஏறினுல் இருமத்தான் இருமும்.

மனைவி:— அவன் மார்க்கூடை நினைத்தால் எனக்கு ரொம்ப பயமாயிருக்கிறது.

புருஷன்:— எனக்கும் பயந்தான். ஏனென்றுல், சில சமயங்களில் அவன் நாராசம் போல் காதைத் துளைத்துவிடும்படி மார் நிறைய மூச்சைப் பிடித்துக்கொண்டு, கூச்சல் போட்டுக்கத்துகிறுன். (இந்த சமயத்தில் டோனி ஏக கூக்குரல் போட்டுக்கொண்டு வருகிறுன்). அதோ பார்; கத்திக்கொண்டு போவதை. ரொம்ப க்ஷீணித்துத் தானிருக்கிறுன், பாவம்.

[டோனி, அவ்விருவர்கள் இருக்கும் வழியாக எதிரே போகிறுன்.]

[டோனியின் தாயார் அவனைப் பார்த்து] டோனீ! எங்கேடாபோறே கண்ணு! எங்கள்கூட கொஞ்சநாழிகை இருந்துவிட்டு எங்கள் மனம் குளிரும்படி செய்யக் கூடாதா குழந்தை!

டோனி:— என்னாலே துளிக்கூட நிற்கமுடியாது; கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன்; ரொம்ப வேலையிருக்கிறது. ரொம்ப தமாஷ் நடக்கப்போகிறது. புருக்கள் என் வரவை எந்நேரமும் ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

ஹார்ட்காஸில்:— ஓஹோ! அந்தச் சாராயக் கடையிலா! நான் நினைத்த மாதிரிதான் இருக்கிறது. அப்படித்தான் இருக்குமென்று நினைத்தேன். அப்பவே சொன்னேனே.

டோனி தாயார்:— அந்த இடம் கண்ட காலிப் பசங்கள் எல்லாம் கூடுகிற இடமாச்சே.

டோனி:— அப்படியெல்லாம் இல்லை. நல்ல அந்தஸ்து உள்ளவர்கள் இருக்கிறார்கள். சாராயக்கடை இன்ஸ்பெக்டர் டிக்மக்கின்ஸ்; மிருகவைத்தியம் செய்யும் டாக்டர் ஸிலாங்; வாத்தியப்பெட்டி ரிப்பேர் செய்யும் அபிநாதப்; ஈயப்பூத்து வைக்கும் டாம்ட்விஸ்ட்; எல்லோரும் இருக்கிறார்கள்.

தாயார்:— ஒரு நாளைக்கு அவர்களைப் பார்க்கா விட்டால் பரவாயில்லை, அப்பா! சொன்னதைக்கேளு!

அவர்கள், நீ வாராததினால் ஏமாற்றமடைந்தால் அடையட்டும்.

டோனி:— அவர்கள் ஏமாந்தால் நான் கவலைப்படப்போவதில்லை; ஆனால், நான் அங்கு போகாமல் ஏமாற்றமடைய முடியாது.

தாயார்:—(டோனியைத் தடுத்த வண்ணம்) நீ போகக் கூடாது.

டோனி:—நான் போகத்தான் போவேன்; என்ன ஆனாலும் சரி.

தாயார்:—நான் போகக்கூடாது என்று சொல்ரேன். போகவே கூடாது.

டோனி:— சரி, என்னைத் தடுத்தால் நீ பலமா, நான் பலமா, என்று பார்த்துவிடலாம்.

(தாயாரைத் தள்ளிக்கொண்டே போகிறான்)

ஹார்ட்காஸில்:— [தனக்குள்] அதோ பார்! இரண்டு ஜடங்கள் போவதை! அவனை, அவள் குட்டிச்சுவராகப் பண்ணுகிறாள். அவளை, அவன் கழுதையாக அடிக்கிறான். புத்தி, யோசனை என்பதே இந்தக் காலங்களில் வீட்டை விட்டு ஓடிவிடும்போலிருக்கிறது. அடுத்தாற்போல் என் பிரியமுள்ள குழந்தை கேட், எப்படியிருக்கிறாள்? ஆனால், இந்தக் காலத்திற்கு தக்கபடி நாஸூக்காக இருக்க அவளும் விரும்புகிறாள். டவுனில் ஒரு வருஷம்,

இரண்டு வருஷம், இருந்ததற்கு, ப்ரென்ச்ஸில்க், மஸ்லின் இவைகள் ரொம்ப பிடித்துவிட்டது.

[ஹார்ட்காஸிலுடைய பெண் கேட் வருகிறள்]

அவள் தகப்பனர் அவளைப் பார்த்து:—

தகப்பனர்:— இதென்ன கூத்து? கேட்! என்ன சமாசாரம்? உன்னைச் சுற்றிவர ஒரே ஸில்காக இருக்கிறது. எப்பா! எவ்வளவு தடபுடலாக இருக்கிறது! வீண் ஜம்பம் பண்ணிக்கொள்ளுபவர்கள், உடையில் சிலவழிக்கும் பணத்திலிருந்து இந்த உலகத்திலுள்ள எல்லா ஜனங்களுக்கும் வயிறு நிறைய சாப்பாடு போட்டுவிடலாம். இது ஜனங்களுக்குத் தெரிவதேயில்லை.

கேட்:— நான் நமக்குள் ஏற்பட்ட ஒப்பந்தப்படி தானே நடந்து கொண்டிருக்கிறேன். காலையில் என்னிஷ்டப்படி உடுத்திக்கொண்டு, வந்தவர்களை உபசரிப்பது: மாலையில், உங்கள் நோக்கப்படி வீட்டு வேலைக்காரி மாதிரி உடை கட்டிக்கொள்வது. அப்படியிருக்க என்மேல் குறைகூறலாமா?

தகப்பனர்:— அப்போ சரி: ஒப்பந்தப்படியே கண்டிப்பாக நடந்து கொள்ளவேண்டும்; அதன்படியே நடந்து கொள்ளுகிறுயா என்று கவனிக்க இன்று சாயந்திரமே ஓர் சந்தர்ப்பம் கிடைக்கும் பார்ப்போமே.

கேட்:— எனக்கு இதன் அர்த்தம் புரியவில்லையே.

தகப்பனார்:— உன்னிடம் சொல்வதற்கு என்ன? இன்றைக்கே, நான் உனக்குப் புருஷனைகத் தேடியிருக்கும் வாலிபன் இங்கு வருகிறான். அவன் கிளம்பிவிட்டதாகவும், அவன் தகப்பனார் எனக்குக் கடிதம் போட்டிருக்கிறார். அவரும் கூடிய சிக்கிரம் வருவதாக எழுதியிருக்கிறார்.

கேட்:— அப்படியா?

தகப்பனார்:— நல்ல தயாள குணமுள்ளவனும்.

கேட் :— அப்படியிருந்தால் எனக்கு ரொம்பப் பிடிக்கும்.

தகப்பனார்:—இளம் வயது; நல்ல தைர்யசாலி.

கேட்:— எனக்கு பிடித்துவிட்டதென்றே நினைக்கிறேன்.

தகப்பனார்:—நல்ல தேர்ந்த அழகு.

கேட்:— [தகப்பனாரின் கையைப் பிடித்துக்கொண்டு கொஞ்சிய வண்ணம்] அப்பா! எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. இன்னும் அதிகமாக விஸ்தரிக்க வேண்டாம். இதுவே போதும். அவனைத்தான் நான் மணந்து கொள்ளப் போகிறேன்.

தகப்பனார்:— கேட்? எல்லாவற்றையும்விட மேலாக அவன் மிகவும் கூச்சமுள்ளவன்.

கேட்:— ஐயையே! என் மனோ உத்ஸாகம் எல்லாம் தொலைந்துவிட்டது. 'கூச்சமுள்ளவர்' என்று சொல்லுகிறீர்களே; அது அவருடைய மற்ற குணங்களைப் பிரகாசிக்காமல் செய்துவிடுமே; கூச்சமுள்ள புருஷன் எதற்கெடுத்தாலும் சந்தேஹியாக இருப்பானென்று சொல்லுகிறார்களே.

தகப்பனார்:— அவ்விதமில்லை; மிகவும் உயர்ந்த குணமுள்ளவர்களிடம்தான் கூச்சமும் இருக்கும்; அதுவே ஓர் அழகு. அதைக் கண்டுதான் எனக்கு அவனை பிடித்தது.

கேட்:— அதுமாத்திரம் இருந்தால் நான் நேசிக்க மாட்டேன். என் மனதைக் கவரும்படியான குணங்கள் அவரிடம் இருந்தால்தான் நான் அவரைக் காதலிப்பேன். நீங்கள் சொல்லுவதுமாதிரி, இளமையாகவும் அழகாகவும், உன்னத குணமும், பொருந்தியிருந்தால் நான் நேசிக்கலாம்; மனதிற்குப் பிடிக்கும் என்று நினைக்கிறேன்.

தகப்பனார்:— கேட்! உனக்குப் பிடித்திருந்தாலும், மணந்துகொள்ள இன்னும் ஓர் தடை இருந்தாலும் இருக்கலாம். நீ அதை யோசிக்கவில்லையே? மணவாளனுக்கு ஒருவேளை உன்னை பிடிக்காவிட்டால்?

கேட்:— ஏன் என்னை இவ்விதம் அவமானப்படுத்துகிறீர்கள்? அவருக்கு என்னைப் பிடிக்காவிட்டால் அதற்காக என் மனதையா உடைத்துக்கொள்ளுவேன்?

மாட்டவே மாட்டேன். என்னை மிகவும் அழகாகக் காண்பிக்கும் கண்ணாடியை உடைத்துவிட்டு, என்னைக் காதலிக்கும் புருஷனை மணந்து, சந்தோஷித்திருப்பேன்.

தகப்பனார்:— அதுதான் சரி, நான் போய் வேலைக் காரர்களைப் பழக்குகிறேன். அவர்களுக்கு வந்தவர்களை எவ்விதம் உபசரிப்பது என்பது தெரியாது. பழக்கி வைத்தால்தான் அடுத்த நாள் சண்டைக்குப் போகும் புதுவீரனை, முதல் நாள் தயாரிப்பது போலாவது இருக்கும். [போகிறார்.]

கேட்:— [தனக்குள்] அடே! என் தகப்பனார் சொல்லிய விஷயம் என் உடம்பை, பரபரப்பாகச்செய்து விட்டதே! [கைவிரல்விட்டு எண்ணி] சிறுவயதாம்; நல்ல அழகாம்; இவைகளைக் கடைசியாகச் சொன்னாரே; நான் அதை முதலில் வைப்பேன். புத்திசாலி; நல்ல குணமுள்ளவர், என்று சொன்னார். இதெல்லாம், என் மனதிற்குப் பிடித்திருக்கிறது. ஆனால் கூச்சமும் லஜ்ஜையும் உள்ளவர் என்று சொன்னாரே; அதெல்லாம் என்னால் போக்கடிக்க முடியாதா; பார்ப்போம். ஐயோடி! கல்யாணம் ஆவதற்குள் கணவனை எவ்விதம் சீர்படுத்துவது என்று நினைக்க ஆரம்பித்துவிட்டேனே.

[மிஸ் நெவில் வருகிறாள்.]

கேட்:— நெவில்! நீ வந்தது எனக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கிறது. என்னைப்பார்! நான் ஜோராயிருக்கிறேனா? அல்லது ஏதோருவிதமாக இருக்கிறேனா? எப்படியிருக்கிறேன்? ஜோராகவா?

மிஸ் நேவில்:— ரொம்ப சரியாகத்தான் இருக்கிறாய். இங்கே பார்ப்போம். என்ன விஷயம்? டோனி உன்னிடம் ஏதாவது சேஷ்டை செய்தானா? நீ வைத்திருந்த பறவைகளுக்கும், தங்க மீன் குஞ்சுகளுக்கும் ஏதாவது ஆபத்து வந்துவிட்டதா? அல்லது, மனதை உலைக்கும்படியான நாவல் இன்று படித்து மனம் கலங்கியிருக்கிறாயா? என்ன இப்படி?

கேட்:— இல்லை; அதெல்லாம் ஒன்றுமில்லை. என்னை பயமுறுத்திவிட்டார்கள், யாரோ ஒரு காதலன் வருவதாகச் சொல்லி. அந்தப் பயத்திலிருந்து நான் இன்னும் வெளிக்கிளம்ப முடியவில்லை.

மிஸ் நேவில்:—அவர் பெயர்?

கேட்:—மார்லோ.

மிஸ் நேவில்:—அப்படியா? நிச்சயமாகவா!

கேட்:— ஸர் சார்லஸ் மார்லோவின் மகனும்.

மிஸ் நேவில்:— அடடே! அவரா! என் காதலனாகிய மிஸ்டர் ஹேஸ்டிங்ஸினுடைய ஆப்த நண்பர். அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் விட்டுப் பிரிவதேயில்லை. நீ கூட, டவுனிலிருந்த பொழுது அவர்களைப் பார்த்திருக்கலாம்.

கேட்:—நான் ஒருபொழுதும் பார்த்ததில்லை.

மிஸ் நேவில்:— அவர் ஒரு விதமான மனிதர். உயர்ந்த குலத்துப்பெண்களுடனும், படித்த பெண்களுடனும், மஹா கூச்சத்துடனிருப்பார்; வேறுவித ஸ்திரீகளுடன் வேறு விதமாக ஸகஜமாக இருப்பார். நான் சொல்லுவது புரிந்ததா?

கேட்:— என்னமோ போல்தான் இருப்பார் போலிருக்கிறது. நான் அவரை எவ்விதம் பரிபாலிப்பது? ச்சு! எப்படி வேணும் என்றாலும் இருக்கட்டும்; எனது அதிர்ஷ்டமும் சமயமும் எவ்விதமிருக்கிறதோ அதன்படி பார்த்துக்கொண்டு ஜயமடைவேன். அது கிடக்கட்டும்; உன் சமாசாரம் என்ன? என் தாயார், டோனியை கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று உன்னைத் தொந்திரவு செய்கிறாளல்லவா? அவளே, அவனுக்குப் பதிலாக உன்னைக் காதலிக்கிறாளோ?

மிஸ் நேவில்:— இப்பொழுதுதான் அவளுடன் பேசிவிட்டு வந்தேன். அந்த வானரத்தைப்போல் உத்தமமான குணமுள்ளவன் இவ்வுலகத்திலே இராது என்று பலவிதமாகப் புகழ்ந்து பேசினாள். நூற்றுக் கணக்கான இனிய வார்த்தைகள் பேசி என்னுடன் கொஞ்சினாள்.

கேட்:— அவன் பேரில் உள்ள அன்பினால், அவனைப்போல உலகத்தில் வேறு ஒருவரும் கிடையாது என்று நிஜமாகவே நினைக்கிறாள். அதுவும் உன்னிடம் இருக்கும் செல்வம் கொஞ்சமா? அதை விடுவதற்கு

அவளுக்கு இஷ்டமேயில்லை. அவள் கைவசம் இருந்து வருவதால், தன் குடும்பத்தைவிட்டு போகக்கூடாது என நினைக்கிறாள்.

மிஸ் நேவில்:— என் நகைகள், கவரும்படியான ஓர் ஆஸ்தியா? நகைகளைத் தவிர வேறு ஒரு சொத்தும் கிடையாதே. எது எவ்விதமிருந்தால் என்ன? என் காதலன் ஹேஸ்டிங்ஸ் என்மேல் உண்மையான காதலுடன் ஸத்தியமாக இருந்தால், நான் அவளுக்கு இசைய மாட்டேன். இப்பொழுது அவள், தன் மகனை, நான் நேசித்துக் கொண்டிருப்பதாகவே நினைத்துக்கொண்டிருக்கட்டும்; நான் வேறு ஒருவரைக் காதலிப்பதாக அவள் ஸ்வப்பனத்தில் கூட நினைக்கவில்லை.

கேட்:— என் தமயன் டோனி ஒரே பிடிவாதமாகத்தான் இருக்கிறான். உன்மேல் ஏற்பட்டிருக்கும் வெறுப்பில் சற்றும் குறையவில்லை. அதை நினைத்தால் அவனிடம் எனக்குக் கொஞ்சம் பிரியமாகக்கூட இருக்கிறது.

மிஸ் நேவில்:— எவ்வளவு சேஷ்டையிருந்தாலும் மனதில் ஒரு கெடுதலும் கிடையாது. அவனுக்கும், நான் வேறு யாரையாவது மணந்து கொள்ளவேண்டும் என்ற நினைவுதான். சரி; நாழியாய்விட்டது; அத்தை மணி அடித்துவிட்டாள். சாயந்திரம் வெளியில் உலாவுவதற்குச் செல்லுவாள். நான் போக வேண்டும். ஓ ஹோ! நமக்கு இப்பொழுது நெருக்கடியான சமயத்தில்தான் தைரியம் வேண்டும்.

கேட்:— இப்பொழுது இராவேளையாக இருந்து, காலையில் பொழுது விடிந்ததும், "எல்லாம் சரிவர நடந்து விட்டது," என்று கேட்டால் சந்தோஷமாயிருக்கும்.

[இருவரும் போகிறார்கள்.]

---

ஸீன்:—[சாராயக்கடையில் ஓர் அறை. கிழிசலையும், கந்தையையும் உடுத்து, சிலர் புகையிலை, சாராயம் முதலியவைகளை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள். எல்லோருக்கும் தலைமையாக, ஓர் உயர்ந்த நாற்காலியில் ஓர் பிரம்பை கையில் வைத்துக்கொண்டு டோனி தலைமை வகித்துக்கொண்டிருக்கிறான்.]

எல்லோரும்:—*ஹுர்ரே! ஹுர்ரே!! ஹுர்ரே!!!*

ஒருவன்:—*சப்தம் போடாதீர்கள். சப்தம் போடக்கூடாது; நமது தலைவர் ஒரு பாட்டு பாடப்போகிறார்.*

எல்லோரும்:—*அதுதான் சரி, பாடுங்கள், பாடுங்கள்.*

டோனி:—*சரி, உங்களிஷ்டப்படியே செய்கிறேன். நானே ஸ்வயமாக இந்த சாராயக்கடையில் கற்பனை செய்த கவியைப் பாடுகிறேன். அந்த பாட்டிற்கு "மூன்று புறாக்கள்" என்று பெயர்.*

[பாடுகிறார். பாட்டு முடிந்ததும்;]

எல்லோரும்:—*ஜோர் ஜோர்! அடடா என்ன அழகு?*

ஒருவன்:—*அவர் பாடினாலே அது ஷோக்குத்தான்.*

**2**-வது மனிதன்:—அவர் பாடினுக்கே நமக்கு ரொம்ப உத்ஸாகம். பாட்டுன்னு, லேசான பாட்டா? அட்டா? என்ன குஷியானபாட்டு, அல்பத்தனமாகப்பாடமாட்டாரு.

**3**-வது மனிதன்:-மட்டமா பாடினு நமக்குப்பிடிக்காது.

**4**-வது மனிதன்:- நாஸூக்காகப் பாடினல் நாஸூக்காகத்தான் இருக்கும், ஒய்யாரம் ஒலித்துக்கொண்டேயிருக்கும்.

**3**-வது மனிதன்:—மக்கின்ஸ்! நீ சொன்னது சரி. நான் கரடி வைத்துக்கொண்டு, அதனல் சம்பாத்தியம் செய்தால்தான் என்ன? எனக்கு நாஸூக்காக இருக்கத் தெரியாதா? "ஜலம் ஓட" என்ற பாட்டும், "அரியாடினில் ஓர் நிமிஷம்" என்ற பாட்டும் ஆலாபனம் பண்ணிப் பாடினல், என் கரடிகூட நன்ருக அனுபவித்துக் கூத்தாடும்.

**2**-வது மனிதன்:—நம்ப யஜமானரு, இன்னும் அவருடைய ஸ்வபாவமான உத்ஸாக நிலைக்கு வரவில்லை; அந்த ஜோருக்கு வந்தால் பத்துமைல் தூரத்திற்கு அவருக்கு ஒருவரும் நிகரில்லை.

டோனி:—கொஞ்சநேரம் கழித்துப் பாரேன்; நான் எவ்விதமிருக்கிறேன் பார். யார், யார், என்னிடம் எப்படிப் பழகவேண்டுமென்று காண்பிக்கிறேன்.

**2**-வது மனிதன்:—ஓ! எல்லா விஷயத்திலும் அவருடைய தகப்பனர் லம்ப்கின் மாதிரியாகவே இருக்கிருர்.

முயல் பிடிப்பதிலும், கதிகலங்க நாராசம்போல் ஊதுவதிலும், பெண்பிள்ளைகளைத் துரத்துவதிலும், அவருக்குச் சமானம் யார் சொல்லு? இந்தப் பக்கத்திலே, அவர் நல்ல உயர்ந்த குதிரை, பெண்கள், நாய், எல்லாம் வைத்திருந்தது ஓர் பழமொழியாகப் போய்விட்டது.

டோனி:— ச்சு! அதெல்லாம் கிடக்கட்டும். நாம் இப்பொழுது என்ன சேஷ்டை பண்ணலாம்? பெட்பவுன்ஸரை முதலில் தொந்திரவு செய்யலாமா? அல்லது கருப்புக் குதிரையையா? அடே! பசங்களா! நல்லா குடியுங்கடா; பணத்தைப்பற்றிக் கவலையே படாதேயுங்கள். —அங்கே யாரடாது? என்ன சமாசாரம்?

[சாராயக்கடை முதலாளி வருகிறார்.]

முதலாளி:— வாசலில் யாரோ இருவர் ஒரு கோச் வண்டியில் வந்திருக்கிறார்கள். வரும் பாதையில் காட்டுப்புரமாக இருந்ததால், வழி தவறிவிட்டு முழித்துக்கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது. ஹார்ட்காஸிலைப்பற்றி ஏதோ பேசிக்கொண்டார்கள்.

டோனி:—ஓஹோ! என் தங்கையைக் கலியாணம் செய்துகொள்ள வந்தவராயிருக்கும். லண்டனிலிருந்து வந்தவர்கள் மாதிரி தோன்றுகிறதோ?

முதலாளி:— இருக்கலாம்: ஆனால் முகத்தைப் பார்த்தால் ப்ரெஞ்ச் தேசத்தவர் மாதிரி தோன்றுகிறது.

டோனி:— சரி: அவர்களை இங்கே வரச்சொல்லு; நான் வழி காண்பித்து அனுப்புகிறேன்.

[முதலாளி போகிறார்.]

டோனி:— (தன் நண்பர்களைப் பார்த்து) சிநேகிதர்களா! யாரோவருகிறார்களாம்; நம் அந்தஸ்துக்குச்சரியானவர்களாயிருக்க மாட்டார்கள் போலிருக்கிறது. நீங்கள் கீழே போய்விடுங்கள். நான் ஒரு நொடிப்பொழுதில், ஒரு எலுமிச்சம்பழம் பிழியும் நேரத்திற்குள் வந்து சேருகிறேன்.

[எல்லோரும் போய்விடுகிறார்கள்.]

டோனி:—(தனக்குள்) நானும் பார்க்கிறேன். ஆறு மாதமாக ஹார்ட்காஸில் என்னை நாயே, கழுதை, என்று தாறுமாறாக வாயில் வந்தபடியெல்லாம் வைகிறார். அந்தக் கிழத்திற்கு நல்ல சூடு காண்பிக்கவேண்டும்.—ஆனால், கொஞ்சம் பயமாயிருக்கிறது. —என்ன பயம்? எனக்குத் தான் வருஷத்திற்கு 1500 பவுன் வரும்படி கிடைக்கும் படி ஏற்படுமே? அவர் வேணுமென்றால் பயமுறுத்திப் பார்க்கட்டுமே? நான் அவரை சும்மாவிடப்போவதில்லை.

[முதலாளி, மார்லோவையும், ஹேஸ்டிங்ஸையும், அழைத்து வருகிறார்.]

மார்லோ:—என்ன உபத்திரவம்; மஹா பிடுங்கலாகப் போய்விட்டது நமது பிரயாணம்? குறுக்கு வழியாக வந்தால் 40 மைல் இருக்கும் என்று சொன்னார்கள். நாம் 60 மைலுக்குமேல் வந்தாகிவிட்டது.

ஹேஸ்டிங்ஸ்:—எல்லாம் உன்னால் வந்த வினைதான். உனக்கு உள்ள கூச்சத்தில், வழியில் பாதையைக்கேட்டுத் தெரிந்துகொள்ள முடியாமல் வாய்ப்பூட்டுப் பூட்டிக் கொண்டோமல்லவா?

மார்லோ:— ஹேஸ்டிங்ஸ்! நீ என்னை கோபித்துக் கொண்டாலும் கோபித்துக்கொள். எனக்கு வழியில் சந்திக்கும் ஒவ்வொருவரையும் பல்லைக்காட்டிக் கொண்டு கேட்டுவிட்டு, அவன் அதிகப் பிரசங்கித்தனமாக ஏதாவது பதில் சொன்னால் சஹிக்காது.

ஹேஸ்டிங்ஸ்:— இப்படியிருந்தால், நமக்கு இங்கு கூட பதில் வராது.

டோனி:— கோபம் வேண்டாம், தாங்கள் இந்தப் பக்கத்தில் ஹார்ட்காஸில் என்பவரைத்தேடி வந்திருப்பதாக எனக்கு தகவல் கிடைத்தது. இப்பொழுது எந்தத் திசையில் நீங்கள் இருக்கிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியுமோ?

ஹேஸ்டிங்ஸ்:— சிறிதும் தெரியாது. நீங்கள் சொன்னால் நன்றியுடனிருப்போம்.

டோனி:—வந்த வழியாவது தெரியுமோ?

ஹேஸ்டிங்ஸ்:—அதுவும் தெரியாது. நீங்கள் சொன்னால்..................

டோனி:-ஓஹோ! அப்படியானால், உங்களுக்கு வந்த வழியும் தெரியாது; எந்த இடத்தில் இருக்கிறீர்கள்

என்றும் தெரியாது; சரி. இதற்கு, முதல் முதலில், அர்த்தம் என்னவென்றால்; நீங்கள் வழிதவறி வந்துவிட்டீர்கள்.

மார்லோ:—இது தெரிந்துகொள்ள, எங்களுக்கு ஒரு பிசாசினுடைய உதவியும் வேண்டியதில்லையே?

டோனி:— ஐயா, உங்களை நான் 'எவ்விடமிருந்து கிளம்பினீர்கள்' என்று கேட்கலாமோ?

மார்லோ:— எங்களுக்குப் போகவேண்டிய இடத்திற்கு வழிகாட்ட, இந்தக்கேள்வி அனாவசியம்.

டோனி:—பரவாயில்லை; கோபம்வேண்டாம். நீங்கள் என்னைக் கேள்விகேட்கும் பொழுது எனக்கும் உங்களைக் கேட்க உரிமையுண்டு. அது கிடக்கட்டும்; நீங்கள் தேடிப் போகும் ஹார்ட்காஸில் கிறுக்குப்பிடித்த ஓர் கிழட்டுப் பயித்யமா? அவலக்ஷணம் பொருந்திய மூஞ்சியுடன், ஒரு பெண்ணும், ஓர் அழகிய பையனும் அவருக்கு இருக்கிறதாமே?

ஹேஸ்டிங்ஸ்:—நாங்கள் இன்னும் அவரைப் பார்த்ததில்லை; ஆனால், நீங்கள் சொல்லியபடி அவருக்கு ஒரு பெண்ணும், பிள்ளையும் இருக்கிறதாம்.

டோனி:— நெட்டைப் பனைமரம்போல், கொக்கு மாதிரி நடந்துகொண்டு, அவலக்ஷணம் பிடித்த ஓர் வாயாடிப்பெண். அந்தப் பையன் பாவம்! நல்ல அழகு; புத்திசாலி; மட்டு, மரியாதை தெரிந்து எல்லோரும் விசுவாசிக்கக்கூடிய குணத்துடன் இருக்கிறானாம்.

மார்லோ:— எங்களுக்கு வேறுவிதமாக அல்லவோ சொன்னார்கள். அந்தப் பெண் ரூபவதி என்றும், அழகும், படிப்பும் உள்ளவளென்றும், அந்தப் பையன், கைக்கு அடங்காத, தாயார் செல்லம் கொடுத்துக் குட்டிச்சுவ ராகப்போன குறும்புள்ள குரங்கு என்றல்லவோ கேள்விப்பட்டோம்.

டோனி:— (கனைத்துக்கொண்டு) க்ஹெ-ஹ்-ஹெம்! ஐயா! அப்படியானால், இன்று இரவு ஹார்ட்காஸில் வீட்டிற்குப்போக முடியாதென்றே நினைக்கிறேன்.

ஹேஸ்டிங்ஸ்:— அதுவும் எங்கள் துரதிர்ஷ்டந் தான்.

டோனி:— அவர் வீடு வெகுதூரத்தில் இருக்கிறது; போகிற வழியோ சொல்லவேண்டியதில்லை; ஒரே சகதியும், மேடும் பள்ளமுமாக ஊழலான பாதை; ஒரே இருட்டு; பாதையும் மிகவும் அபாயமானது. [சாராயக்கடை முதலாளியிடம் கண்சிமிட்டிவிட்டு] அதாண்டா! ஹார்ட்காஸில் வீடு, க்வாக்கயர் மார்ஷில் இருக்கிறதே; அந்த இடத்தைக்காண்பி.

முதலாளி:—ஹார்ட்காஸில் வீடா! அம்மாடா! அது இருக்குமிடம் எங்கே? நீங்கள் இருக்குமிடமெங்கே? வழி பூராவும் தப்பி வந்துவிட்டீர்கள். அந்த மலை-அடிவாரத்திற்கு நீங்கள் வந்தீர்கள் அல்லவா? அந்த அடிவாரத்தில் ஸ்க்வாஷ்லேன் என்ற சந்தில் திரும்பியிருக்க வேண்டும்.

மார்லோ:— [மனதில் ஞாபகப்படுத்த திருப்பிச் சொல்லிக் கொள்கிறார்] ஸ்க்வாஷ் லேனில் திரும்பவேண்டும்; அப்புறம்—

முதலாளி:—பிறகு, நேராக, அந்தப்புரம், இந்தப்புரம் திரும்பாமல், நான்கு பாதைகள் சந்திக்குமிடம் வரவேண்டும்.

மார்லோ:— நான்கு பாதைகள் கூடும் இடத்திற்கு வரவேண்டும். பிறகு—

டோனி:— பிறகு அந்த நான்கு பாதைகளில் ஒரு பாதை வழியாகப் போகவேண்டும். அவ்வளவுதான்.

மார்லோ:—உங்களுக்கு வேடிக்கையாயிருக்கிறது போலிருக்கிறது.

டோனி:—வலது பக்கமாகப் போய் க்ராக்ஸ்கல் காமன் என்ற இடத்திற்குச்செல்லவேண்டும்; அங்கிருந்து கவனமாகக் கீழே பார்த்துக்கொண்டே, வண்டிச்சக்கரத்தின் அடையாளம் தெரிந்தால் அதை விடாமல், மரியன் வீட்டிற்குப் பக்கம் வரவேண்டும்; அங்கிருந்து வலது பக்கம் திரும்பவேண்டும்; பிறகு இடது பக்கம்; மறுபடியும் வலது பக்கமாகவந்து ஒரு இடிந்த மில் இருக்கும் வரை—

மார்லோ:— நாசமப் போச்சு. அதற்குள் உலகத்தையே சுற்றிவந்து விடலாமே.

ஹேஸ்டிங்ஸ்:-மார்லோ! நாம் என்ன செய்யமுடியும்?

மார்லோ:—இங்கு ஒன்றும் நமக்கு சரிப்பட்டு வரவில்லை: ஒருவேளை இந்த கடை முதலாளி தங்குவதற்கு இடம் கொடுக்கிறாரா, என்று கேட்போம்.

முதலாளி:—ஐயோ! நான் என்ன செய்வேன்; இங்கே ஒரே ஒரு படுக்கைதானிருக்கிறது.

டோனி:-அதற்கே மூன்று பேர் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். [இதைக் கேட்டதும் வந்தவர்கள் தவிப்பதைக்கண்டு, சற்றுயோசிப்பதுபோல் யோசித்துவிட்டு] எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. முதல்தரமான யோசனை; முதலாளி! அடுப்பங்கரையில் மூன்று நாற்காலிகளைப்போட்டு ஒரு நீள தலையணையும் கொடுத்து இவர்களை உட்காரவைத்தால் என்ன?

ஹேஸ்டிங்ஸ்:—அடுப்பங்கரையா? அங்கே என்னால் போகமுடியாது.

மார்லோ:—எனக்கு, உங்களுடைய மூன்று நாற்காலியும், தலையணையும் கண்டால் எரிச்சலாயிருக்கும்.

டோனி:—எரிச்சலாயிருக்குமா? அப்படியா சங்கதி? இங்கே பார்ப்போம்; உங்களுக்கு வேறு எவ்விதம் உதவி செய்யலாம்? இங்கிருந்து ஒருமைல் தூரம் போனால் ஒரு நல்ல ஹோட்டல் இருக்கிறது. பக்ஸ்கேட் ஹோட்டல் என்று பெயர்; இந்தப் பக்கங்களில், அது தான் நல்ல ஹோட்டல். போக சம்மதமா?

ஹேஸ்டிங்ஸ்:-அப்பாடா! நல்ல வேளையாகப்பிழைத்தோம்.

முதலாளி:—[டோனியிடம் தனிமையாக] இதென்ன கூத்து! உன் தகப்பனார் வீட்டை ஹோட்டல் என்று சொல்லியா அனுப்புகிறாய்?

டோனி:— அசடே! பேசாமலிரு. அவர்கள் கண்டு பிடித்துக்கொள்ளட்டுமே. [அவர்களிடம்] நீங்கள் இந்த வழியாக நேராகப் போனால், ரஸ்தாவின் பக்கத்தில் ஒரு பெரிய வீடு தெரியும்; வீட்டின் கதவுகளில் இரண்டு பெரிய மான்கொம்பு மாட்டப்பட்டிருக்கும். அதுதான் அடையாளம். நேரில் உள்ளேபோய், உங்களுக்கு வேண்டியதைக் கேளுங்கள்; எது வேண்டுமென்றாலும் தாராளமாய் கிடைக்கும்.

ஹேஸ்டிங்ஸ்:—ஐயா, உங்களுக்கு ரொம்ப வந்தனம்; அதைக் கண்டுபிடிக்க வழி தவறிவிடாதே?

டோனி:-சே! சே! ஆனால் ஒண்ணு. ஹோட்டல் முதலாளி நல்ல பணம் சம்பாதித்துவிட்டான்; இனிமேல் தொழிலை விட்டு விட்டு, சுகமாக அந்தஸ்துடன் வாழ வேண்டுமென்ற ஆசை அவனுக்கு உண்டு. தன்னை நீங்கள் கௌரவமாகப் பாவிக்கவேண்டுமென்று நினைத்து உங்களுடன் அடிக்கடி பேச வருவான்; தன் தாயார் ஒரு மாஜிஸ்ட்ரேட்டாக இருந்ததாகவும், அத்தை பெரிய இடத்தைச் சேர்ந்தவள் என்றும் சொல்லுவான்.

முதலாளி:—ரொம்ப உபத்திரவமாகத்தான் இருக்கும் அந்தக் கிழம் பேசும்பொழுது. இருந்தாலும், அந்த இடத்தில் உயர்ந்த சாராயமும், படுக்க நல்ல வசதியான இடமும் கிடைக்கும்.

மார்லோ:—அது இரண்டும் கிடைத்தால் போதும். அவன் எப்படியிருந்தால் என்ன? அவனுடன் பழகாமல் இருந்துவிட்டால் போகிறது. எப்படிப் போகவேண்டும்? வலது பக்கமாகவா?

டோனி:—இல்லை; இல்லை. நேராக. நானே வந்து கொஞ்சம் வழி காண்பிக்கிறேன். [வழி காண்பிக்கிறான், அவர்கள் போகிறார்கள்.]

முதலாளி:— இவ்வளவு போக்கிரித்தனமும், குறும்புத்தனமும் நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை.

[போகிறான்]

---

## இரண்டாவது பாகம்.

ஸீன்:— [ஹார்ட்காஸில் வீடு. ஹார்ட்காஸிலும் அவருடன், இரண்டு மூன்று நாகரிகமற்ற வேலைக்காரர்களும் வருகிறார்கள்,]

ஹார்ட்காஸில்:—மூன்று நாளாகச் சொல்லித்தலைத்தேனே? இப்பொழுது புரிந்ததா? எல்லோரும் சாப்பிடும்போது எவ்விதம் மேஜைப் பக்கம் நின்று பழக

வேண்டுமென்று தெரிந்ததாடா? அவரவர்கள் இடத்தில் அவரவர்கள் நிற்கவேண்டும். பட்டிக்காட்டிலே வளர்ந்தாலும், பட்டணத்தில் பழகியதுபோல் நாஸூக்காக இருக்கவேண்டும்.

எல்லோரும்:—புறிஞ்சுதுங்க; யஜமான், புறிஞ்சுதுங்க;

யஜமானன்:—அவர்கள் வரும்பொழுது, தலையை நீட்டி, நீட்டி, அவர்களை வெறிக்க, வெறிக்க, முசக்குட்டி மாதிரி பார்க்கக்கூடாதுடா?

வேலையாட்கள்:—இல்லேங்க யஜமான்; இல்லேங்க.

யஜமானன்:—ஏ டிக்கரி! நீ மேஜைக்குப் பக்கத்தில் ஜோராக நிற்கவேண்டும். களத்து வேலையை மறந்துவிடவேண்டும்; அதே ஞாபகமாக இருக்கக்கூடாது. ரோஜர்! நீ நாற்காலியின் பின்னால் நின்றுகொண்டிருக்க வேண்டும். கலப்பையை நினைத்துக்கொண்டு நிற்காதே. அப்படி நிற்கக்கூடாது ரோஜர்! கையை எடுத்துத் தொலையேன். தடியா! தலையிலே கையை வைத்துக் கொள்ளாதேடா. டிக்கிரி எப்படிக் கையை வைத்துக் கொண்டிருக்கிறான் பார். கொஞ்சம் விறைச்சாப்பலே இருக்கிறது. இருந்தாலும் பரவாயில்லை.

டிக்கரி:—அடேய்! நான் எப்படி வைத்திருக்கிறேன் பார்! நான் இராணுவத்தில் பயிற்சி செய்யப் போனபோது இப்படித்தான் வைத்துக்கொண்டேன். அப்போ.—

யஜமானன்:— டிக்கரி! நீ அவ்வளவு பேசக்கூடாது. விருந்திற்கு வந்தவர்கள் பேசும்பொழுது அவர்கள் பேசுவதை கவனமாக, மரியாதையாகக் கேட்கவேண்டும். நாங்கள் பேசுவதைக் கேட்க வேண்டுமே தவிர நீங்கள் பேச ஆசைப்படக்கூடாது. நாங்கள் குடித்தால் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். நீங்கள் குடிக்கவேண்டுமென்று எண்ணக்கூடாது. நாங்கள் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்பொழுது நீங்கள் சாப்பாட்டு ஞாபகமாகவே இருக்கக்கூடாது.

டிக்கரி:— யஜமான்! அது எங்களால் முடியவே முடியாதுங்க; இந்த டிக்கரி, யாராவது சாப்பிடுவதைக் கண்டுட்டா, நாக்கு ஊறி சாப்பிடணும்னுதான் நினைப்பான்.

யஜமானன்:— மடத்தடியா? அடுப்பங்கரையில் போய் வயிறு நிறைய தின்னு. அங்கே போய் கொட்டிக் கொள்ளேன். அதை நினைத்துக்கொண்டு பேசாமலிரு.

டிக்கிரி:— சரிங்க எஜமான், முன்னாலே போய் ஏதான்னும் தின்னுட்டு வந்துடரேன். அப்புறம் நீங்க சொன்னபடி நினைச்சிக்கிறேன்.

யஜமானன்:— டிக்கிரி! நீ ரொம்ப பேசுகிறாய். நான ஏதாவது சொன்னால் — கதை, புராணம், ஏதாவது சொன்னால், நீங்களும் வந்தவர்களுடன் சேர்ந்து அவர்களுக்குச் சமமாகச் சிரிக்கக்கூடாது.

டிக்கரி:— சரிங்க! ஆனல், அந்தத் துப்பாக்கி ரூமில் போன வாத்துக் கதையை மாத்திரம் சொல்லக்கூடா துங்க. அதே நினைக்கிற போதெல்லாம்—ஹி—ஹி—ஹி—ஹீ—எனக்கு சிரிச்சு, சிரிச்சு, வயிறெல்லாம் புண்ணுப்போவுதுங்க. இந்த 20 வருஷமாக நீங்க சொல்லும் போதெல்லாம், சிரிச்சு, சிரிச்சு,--ஹா—ஹ—ஹா—ஹா.

யஜமானன்:—ஹா—ஹ—ஹா—ஹா! அந்தக் கதை சொன்னல் சிரிப்புத்தான் வரும். அப்பொழுது சிரித்தால் பரவாயில்லை;—இருந்தாலும் ஜாக்கிரதையாகவும், வந்தவர்களை சரியாகக் கவனித்தும் இருக்கவேண்டும். யாராவது 'ஒரு கப் சாராயம் கொண்டுவா,' என்று சொன்னல் என்ன செய்வாய்? [டிக்கிரியைப் பார்த்து]—"ஐயா, இதோ ஒரு கப் சாராயம் கோண்டு வந்திருக்கிறேன்" என்று சொல்லிக் கொடுக்கவேண்டும். டிக்கிரீ! ஏன் நகரமாட்டேங்கரே.

டிக்கரி:— ஐயையோ! எல்லா சாமானும் முன்னலே மேஜைமேலே வைத்துடுங்க. என்னை யாராவது, எதையாவது கேட்டால் எனக்குப் பயமாயிருக்குமுங்க. அவர்களுக்கு வேண்டிய சாப்பாட்டுச் சாமான்கள், சாராயம், முதலிலேயே அவர்களுக்குக் கொண்டுவந்து வைத்து விட்டால், பிறகு சிங்கம் மாதிரி தைரியமாக நிற்பேன்.

யஜமானன்:— என்னடாது? ஒருவராவது நகரமாட்டார்களா?

முதல் வேலையாள்:-நான் இடத்தைவிட்டு அசையவே மாட்டேனுங்க.

**2**வது வேலையாள்:—அது என் வேலையில்லை யஜமான்.

**3**வது வேலையாள்:—எனக்கும் அதற்கும் சம்பந்தமே கிடையாதுங்க.

டிக்கரி:— அப்படின்னு, அது என் வேலையுமில் லேங்க.

யஜமானன்:— மடையர்களா! நீங்கள் இப்படி சண்டைபோட்டுக்கொண்டிருந்தால் பொழுது விடிந்து போய்விடும். வந்தவர்கள் எல்லாம் பட்டினி கிடக்க வேண்டியதுதான். ஜடங்களா இன்னொருதரம் சொல் லித்தருகிறேன்—இரு. வாசலில் ஏதோ கோச் வண்டி சப்தம் கேட்கிறது. நான் போய் பார்த்து வருகிறேன். நீங்கள் எல்லோரும் அவுங்க, அவுங்க, இடத்தில் குறிப் பிட்டபடி நிற்கவேண்டும். நான் என் சிநேகிதன் மகனை வெளிவாசற்படியில் போய் பிரியமாக அழைத்து வரு கிறேன் [போகிறார்.]

டிக்கரி:—அட கஷ்டமே! என் இடம் எங்கேடா? மறந்து போச்சே.

ரோஜர்:—எனக்கு எல்லா இடமும் ஒரே இடம் தான்.

முதல் வேலையாள்:—என் இடம் எங்கேயோ போய் விட்டது.

**2**வது வேலையாள்:—எனக்கு இங்கு இடமே இல்லை. நான் போகிறேன். [எல்லோரும் பயந்த வண்ணம் நாலா பக்கமும் அலறிப்புடைத்துக்கொண்டு பல திக்குகளில் ஓடி விடுகிறார்கள்.]

[மார்லோவும் ஹேஸ்டிங்ஸும் வருகிறார்கள். ஒரு வேலையாள் மெழுகு வர்த்தி விளக்கை எடுத்துக்கொண்டு முன் வருகிறான்.]

வேலைக்காரன்:— எஜமான்! வாங்க யஜமான்; இதுதான் வழி.

ஹேஸ்டிங்ஸ்:—அப்பாடா! நாள் முழுவதும் இவ்வளவு கஷ்டப்பட்டதிற்கு நல்ல வேளையாக, ஓர் நல்ல சுத்தமான அறையும், குளிர் அடக்கமான இடமும் கிடைத்தது. தப்பினோம்; இந்த வீடு பழசானாலும் புராதனமாகவும் நல்ல அழகுடனும் இருக்கிறது.

மார்லோ:—பெரிய வீடுகளின், விதியெல்லாம் அப்படித்தான். யார் கட்டினார்களோ, அவர்களே அதில் இருந்து தாங்கமுடியாத செலவு செய்து வாழ்ந்ததும், அவர்களையே முழுங்கிவிடும். பிறகு, அந்த வீட்டை வைத்து சம்ரக்ஷணை செய்ய முடியாமல் ஹோட்டல்காரர்களுக்கு விட்டுவிடுகிறார்கள்.

ஹேஸ்டிங்ஸ்:— நீ சொல்வது சரிதான். ஹோட்டலாய்விட்டால், நம்மைப்போல் வருபவர்கள் தானே எல்லாவற்றிற்கும் கொடுத்து அழவேண்டியிருக்கிறது. நமக்குக் கொடுக்கும் பில்லில், அவர்கள் வைத்திருக்கும் சலவைக்கல், புகைக்கூண்டு, எல்லாவற்றிற்கும் சேர்த்துத் தானே வரி போடுகிறார்கள்.

மார்லோ:—பிரயாணம் என்று கிளம்பிவிட்டால், எல்லா இடங்களிலும் பணத்தைக் கொட்ட வேண்டியது தான். நல்ல ஹோட்டலாயிருந்தால், நல்ல சாமானுக்கு அதிக விலைதான் கொடுக்கவேண்டும்; கெட்ட ஹோட்டலில் பணத்தையும் கொடுத்து பட்டினியும் கிடக்க வேண்டியதுதான்.

ஹேஸ்டிங்ஸ்:-உனக்கு இதெல்லாம் அதிக பரிச்சயம் உண்டு. ஆனால், இவ்வளவு பிரயாணம் செய்து, பல இடங்களில் பழகியும், நல்ல புத்திசாலியா யிருந்தும், உனக்குள்ள கூச்சம் மாத்திரம் ஏன் போகமாட்டே னென்கிறது, என்று தான் புரியவில்லை.

மார்லோ:-அது தான் இங்கிலீஷ்காரனுடைய தீராத நோய். அது கிடக்கட்டும். எனக்குக் கூச்சம் தெளியும் படியான சந்தர்ப்பம் ஏது? இதுவரை காலேஜிலும், ஹோட்டலிலும் வசித்ததினால், உயர்வுள்ள பெண்கள் இருக்கும் பக்கத்திலேயே இல்லாமல் கூச்சம் குறைய வில்லை. என் தாயாரைத் தவிர, வேறு ஒரு ஸ்திரீயுட னாவது பேசியதில்லை. ஆனால், நம் அந்தஸ்திற்கு மிகவும் கீழ்ப்பட்ட ஸ்திரீகளுடன் சகஜமாயிருந்திருக்கிறேன்.

ஹேஸ்டிங்ஸ்:-அவர்களுடன் ரொம்ப தைரியந்தான்.

மார்லோ:-வேலைக்காரிகளிடம் என்ன கூச்சம்?

ஹேஸ்டிங்ஸ்:— ஆமாம். யாராவது அந்தஸ்துள்ள பெண்களின் நடுவில் நீ அகப்பட்டுக்கொண்டால், உன்

மனம் கலவரம் அடைந்து, கூச்சத்தினால் உடம்புகூட நடுங்கிவிடுகிறது. அந்த இடத்தைவிட்டு ஒருவருக்கும் தெரியாமல் ஓட நினைப்பதுபோல் இருக்கிறது.

மார்லோ:—வாஸ்தவமாக ஓடவே நினைக்கிறேன்; அவ்விதம் இருக்கக்கூடாது; தைரியமாய் இருக்கவேண்டுமென்று பலமுறை முயற்சி செய்திருக்கிறேன். ஆனால், ஒரு பெண்ணின் இரு அழகிய கண்கள் என்மேல் பட்டால், கூச்சம் ஏற்பட்டு என் தீர்மானம் எல்லாம் எங்கேயோ பறந்துவிடுகிறது. என்ன செய்வது?

ஹேஸ்டிங்ஸ்:—உன் காலேஜ் சிநேகிதர்களுடனும், ஹோட்டல் வேலைக்காரிகளுடனும், பேசும் அழகிய வசனங்களில் சிறிது உபயோகப்படுத்தினாலும் போதுமே.

மார்லோ:—அவர்களுடன் எல்லாம் பேசுவதை ஒரு பொருட்டாக நினைக்கமுடியுமா? அது ஒரு பேச்சா? ஏதோ, பேசவேண்டுமே என்று, எதையாவது பேசுவேன்; எரிமலை, வால் நக்ஷத்திரம், இவைகளைப்பற்றிப் பேசுவதில் என்ன சிரமம்? ஆனால் ஓர் அழகிய யௌவனமுள்ள பெண் என்முன் வந்து நின்றால் என்ன பேசுவது? அவளே உலகில் ஓர் அபூர்வமல்லவா?

ஹேஸ்டிங்ஸ்:-இவ்விதமிருந்தால், உனக்கு எந்த ஜன்மத்தில் விவாஹம் ஆகும்? ஹா; ஹா! ஹா!

மார்லோ:-ஆகாதுதான். அரசர் குடும்பங்களிலும், கிழக்கு தேசங்களிலும், பெண்ணைப் பார்க்காமலே கலியாணம் முடிவு செய்வதுபோல் செய்தால்தான் முடியும். அவ்விதம் நிச்சயம் செய்யாமல், முதலில் காதல்

புரிவதும், அச்சமயம் அந்தப் பெண்ணின் அத்தை, பாட்டி, அம்மங்கா, எல்லோரும் வந்து சூழ்ந்துகொள்ளு வதும், அவர்கள் எதிரில் அந்தப் பெண்ணைப் பார்த்து, "அருமைக் காதலி! என்னை மணந்துகோள்வாயா?" என்று கேட்பதும், என்னால் முடியவே முடியாது. இந்தச் சங்கடம் எல்லாம் என்னால் முடியாதப்பா.

ஹேஸ்டிங்ஸ்:—உன்னைப்பார்த்தால் பரிதாபமாயிருக் கிறதே. உன் தகப்பனார், பெண்ணைப் பார்த்துவரும்படி உன்னை அனுப்பியிருக்கிறாரே. எவ்விதம் நடந்துகொள் ளப் போகிறாய்?

மார்லோ:—எல்லாப் பெண்களையும் பார்த்ததுமாதிரி தான். முதலில் தலை குனிந்து வணங்கிவிட்டு, பிறகு அவள் கேட்கும் கேள்விகளுக்கு "ஆம்" அல்லது "இல்லை" என்று பதில் சொல்லுவேன். ஆனால் அவளுடைய முகத்தை மாத்திரம் பார்க்கவே மாட்டேன். திரும்பி வந்து, என் தகப்பனார் முகத்தைத்தான், பார்ப் பேன்.

ஹேஸ்டிங்ஸ்:—இவ்வளவு அரிய நண்பர் கசந்த காதலனாயிருப்பதை நினைத்தால் விநோதமாயிருக்கிறது.

மார்லோ:—உன்னிடம் உண்மையைச் சொல்லு வதற்கென்ன? நான் இங்கு என் நலத்திற்காக வரவில்லை; உனக்கு உதவிபுரிய நினைத்தே வந்தேன். மிஸ் நெவில் உன்னை மிகவும் காதலிக்கிறாள். உனக்கோ ஹார்ட் காஸிலைத் தெரியாது. நான் வந்தால் உனக்கு அனுகூல மாயிருக்குமென்றே எண்ணிவந்தேன்.

ஹேஸ்டிங்ஸ்:—உன்னிடம் எவ்வளவு நன்றியுடன் நான் இருக்கிறேன் என்று வெளிப்படையாகச் சொல்லப் போவதில்லை. நான் இங்கு மிஸ் நெவிலின் ஐச்வர்யத்தை நாடி வரவில்லை; அவ்விதமிருக்குமானால் உன் உதவியைக் கேட்டிருப்பது அசாத்யம். அவளையே நாடிவந்தேன்; அவளும் என்னை காதலிக்கிறாள்.

மார்லோ:—நீ அல்ல அதிர்ஷ்டசாலி. உனக்குப் பெண்களைக் கவரும் சமத்தும், சாமர்த்தியமும் இருக்கிறது. எனக்கோ, (ஸ்திரீகளைப்பற்றி உன்னதமாகவே நினைத்தாலும்,) வேலைக்காரி, சிப்பந்திக்காரிகளிடம் தைரியமாகப்பேசுவதுபோல் மற்றவர்களிடம் பேசவோ, பழகவோ லஜ்ஜையாயிருக்கிறது. அவர்கள் எதிரில் என் வாய் குளறி, முகம் அசடு தட்டி விடுகிறது. அதோ பார். நாம்பேசிக்கொண்டிருப்பதைத் தடுக்க, ஹோட்டல் காரன் வந்துவிட்டான்.

[ஹார்ட்காஸில் வருகிறார்]

ஹார்ட்காஸில்:—ஐயா, வாருங்கள். உங்களுக்கு நல்வரவு கூறுகின்றேன். உங்களில் யார் மார்லோ? உங்களுக்கு ஓர் வந்தனம். மற்றவர்களைப்போல் அடுப்பங்கறையிலிருந்து வரவேற்பது என் வழக்கமில்லை. பழைய ஆசாரப்படி வாசற்படியிடம் வந்து, அன்புடன் அழைப்பதுதான் என் வழக்கம். வந்தவர்களை முதலில் உபசரித்துவிட்டு, பிற்பாடு அவர்களுடைய குதிரை, சாமான்கள், எல்லாவற்றையும் கவனிப்பேன்.

மார்லோ:—[தனித்து] நமது பெயரை வேலைக்கார னிடமிருந்து அறிந்துகொண்டுவிட்டான் போலிருக்கிறது. [அவரிடம்] உங்கள் முன் ஜாக்கிரதையையும் வந்தனோப சாரத்தையும் மெச்சுகின்றேன். [ஹேஸ்டிங்ஸிடம்] காலையிலிருந்து என் உடைகளை மாற்றவேண்டுமென் றிருந்தேன்; அவைகள் பார்க்கக்கூடிய நிலையில் இல்லை; எனக்கே வெட்கமாயிருக்கிறது.

ஹார்ட்காஸில்:—மார்லோ? நீங்கள் இவ்விடம் சிறிதும் கூச்சமன்னியில் பழகலாம்.

ஹேஸ்டிங்ஸ்:—(மார்லோவிடம்) நீ சொல்லுவது தான் சரி; முதல் முதலில் செய்துவிட்டால் அதுவே பாதி ஜயம்; ஆரம்பத்திலேயே கொஞ்சம் வெள்ளிக் காசையும் தங்கத்தையும் கக்கிவிடுவதுதான் உசிதம்.

ஹார்ட்காஸில்:—மிஸ்டர் மார்லோ! மிஸ்டர் ஹேஸ் டிங்ஸ்! இங்கு ஒரு கூச்சமும் வேண்டாம். தாராள மாக உங்களிஷ்டம்போல் இருக்கலாம். இது ஒரு "ஸ்வதந்திர ஹால்." ஆதலால், சுயேச்சையாகவே உங் களிஷ்டம்போல், மனம் போனவிதம் இருக்கலாம்.

மார்லோ:—(ஹேஸ்டிங்ஸிடம்) ஹேஸ்டிங்ஸ்! நீ சொல்லுவது சரி. இருந்தபோதிலும், ஆரம்பத்தில் சூரத்தனமாக இருந்து விட்டால், பிறகு நாம் நிராயுத பாணிகளாக இருக்க நேர்ந்துவிடும்; பின்வாங்கும்படி ஏற்பட்டாலும் ஏற்படும்.

ஹார்ட்காஸில்:—நீங்கள் "பின் வாங்குவதைப் பற்றி" பேசியது, கோமகன் மார்ல்பரோ, டினேயின் என்ற இடத்தில் முற்றுகை போட்டது எனக்கு ஞாபகம் வருகிறது. அவர் முதலில் சேனைக்கு உத்திரவிட்டார்—.

மார்லோ:—(ஹேஸ்டிங்ஸிடம்) ஹேஸ்டிங்ஸ்! இந்த சிகப்புச் சட்டையும், மஞ்சள் நிஜாரும் பொருந்துமா?

ஹார்ட்காஸில்:—அவர் உத்தரவிட்டது சுமார் 5000 படைகளுக்கு—,

ஹேஸ்டிங்ஸ்:—(மார்லோவிடம்) எனக்குப் பிடிக்கவில்லை; சிகப்பும் மஞ்சளும் எவ்விதம் பொருந்தும்?

ஹார்ட்காஸில்:—இதைச் சற்று கேளுங்கள். அவர் சுமார் 5000 இராணுவஸ்தர்கள் அடங்கிய படையைக் கூப்பிட்டு—,

மார்லோ:—(ஹேஸ்டிங்ஸிடம்) பெண்களுக்கு உடை பளிச்சென்று இருந்தால்தானே பிடிக்கும்.

ஹார்ட்காஸில்:—5000 இராணுவர்கள் வந்தார்கள்; குண்டு, துப்பாக்கி, ஆயுதங்கள், மற்ற சாமான்கள் வந்து சேர்ந்தன. அப்பொழுது மார்ல்பரோ, தன் அருகில் நின்ற ஜியார்ஜ் ப்ரூக்ஸ் என்பவரிடம்—நீங்கள்கூட அவரைப்பற்றி கேள்விப்பட்டிருக்கலாம்—அவரிடம், "ஒரு சொட்டு உதிரம் சிந்தாமல் அந்தக் கோட்டையைப் பிடிப்பேன். இல்லாவிட்டால் என் ஜமீன் எனக்குத் தேவையில்லை" என்று சொன்னார். அதனால்—,

மார்லோ:—நண்பரே! எங்களுக்குக்குடிக்க ஏதாவது முதலில் கொண்டுவந்து கொடுத்தால், முற்றுகையைப் பலமாகப்போட நாங்களும் உதவிசெய்வோம்; கொஞ்சம் "பஞ்ச்" என்ற சாராயம் கொண்டுவாருங்கள்.

ஹார்ட்காஸில்:—"பஞ்ச்சா!!" (தனக்குள்) மிகவும் கூச்சமுள்ள பையன் என்று சொன்னார்களே. இந்த அதிகாரம் புதுவிதமான கூச்சத்திற்கு அடையாளம்போ லிருக்கிறது.

மார்லோ:—ஆமாம். "பஞ்ச்," என்ற பானகம்தான். கொஞ்சம் சுடச்சுடக் கொண்டுவந்தால், நாங்கள் கஷ்டப் பட்டுவந்த பிரயாணத்திற்குச் சிரம பரிஹாரமாயிருக் கும். இங்குதான் எதுவும் தாராளமாய் கிடைக்குமே! "ஸ்வதந்திர ஹால்" அல்லவா?

ஹார்ட்காஸில்:—இந்தாருங்கள். ஒரு கப்.

மார்லோ:—(தனக்குள்) ஓஹோ! ஸ்வதந்திர ஹால், என்று சொல்லிவிட்டு கொடுக்கும்பொழுது அளந்து செட்டாகத்தான் கொடுப்பான் போலிருக்கிறது.

ஹார்ட்காஸில்:—(தானும் ஒரு கோப்பை நிறைய எடுத் துக்கொண்டு) உங்கள் மனதிற்கு ஏற்றவாறு இருக்கும் என்று எண்ணுகிறேன். சரியான சரக்குகள் சேர்த்து, என் கைப்பட ஜாக்கிரதையாக நானே தயாரித்தேன். அதை உயர்ந்ததென்று எண்ணுவீர்கள் என்றே நம்பு கிறேன். நாம், நமது பழக்கத்திற்கு அறிகுறியாகக் குடிப்போம். உங்கள் ஞாபகார்த்தமாக—; (குடிக்கிறார்).

மார்லோ:—(தனக்குள்) மஹா அதிகப் பிரசங்கிபோ லிருக்கிறது. இருந்தபோதிலும், அவனைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கலாம்; தமாஷாயிருக்கும் போலிருக் கிறது. (ஹார்ட்காஸிலேப் பார்த்து) ஐயா! உங்கள் ஞாப கார்த்தமாக—; (குடிக்கிறார்).

ஹேஸ்டிங்ஸ்:—(தனக்குள்) இவன் ஹோட்டல்காரன் என்பதை அடியோடு மறந்துவிட்டு, நமக்குச் சரிசமமாகப் பழகவேண்டுமென நினைக்கிறான்.

மார்லோ:—இந்தப் பானகம் அமிர்தமாயிருப்பதை நினைக்கும் பக்ஷத்தில், இவ்விடம் சாராயம், நல்ல வியா பாரம் கூட ஆகும்போலிருக்கிறது. அதுவும் எலெக்ஷன் சமயங்களில்—, அப்படித்தானே?

ஹார்ட்காஸில்:—நான் இப்பொழுது அதிலெல்லாம் தலையிட்டுக் கொள்வதில்லை. இப்பொழுது எலெக்ஷன் எல்லாம் ஒருவர்க்கொருவர் அதிகப் பணச் செலவன்னி யில் முடிந்துவிடுகிறது. 'சாராயம் விற்பவர்களுக்கு' எங்கிருந்து லாபம் கிடைக்கும்?

ஹேஸ்டிங்ஸ்:—ஆனால், இப்பொழுது சமூக சம்பந்த மான விஷயங்களில் நீங்கள் தலையிட்டுக் கொள்வ தில்லையோ?

ஹார்ட்காஸில்:—அந்த வம்புக்கே போவதில்லை. முன்னொரு காலத்தில், எல்லோரையும்போல நானும் சர்க்கார் செய்யும் அட்டூழியங்களை எடுத்துரைத்து, கூச்ச

விட்டுக்கூடத் தாடினேன். எவ்வளவு கத்தினல்தான் என்ன? கத்தக்கத்த, எனக்குத்தான் கோபம் அதிகம் கிளம்பியது; சர்க்கார் திருந்தும் வழியாகக் காணும். கடைசியில் 'எக்கேடு கெட்டுப் போகட்டுமே' என்று எண்ணி இருந்துவிட்டேன். ஹைதர் ஆலி ராஜ்யத்தில் இருந்தாலென்ன? இல்லே, ஆலிக்கான், ஆலிக்ரோகர், ஆண்டால் என்ன? என்று இருந்துவிட்டேன். ஐயா; உங்கள் ஞாபகார்த்தமாக—; (குடிக்கிறூர்).

ஹேஸ்டிங்ஸ்:—இப்பொழுது சுக ஜீவனம்போலிருக்கிறது!! சாப்பிட்டுவிட்டு, குடித்துவிட்டு, ஸௌக்கியமாக சிநேகிதர்களுடன் காலக்ஷேபம் பண்ணிக்கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கிறது. நல்ல, சுகமான வாழ்க்கை.

ஹார்ட்காஸில்:—ஏதோ, நானும் சோம்பலில்லாமலிருக்கிறேன். ஊர் சச்சரவுகளில் பாதியை இங்கேயே தீர்த்துவிடுவேன்.

மார்லோ:—(குடித்தபிறகு) நீங்கள் பேசுவதைப்பார்த்தால் சட்ட சபையிலுள்ள வாக்குவாதிகள்கூட தோற்றுவிடுவார்கள் போலிருக்கிறதே.

ஹார்ட்காஸில்:—ஆம் ஐயா. வாக்குவாதம் மாத்திரம் இல்லே; கொஞ்சம் தத்துவத்தையும் இடை இடையே கலந்து பேசுவேன்.

ஹேஸ்டிங்ஸ்:—அப்படியா விஷயம்! தேர்ந்த சேனாதிபதிபோல் எல்லா பக்கங்களிலும் முற்றுகை

போட்டுப் பேசுவீர்களோ? உங்கள் எதிரி, சொல்வதைக் கேட்காவிட்டால் தத்துவம் பேசுவீர்! புத்தியுடன் பேசா விட்டால் உங்கள் யுக்தியை உபயோகித்து அவனைத் தாக்குவீர்! பேஷ் பேஷ்! தத்துவ ஞானியே! உங்கள் ஞாபகார்த்தமாக—; (குடிக்கிறார்).

ஹார்ட்காஸில்:—நல்லது; ரொம்ப நல்லது: உங்களுக்கு வந்தனம். ஹா! ஹா! "சேனாதிபதி" என்ற வார்த்தையைக் கேட்டதும் இளவரசர் அருக்கியரை எதிர்த்து பெல்க்ரேட் என்ற இடத்தில் சண்டை செய்தது எனக்கு ஞாபகம் வருகிறது. சொல்லுகிறேன், கேளுங்கள்.

மார்லோ:—பெல்க்ரேட் சண்டையைப்பற்றி அப்புறம் பேசிக்கொள்ளலாம். சாப்பிடும் நேரம் வந்துவிட்டது. சாப்பிடும் வீட்டில் உங்கள் தத்துவமும், கதையும் எதற்கு?

ஹார்ட்காஸில்:—சாப்பிடவா! என்ன! (தனக்குள்) பிறர் வீட்டில் இவ்வளவு அதிகாரமா?

மார்லோ:—ஆமாம். சாப்பாடுதான் ஸார். எனக்குப் பசி எடுத்துவிட்டது. அடுப்பங்கறையில் எங்களை விட்டால் ஒரே மூச்சில் ஒழித்துவிடுவோம். அவ்வளவு பசி இருக்கிறது.

ஹார்ட்காஸில்:—(தனக்குள்) இவ்வளவு ஆவலாதி பிடித்த மனிதனை நான் பார்த்ததேயில்லை. (மார்லோ

விடம்) ஐயா! எனக்கு சாப்பாட்டு விஷயத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாது. இதெல்லாம் என் மனைவியும், சமையல்காரியும் கவனித்துக்கொள்வார்கள். நான் தலை யிடுவதில்லை; எல்லாம் அவர்கள் பொறுப்பு.

மார்லோ:—அப்படியா ஸமாசாரம். வாஸ்தவமாகவா?

ஹார்ட்காஸில்:—அதில் ஒரு சந்தேகமும் வேண் டாம். சமையல் அறையில் எது சமைக்கலாம் என்று அவர்கள்தான் பேசிக்கொண்டிருந்தார்கள். நான் அதில் கலந்துகொள்ளவில்லை.

மார்லோ:—அவ்விதமானால், அந்த ஆலோசனை சபை யில் நானும் கலந்துகொள்ளுகிறேன். நான் பிரயாணம் செய்யும் இடங்களில் எல்லாம் அவ்விதம்தான்; சாப்பாட் டின் திட்டத்தை நான்தான் போடுவேன். சமையல் காரியை இவ்விடம் கூப்பிடுங்கள். உங்களுக்கு ஆக்ஷேபணை இல்லையே?

ஹார்ட்காஸில்:—எனக்கொரு ஆக்ஷேபணையுமில்லை; ஆனால் என் சமையல்காரி பிரிட்ஜெட், ஒருவரிடமும் பேசுவதில்லை; அவளைக் கூப்பிட்டுப் பேசினால் ஒரே ரகளை செய்துவிடுவாள்; மிகவும் கோபம் உள்ளவள்.

ஹேஸ்டிங்ஸ்:—அவ்விதமிருந்தால், உங்கள் சமையல் திட்டத்தைக் கொண்டுவாருங்கள். என்ன, என்ன, எவ் வளவு மதிப்புப் போட்டிருக்கிறதென்று பார்க்கிறேன். அதைப்பொறுத்தான் என் பசியுமிருக்கும்.

மார்லோ:—(வியப்புடன் ஒன்றும் புரியாமல் நிற்கும் ஹார்ட்காஸிலை நோக்கி) என்னுடைய வழக்கமும் அது தான்.

ஹார்ட்காஸில்:—இந்த வீட்டில் உங்களுக்கு வேண்டியதைத் தாராளமாக உத்திரவிடலாம். (வேலையாளைக் கூப்பிட்டு) ரோஜர்! இன்று இரவு சாப்பாட்டுத் திட்டத்தைக் கொண்டுவா.—திட்டம் போட்டிருக்கும் என்றே நினைக்கிறேன். ஹேஸ்டிங்ஸ் சொல்லியதை நினைத்தால், என் மாமா சேனாதிபதி வாலப் சொல்லியது ஞாபகம் வருகிறது. அவர் சாப்பாடு முடிந்தபிறகு தான் சாப்பிட்டதாக நினைப்பார். அவ்வளவு சந்தேஹி.

ஹேஸ்டிங்ஸ்:-(தனிமையாக மார்லோவிடம்) எல்லாம் அந்தஸ்துள்ள மனிதர்களைப் பற்றியே பேசுகிறான். மாமா சேனைத் தலைவர்; தாயார், மாஜிஸ்ட்ரேட் என்று சொல்லுவான்போலிருக்கிறது. அது கிடக்கட்டும், சாப்பாட்டுத் திட்டத்தைப் பார்.

மார்லோ:—(சாப்பாட்டுத்திட்டம் போட்டிருக்கும் காகிதத்தைப் பார்த்த வண்ணம்) இதென்னது? முதலாவது வரிசை பரமார — இரண்டாவது வரிசை பரமார — கடைசி. ஏனையா? நாங்கள் ஒரு பட்டாளத்தை அழைத்து வந்திருப்பதாக ஞாபகமோ? இதெல்லாம் எதற்கு? ஏதோ, ஒன்று, இரண்டு சுத்தமான ஆகாரமாயிருந்தால் போதுமே.

ஹேஸ்டிங்ஸ்:—இங்கே, அதைப்படி பார்ப்போம்.

மாலோ:—(படிக்கிறார்). முதலில் பரமார: பன்றி மாமிசம், குழம்பு ;—

ஹேஸ்டிங்ஸ்:-பன்றி மாமிசத்தை குப்பையில் போடு.

மார்லோ:— குழம்பை சாக்கடையில் கொட்டு.

ஹார்ட்காஸில்:—பசிக்கு இதெல்லாம் நல்ல தேர்ந்த உணவாச்சே.

மார்லோ:—இன்னும் அநேகவிதமாக பல தினுசுகள் போடப்பட்டிருக்கிறது.

ஹேஸ்டிங்ஸ்:—அதெல்லாம் அவன் தலையிலேயே கொட்டு.

ஹார்ட்காஸில்:—(தனக்குள்) இவர்களுடைய போக்கிரித்தனம் எனக்கு ஒன்றுமே புரியவில்லையே. (அவர்களிடம்) நீங்களோ, என் விருந்தினர்கள்; வேண்டியதை வைத்துக்கொண்டு, வேண்டாததை திட்டத்திலிருந்து எடுத்துவிடுங்கள்.

மார்லோ:—(படித்துக்கொண்டே) க்ரீம், மொட்ட கோஸ்.

ஹேஸ்டிங்ஸ்:—இதெல்லாம் எங்கேயாவது தள்ளு. சொல்பமாக பசி தணிவதற்கு வேண்டியதைக் கொடுக்காமல், ஏதோ அரண்மனை விருந்திற்கு வந்திருப்பவர்களுக்கு செய்வதுபோலல்லவோ இருக்கிறது.

ஹார்ட்காஸில்:—ஐயா, உங்கள் மனதிற்கு ஏற்றதாக ஒன்றுமில்லைபோலிருக்கிறது. நீங்கள் இஷ்டப்பட்டதை அறிவித்தால், அவ்விதமே தயார் செய்யச் சொல்லுகிறேன்.

மார்லோ:—உங்கள் திட்டத்தில் கண்டிருப்பது ஒன்றைவிட ஒன்று மேன்மையாகவே இருக்கிறது. உங்களுக்குப் பிடித்ததை அனுப்புங்கள். சாப்பாட்டிற்கு இவ்வளவு போதும். எங்களுக்கு வேலையிருக்கிறது. எங்கள் சாமான்களையும், படுக்கையையும் ஜாக்கிரதையாக கவனியுங்கள்; உதறி வைக்கவேண்டும்.

ஹார்ட்காஸில்:—அதை நான் கவனித்துக்கொள்ளுகிறேன். நீங்கள் சிறிதும் கவலைப்படவேண்டாம்.

மார்லோ:—நீங்கள் கவனிப்பதா; என் சாமான்களை நானே கவனித்துக்கொள்கிறேன்.

ஹார்ட்காஸில்:—அதெல்லாம் கூடாது; நானே கவனிப்பேன்.

மார்லோ:—அதெல்லாம் வேண்டாம். [தனக்குள்] இது ஏதுடாது; மஹா உபத்திரவம் பிடித்த சனியன் போலிருக்கிறதே.

ஹார்ட்காஸில்:—ஸார்; உங்களுக்கு வேண்டிய உதவி யாவது செய்கிறேன். [தனக்குள்] இவ்வளவு போக்கிரித்தனம் நான் பார்த்ததேயில்லை.

[மார்லோவும், ஹார்ட்காஸிலும் போகிறார்கள்]

ஹேஸ்டிங்ஸ்:—[தனக்குள்] இந்த ஹோட்டல்காரனை உபசரிப்பது வெகு சங்கடமாக அல்லவோ இருக்கிறது. ஹா; அதோ வருகிறது யார்? நான் காணுவது கனவா? நனவா? நெவில் இங்கு எவ்விதம் வருகிறாள்!

[மிஸ் நெவில் வருகிறாள்]

மிஸ் நெவில்:—என் அருமைக் காதல! நாம் இருவரும் எதிர்பாராமல் சந்திக்க நேரிட்டது என் அதிர்ஷ்டத்தைக் காட்டுகிறதல்லவா?

ஹேஸ்டிங்ஸ்:—நானல்லவோ, அவ்விதம் உன்னைக் கேட்கவேண்டுமென்று இருந்தேன். ஒரு ஹோட்டலில் உன்னை சந்திப்பேனென்று நான் எவ்விதம் நினைக்கக் கூடும்?

மிஸ் நெவில்:—ஹோட்டலா! அந்தத் தவறான எண்ணம் உங்களுக்கு எவ்விதம் வந்தது? இவ்விடம் என்னைப் பாதுகாத்துவரும் அத்தையும் அவள் புருஷனுமல்லவோ வசிக்கின்றனர். யார் இதை ஹோட்டல் என்று சொல்லி விஷமம் செய்தது?

ஹேஸ்டிங்ஸ்:—என் நண்பர் மார்லோவுக்கும், எனக்கும் இந்த இடத்தை ஹோட்டல் என்று சொல்லி வழி காண்பித்தார்கள். வரும் வழியில் சிறிது தூரத்தில் ஓர் வாலிபனை சந்தித்து வழி கேட்டோம். இதை ஒரு ஹோட்டல் என்று சொல்லி, எங்களை இவ்விடம் அனுப்பினான்.

மிஸ் நேவில்:—அப்படியானால், என் அத்தை மகனின் குறும்பாகத்தானிருக்கும்; அவன் விஷமத்தைப் பற்றித்தான் உங்களுக்கு அடிக்கடி சொல்லி யிருக்கிறேனே. ஹா! ஹா! ஹா!

ஹேஸ்டிங்ஸ்:—யாரது? உன் அத்தை உனக்குக் கலியாணம் செய்துவிடுவதாகச் சொல்லிக்கொண்டிருக் கிறாளே? அதன் மூலம் நான் பயந்துகொண்டிருக்கும் அந்தப் பையனா?

மிஸ் நேவில்:—அவனைப் பற்றி நீங்கள் கவலைகொள்ள வேண்டியதில்லை. என்னை அவன் எவ்வளவு வெறுக் கிறான் என்று நீங்கள் அறிந்தால், அவனைப்போல் நல்ல பையன் கிடையாதென்றே சொல்லுவீர்கள். அது என் அத்தைக்கும் தெரியும். அதனால்தான், அவனுக்குப் பதிலாக அவள் என்னைக் காதலிக்கிறேன் என்கிறாள்; என் மனதைத் திருப்பிவிட்டதாகவும் நினைத்துக்கொண் டிருக்கிறாள்.

ஹேஸ்டிங்ஸ்:—அடே போக்கிரி! உனக்கு இவ் வளவு ஏமாற்றத் தெரிந்துவிட்டதா? என் நண்பர் இங்கு வருவதை ஆதாரமாகக்கொண்டு, நான் அவருக்குத் துணை வருவதுபோல் இந்த வீட்டிலுள்ளவர்களை அறிய வந்தேன். எங்கள் குதிரைகள் மிகவும் களைத்திருக் கின்றன. அவைகள் இளைப்பாறிய பிறகு, நீ உன் காதலனை நம்பி வருவாயானால், நம்மிருவரும் நொடிப் பொழுதில் பிரான்ஸ் தேசத்திற்குப்போய், மணம் புரிந்து மனம்போல் இருக்கலாம்.

மிஸ் நேவில்:—உங்கள் சித்தம்போல் நான் எப்பொழுதும் நடந்துகொள்ளுவேன். ஆயினும் எனக்கு என் சிறிய தகப்பனார், இந்தியா டிரெக்டராயிருந்த பொழுது சம்பாதித்து வந்த உயர்ந்த நகைகளை விட்டுவிட மனம் வரவில்லை. என் அத்தையிடம், அந்த நகைகளைக் கொடுக்கும்படிக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். என் வேண்டுகோளுக்கும் அவள் இசைந்துவிடலாமென்று தோன்றுகிறது. அவைகள் என் வசம் வந்தது, அதுவும், நானும் உங்களுடையதே.

ஹேஸ்டிங்ஸ்:—இது ஒரு லக்ஷ்யமா நமக்கு? என் காதலி எனக்குக் கிடைத்தால், அதைவிட வேறு ஐச்வர்யம் எதற்கு? உன்னையே நான் விரும்புகிறேன். நாம் புறப்படுதற்கு முன் மார்லோவிடம் இதை ஒரு வீடு என்று சொல்லவேண்டாம்; ஹோட்டல் என்றே அவன் நினைத்திருக்கட்டும்; ஏனெனில், அவன் மிகவும் கூச்சமும், வெட்கமும் உடையவன். வீடென்று அவனுக்கு உண்மையைச் சொல்லிவிட்டால், ஒருவரும் அறியாமல் உடனே கிளம்பிவிடுவான். நமது காரியம் கெட்டுவிடும்.

மிஸ் நேவில்:—அதுதான் சரி. ஆனால் அவரிடம் விஷயத்தைச் சொல்லாமலிருப்பதற்கு என்ன செய்யலாம். ஹார்ட்காஸிலின் பெண் "கேட்" இப்பொழுதுதான் உலாவிவிட்டு வருகிறாள். அதோ வருகிறாள். இந்தப்பக்கம் வாருங்கள். இங்கே; இந்தப்பக்கம்.

[ஒரு ஓரமாக இருவரும் போகிறார்கள்.]
மார்லோ வருகிறார்.

மார்லோ:—[தனக்குள்] எனக்குப் பொறுக்கவே யில்லை; இவர்களுடைய உபசரிப்பும், உபத்திரவமும். இந்த ஹோட்டல்காரன் என்னைத் தனியேவிடுவது மரியாதைக்குறைவு என்று எண்ணி என் முதுகிலேயே தொத்திக்கொண்டிருக்கிறான்; போதாததற்கு அவனுடைய மனைவியும் கூடச்சேர்ந்துகொண்டு விடமாட்டேனென்கிறாள். இன்னும் சற்று நேரத்தில் அவனுடைய குடும்பத்திலுள்ள சைன்யங்களெல்லாம் வந்துவிடும்போலிருக்கிறது. எங்களுடன் சாப்பிடவும் வேண்டுமென்கிறான். இதென்னது ஆச்சரியம்!

ஹேஸ்டிங்ஸ்:—மார்லோ. நீ மிகவும் பாக்கியசாலி; நல்ல அதிர்ஷ்டக்காரன்; எதிர்பாராத சந்தோஷமான விஷயம்! இங்கு யார் வந்திருக்கிறார்கள் என்று சொல்லு.

மார்லோ:—ஊஹூம்; புரியவில்லை.

ஹேஸ்டிங்ஸ்:—ஹார்ட்காஸிலுடைய பெண்ணும், மிஸ் நெவிலும். இவள்தான் மிஸ் நெவில். [மிஸ் நேவிலை அறிமுகப்படுத்துகிறார்.] இங்கிருந்து சிறிது தூரத்திலுள்ள இடத்திற்கு விருந்திற்கு வந்தார்களாம்; திரும்பி வீட்டிற்குப் போகுமுன் இந்த ஹோட்டலில் வேறு குதிரை வண்டி அமர்த்த இறங்கினார்களாம். ஹார்ட்காஸிலினுடைய பெண், அடுத்த அறையில் இருக்கிறாள். இன்னும் ஒரு நொடிப்பொழுதில் வந்துவிடுவாள்; என்ன அதிர்ஷ்டம்........!?

மார்லோ:—[தனக்குள்]ஏற்கனவே நான் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கிறேன். போதாக்குறைக்கு இது வேறையா?

ஹேஸ்டிங்ஸ்:—என்ன மார்லோ! நாம் மிகவும் அதிர்ஷ்டக்காரர்கள் அல்லவா?

மார்லோ:—ஆம், ரொம்ப அதிர்ஷ்டம்தான். எதிர்பாராத சந்திப்பு. ஆனால், உடைதான் மிகவும் அலங்கோலமாயிருக்கிறது. நாம் அவர்களை நாளைக்குப்பார்த்துக்கொண்டாலென்ன? அவர்கள் வீட்டிலேயே பார்க்கலாம்; அதுதான் அழகு; அதுதான் மரியாதை; நாளைக்குப்பார்த்துக்கொள்ளலாம். [கிளம்ப எத்தனிக்கிறார்.]

மிஸ்நேவில்:—பரவாயில்லை; ஐயா, இப்படி இருப்பதினால் ஒரு கெடுதலும் இல்லை. அன்னியர்கள் மாதிரி அலங்கரித்துக்கொண்டுவந்தால் அவர்களுக்குப்பிடிக்காது. மேலும், அலங்கோல உடையே உங்கள் ஆர்வத்தையும், காதலின் உணர்ச்சியையும் எடுத்து உரைக்கும். அவளுக்கும், நீங்கள் அங்கு வந்திருப்பது தெரியும். இவ்விதமே, நீங்கள் அவளைப்பார்த்தால் அவள் சந்தோஷிப்பாள்.

மார்லோ:—ஓ! நான் என்ன செய்வது! [கனைத்துக்கொண்டே] ஹெம்; ஹெம். ஹேஸ்டிங்ஸ்; நீ என்னை விட்டு எங்கும் போகக்கூடாது. எனக்கு உதவியாக இரு. ச்சே! நானும் தைர்யமாயிருக்க முடியாதா! ஹெம்.

ஹேஸ்டிங்ஸ்:—ப்.....பூ! நீ என்ன மனிதன்? முதல் முதலில் ஆரம்பிக்கும் பொழுது கூச்சமாகத் தானிருக்கும். பிறகு ஒரு கஷ்டமும் இல்லை. அவள் என்ன பெண்தானே? நீ எதற்காக பயப்படுவது?

மார்லோ:—பெண்களுக்குள், அவளைக்காணத்தான் எனக்கு பயமாயிருக்கிறது.

[ஹார்ட்காஸினுடைய பெண் "கேட்" என்பவள், உலாவச் சென்றவள் திரும்பி வருவதுபோல் அலக்ஷியமாய் வருகிறாள்.]

ஹேஸ்டிங்ஸ்:—[மார்லோவிற்கு "கேட்" என்பவளை அறிமுகப்படுத்திவிட்டு] இதுதான் மிஸ்டர் மார்லோ. மிகவும் புத்திசாலித்தனமாக இருவர்கள் சந்தித்து, — ஒருவரையொருவர் அறிந்து பழகுவீர்கள் என்று நினைக்க எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது; உங்கள் நட்பு வளருமென்றே நினைக்கிறேன்.

கேட்:—[தனக்குள்]நாணமுள்ளமுகத்தை வைத்துக் கொண்டு, கூச்சமுள்ள மனிதரையா சந்திக்கிறோம். [சற்று இருவரும் பேசாமலிருக்கிறார்கள்; மார்லோ; மனோ வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறார். அதை அறிந்து கேட், மார்லோவை நோக்கி] நீங்கள் ஸௌக்கியமாக வந்து சேர்ந்ததை நினைக்க சந்தோஷம். வரும் வழியில் மிகவும் கஷ்டப்பட்டதாகக் கேள்விப்பட்டேன்.

மார்லோ:—அவ்வளவாகக் கஷ்டப்படவில்லை. ஆம்? கொஞ்சம் சிரமம்தான்; ஆம்; நடுவில் அநேக கஷ்டங்கள் சம்பவித்தன. சிறிது கஷ்டப்பட்டோம், என்று

சொல்லுவதற்கு வருத்தமாக;—இல்லை அம்மணி; எது வாயிருந்தாலும் கஷ்டப்பட்டு சந்தோஷமாக உங்களைப் பார்க்க நேர்ந்ததிற்கு மிகவும் சந்தோஷம். ஹெம்!

ஹேஸ்டிங்ஸ்:—[மார்லோவிடம்] நீ இவ்வளது அழகாக ஒருபோதும் பேசியதே இல்லை; இம்மாதிரியாகவே பேசினல் ஜயமடைவாய்.

கேட்:—நீங்கள் என்னை ஸ்துத்யம் செய்து புகழ்ந்து பேசுகின்றீர்கள். எவ்வளவோ உன்னதமான இடங்களில் பழகிய உங்களுக்கு, இந்தக்கிராமப்புறமான ஓர் மூலையில் வசிப்பவர்களைக்காண எவ்விதம் சந்தோஷமாயிருக்கும்?

மார்லோ:—[தைரியத்தைக் கைவிடாமல்] ஆம்; நான் உன்னதமானவர்கள் வசிக்கும் இடத்தில் பழகியது வாஸ்தவம்தான். ஆனல், ஒருவருடனும் நெருங்கி ஸகஜமாய்ப் பழகியதில்லை. எல்லோரும் எவ்விதம் நடந்துகொள்ளுகிறார்கள் என்று கவனிப்பேனே தவிர, அவர்களுடன் கலந்துகொள்ளுவதில்லை.

கேட்:—அவ்விதமிருந்தால்தான், உலக அனுபவங்களை ரஸிக்கமுடியும்.

ஹேஸ்டிங்ஸ்:—(மார்லோவிடம்) பெயர் போன 'ஸிஸரோ' கூட இவ்வளவு அழகாகப் பேசினதில்லையே. இதுதான் சரி; உனக்குத்தானகவே தைரியம் வந்துவிடும்.

மார்லோ:— (ஹேஸ்டிங்ஸிடம்) ஹும்! என் பக்கத்திலேயே இரு. இரண்டொரு வார்த்தைகள் தடுக்கினால், நீ அதைப் பூர்த்திசெய்து என்னைத்திருத்து.

கேட்:—உலகத்திலுள்ளவர்கள் எவ்விதமிருக்கிறார்கள் என்று கவனித்துக்கொண்டிருந்தால், அவர்களுடைய குற்றம் தானே தென்பட்டுக்கோபம் வரும்; அது அருவருப்பான விஷயம் அல்லவா?

மார்லோ:—அம்மணீ, என்னை மன்னிக்கவும். நீங்கள் நினைப்பதுபோல் இல்லை; பிறர் தப்பித்தைக்கண்டால் எனக்குக் கோபம் வருவதில்லை; விநோதமாகவே இருக்கும்.

ஹேஸ்டிங்ஸ்:—(மார்லோவிடம்) பலே பேஷ்! பேஷ்! இவ்வளவு சமத்தாக நீ பேசியதே கிடையாது. (கேட் என்பவளைப்பார்த்து) நீங்களிருவரும் சந்தோஷித்துப் பேசிக்கொண்டிருக்கும்பொழுது நான் இடையே நின்றுகொண்டிருப்பது சரியல்ல. உங்களுக்கும் ஸங்கோஜமாயிருக்கும்.

மார்லோ:—அவ்விதமெல்லாம் நினைத்துக்கொள்ளாதே ஹேஸ்டிங்ஸ். (ஹேஸ்டிங்ஸிடம் தனித்து) என்ன ஹேஸ்டிங்ஸ்! நீ என்னை தனிமையாக விட்டுவிட்டுப் போகக்கூடாது. எவ்விதம் போவாய்? இது அழகாயில்லை.

ஹேஸ்டிங்ஸ்:—நாங்கள் இருந்தால் உங்களுக்கு எப்படியும் இடையூறாகத்தானிருக்கும். (மார்லோவிடம்)

நானும், மிஸ் நெவிலும் தனித்துப் பேசுவதற்கு விரும்புகிறோம் என்பதை நீ உணரவேண்டாமா!

(மிஸ் நெவிலும், ஹேஸ்டிங்ஸும் போகிறார்கள்.)

கேட்:—[சற்று தாமதித்து] நீங்கள் எல்லோரையும் ஆருக கவனித்திருப்பீர்களா? ஸ்திரீகள் சம்பந்தப்பட்டமட்டில் —;

மார்லோ:—(கூச்சத்தில் ஆழ்ந்தவனாய்) மன்னிக்கவும் அம்மணி; நா —, நா —, நான் —, அவர்கள் —, மேல் பிரியம் வரும்படித்தான் —, கவனித்தேன்.

கேட்:—அதுதான் அவர்களை அடையாமலிருப்பதற்கு வழி என்று சிலர் சொல்லுகின்றனர்.

மார்லோ:—ஒருவேளை இருக்கலாம். நான் அவர்களில் புத்திசாலித்தனமாகவும், குழந்தைத்தனமாக இல்லாதவர்களுடன்தான் பேசியிருக்கிறேன். எனக்குப் பேசத்தெரியவில்லை; உங்களுக்கு அலுப்பு ஏற்படுமோவென்று நினைக்கிறேன்.

கேட்:—இல்லவேயில்லை; எனக்கும் குழந்தைத்தனமாக இல்லாத பேச்சுத்தான் பிடிக்கும்; அவ்விதம் பேசினால் எந்நேரமும் கேட்டுக்கொண்டிருப்பேன். மனோ உணர்ச்சியை வெளிக்காட்டி குழந்தைத்தனமாக இருப்பவர்களுக்கு அந்தரங்கக் காதல் இராது என்றே என் அபிப்பிராயம்.

மார்லோ:—அது —, காதல் என்பது —, மனதின் ஓர் —, ஓர் வியாகூலம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக —, உம் — ..., ஏ ..., உம் ..., அ ..., உம் ...;

கேட்:—நீங்கள் சொல்லுவது புரிந்துவிட்டது. சிலருக்கு உன்னதமான உணர்ச்சியில்லாமல், அவர்கள் அது இல்லாததின் நிமித்தம், அதை இழிவாகப் பேசுகின்றார்கள்.

மார்லோ:—அப்படியில்லை நான் சொல்லுவது; நான் இன்னும் அழகாகவல்லவோ சொன்னேன். நான் சொல்லுவது என்ன ..., என்ன ..., வெ ... ன்றால் —,

கேட்:—(தனக்குள்) இந்த மஹா ஸங்கோஜியை போக்கிரித்தனமாக இருக்கிறார் என்று எவ்விதம் சொல்லமுடியும்? (மார்லோவிடம்) நீங்கள் சொல்ல ஆரம்பித்தது என்னவென்றால் —;

மார்லோ:—நான் சொல்லிக்கொண்டிருந்தது என்ன? என்னமோ தெரியவில்லையே — என்ன சொல்ல நினைத்தேன்; அடியோடு மறந்துவிட்டது.

கேட்:—(தனக்குள்) எனக்கும் ஒரேடியாக மறந்துவிட்டது. ஏன் இவ்விதம் நான் இருக்கிறேன். (மார்லோவிடம்) நீங்கள் சொல்லிக்கொண்டிருந்தது, 'இந்தக்கபடமான காலங்களில்'—; ஆம்; ஏதோ கபடத்தைப்பற்றித்தான் பேசினீர்கள்.

மார்லோ:—ஆம்; இந்தக் கபடமுள்ள உலகில் சிலர் தான் விசாரணையில் தெ ... த்தெ ... தெ... தெ ... த் ... ;

கேட்:—எனக்குப் புரிந்துவிட்டது.

மார்லோ:—(தனக்குள்) எனக்கே, நான் இவ்வளவு பேசுவது ஆச்சர்யமாயிருக்கிறது.

கேட்:—ஆம்; நீங்கள் சொல்லுவது என்னவென்றால் இந்தக் கபடமான உலகில், அந்தரங்கமாகக் கண்டித்துப் பேசும் விஷயங்களை வெளிப்படையாக எடுத்து உரைப்பதில்லை; அதுவுமன்னியில் அதைப் புகழ்ந்து பேசி பெருமை கொள்கிறார்கள்.

மார்லோ:—வாஸ்தவந்தான்; வாயினால் உன்னதமான மொழிகளை உரைக்கின்றனர்; மனதிலோ, அதைப்பற்றி சிறிதும் சிந்திப்பதில்லை. மன்னிக்கவும். நான் உங்களிடம் களைக்கத்தகும்படி பேசிவிட்டேன்.

கேட்:—அப்படி இல்லவே இல்லை; நீங்கள் பேசும் முறையில் ஓர் ஊக்கமும், ஆர்வமும், ஆனந்தமும், ஏற்படுகிறது. இவ்விதமே பேசுங்கள்; மேலும் சொல்லுங்கள்.

மார்லோ:—ஸரி, அம்மணி—, நான் சொல்லிக் கொண்டிருந்தது என்னவென்றால் —, சில வேளைகளில் மனோதைர்யமில்லாமல் —, எல்லா ... , வி ... வி ..., வி ..., வி —,

கேட்:—நீங்கள் சொல்லுவது முழுமையும் நான் ஆமோதிக்கிறேன். சில வேளைகளில் தைரியமற்று இருந்தால் எந்த விஷயங்களைப்பற்றி உன்னதமாகப் பேச வேண்டுமோ, அப்பொழுதுதான் அவஸ்தைப்படுகிறோம். நீங்கள் சொல்லுவதைப் புரிந்துகொண்டேன்? மேலும் பேசுங்கள்.

மார்லோ:—சரி; நியாயமாகப்பேசும் பக்ஷத்தில்—; அம்மணி—; அடுத்த உள்ளில் மிஸ் நெவில் நமக்காகக் காத்திருக்கலாம்: நான் அதற்குத் தடையாக நிற்பது சரியல்ல.

கேட்:—என்னிடம் இவ்வளவு அழகாக ஒருவரும் பேசியதில்லை; மேலும் சொல்லுங்கள்.

மார்லோ:—ஸரி, அம்மணி ..., நான் வந்து ..., நான் வந்து ..., அதோ அவள் கூப்பிடுகிறாள்; நீங்கள் அங்கு போகும் வரையில் கூட வரலாமா?

கேட்:—இல்லை; நீங்கள் முன் செல்லுங்கள்; நான் பின்தொடர்ந்து வருகிறேன்.

மார்லோ:—(தனக்குள்) நல்ல வேளையாக இந்த அழகிய சம்பாஷணையிலிருந்து மானத்தோடு தப்பினேம். [போகிறார்.]

கேட்:—(தனக்குள்) ஹா! ஹா! ஹா! இம்மாதிரி துளிக்கூடச் சிரிக்காமல் பேசும் சம்பாஷணை எங்கேயாவது உண்டா? என் முகத்தை அந்நேரம் வரையில்

ஏரெடுத்துக்கூடப் பார்க்கவில்லை யென்று நினைக்கிறேன். அவ்வளவு கூச்சத்துடனிருந்த போதிலும், எல்லா பொருத்தமும் இருக்கிறது: நல்ல கூர்மையான புத்தி; இருந்தென்ன? அவர் கூச்சத்தையும் பயத்தையும் கவனித்தால், புத்தியில்லா அசட்டைக்கூட மணந்துகொள்ளலாம்போலிருக்கிறது. அவரை கொஞ்சம் தைரியமாயிருக்கும்படி செய்தால், நான் சமத்துத்தான். பார்ப்போம். அப்படிச்செய்தால் அவரை மணப்பவள் எனக்கு வந்தனத்தைத் தெரிவிப்பாள். யார் அவரைக் கலியாணம் செய்துகொள்ளப் போகிருள்; அதுதான் தெரியவில்லை. நானல்லவா அது? [போகிருள்].

வேறு ஸீன்:—[டோனி, அவன் தாயார், மிஸ் நேவில், ஹேஸ்டிங்ஸ், எல்லோரும் வருகிருர்கள்].

டோனி:—நெவில்! என்னை ஏன் இவ்விதம் துரத்திக் கொண்டே வருகிருய்? உனக்கு இப்படியிருக்க சிறிதும் வெட்கம், மானம் இல்லையா?

மிஸ் நேவில்:—என்ன அத்தான்! நீ எனக்குச் சொந்தந்தானே? பேசினுல் என்ன குற்றம்?

டோனி:— ஏ! நீ எப்பேர்ப்பட்ட சொந்தமாக வேண்டுமென்று நினைக்கிருய் என்று எனக்குத் தெரியுமே. அதெல்லாம் முடியாதம்மா. முடியவே முடியாது

கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன். இப்பொழுது இருக்கும் சொந்தமே போதும்; இன்னும் நெருங்கிய பந்துத்வம் வேண்டவே வேண்டாம்.

[ அவன் ஓட, அவளும் துரத்திக்கொண்டு காதலனை பின்பற்றிப் போவதுபோல் போகிருள்].

டோனி தாயார்:—ஹேஸ்டிங்ஸ்! நீங்கள் பேசுவதைக் கேட்க உத்ஸாகமாயிருக்கிறது. எல்லாவற்றையும் விட, எனக்கு லண்டனைப் பற்றியும், அதிலுள்ள நாஸூக்கு; பேஷன் முதலியவற்றைப் பற்றியும் கேட்கப் பிடிக்கும், அங்கு நான் போனதே கிடையாது.

ஹேஸ்டிங்ஸ்:— என்ன! ஆச்சர்யமாயிருக்கிறதே! நீங்கள் போனதே கிடையாதா? நீங்கள் பேசுவதையும், பழகுவதையும் கவனித்தால் லண்டனிலுள்ள முக்கிய ஸ்தலங்களாகிய அரண்மனைப் பக்கங்களிலும், பிரபுக்கள் வசிக்கும் இடங்களிலும் வாழ்நாள் முழுவதும் கழித்த மாதிரித் தோன்றுகிறதே.

டோனி தாயார்:—ஓ! நீங்கள் என்மேலுள்ள பிரியத்தினல் அவ்விதம் சொல்லுகிறீர்கள். கிராமத்தில் பழகுபவர்களுக்கு நாஸூக்கு எங்கிருந்து வரப்போகிறது? 'டவுன்' என்றால் எனக்கு உசிர்; அதைப்பற்றியே பேசிக்கொண்டிருப்பேன். அதனல்தான் சுற்றிலும் இருக்கும் பட்டிக்காட்டு ஜனங்களைவிட நான் தேவலே; இருந்தாலும், பாந்தியன், கிரோடோ நந்தவனம் முதலிய பிரபுக்கள் வசிக்குமிடமான இடங்களில் லண்டனில்

போய்ப் பழகாவிட்டால் நாகரிகம் எவ்விதம் வரும்? எனக்கு லண்டனைப்பற்றி நேரில் தெரியாவிட்டாலும் இரண்டாம் பக்ஷமாக வேறு எவ்விதமாவது தெரிந்து கொள்ளுவேன். அங்கிருந்துவரும் "வம்புப் பத்திரிகை" யைப்பார்த்து, அங்குள்ளவர்கள் பேசுவதின் தோரணை யையும், பேஷனையும் கற்றுக்கொள்ளுவேன். அது கிடக்கட்டும்; என் தலைக்கட்டைப்பார்த்தீர்களா? எவ்வளவு ஜோடனையாக அலங்கரித்துக் கொண்டிருக்கிறேன். பாருங்கள்; ஹேஸ்டிங்ஸ்; எப்படியிருக்கிறது?

ஹேஸ்டிங்ஸ்,— அழகும், வன்மையும் பொருந்தி யிருக்கிறது. யார் இவ்வளவு விமரிசையாக அலங்கரித் துக்கொள்ள பாடம் கற்பித்தது? பிரெஞ்ச் தேசத்தவரா?

டோனி தாயார்:— அதெல்லாமில்லை. போன வருஷத்திய "ஸ்திரீகளின் ஞாபகக் குறிப்பு" என்ற குறிப் புப்புத்தகத்தில் இருந்த படத்தைப் பார்த்துக் கற்றுக் கொண்டேன்.

ஹேஸ்டிங்ஸ்:— அப்படியா? இவ்வளவு நேர்த்தியாக அலங்கரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தால், நீங்கள் மாத்திரம் டான்ஸ் சபைக்கு லண்டனுக்கு வந்தால், உங்க ளுடைய தலை அழகைப் பார்க்கவரும் கூட்டம் சொல்லி முடியாது.

டோனி தாயார்:— இருகுலேஷன் ஆரம்பித்த காலத் திலிருந்து சொற்பமாக அலங்கரித்துக் கொள்ளுபவர்கள் யார்? இந்தக் காலங்களில் கொஞ்சம் பகட்டாகத்தான்

UNIVERSITY LIBRARY

இருக்கவேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் எவர் நம்மை லக்ஷியம் பண்ணுவார்கள்?

ஹேஸ்டிங்ஸ்:— (தலை வணங்கிவிட்டு) உங்களுடைய அழகை எந்த உடையும் எடுத்து உரைக்கும். நீங்கள் எவ்விதம் அலங்கரித்துக்கொண்டாலென்ன?

டோனி தாயார்:— ஆமாம்; கர்நாடகமான ஹார்ட் காஸில் எனக்குப் புருஷனாக அமைந்திருக்கும்போது எவ்விதம் உடுத்திக்கொண்டால்தான் என்ன பிரயோஜனம்? நான் எவ்வளவு, தொண்டைத்தண்ணி வற்றக் கத்தினாலும், அந்தக் கர்நாடகம், கர்நாடகம்தான். தலைக்குப் பொய் மயிர் வேண்டாமென்றால் கேட்பதில்லை; லார்ட் பேட்லீ மாதிரியாக தலையை நாஸுக்காக வைத்துக்கொள்ளக் கூடாதோ? சொன்னால் கேட்டாத்தானே?

ஹேஸ்டிங்ஸ்:—நீங்கள் சொல்லுவது நியாயம்தான். ஆனால், பெண்களில் அவலக்ஷணமும், புருஷர்களுக்குள் வயோதிகமும் கிடையாது என்று சொல்வார்களே.

டோனி தாயார்:—நான் என் புருஷனிடம் பொய்த் தலை மயிர் வேண்டாமென்றதற்கு அவர் என்ன பதில் சொன்னார் தெரியுமா? விஷமமாகச்சிரித்துக்கொண்டே, "ஓஹோ! அந்தப்பொய்மயிரை நான் எடுத்துவிட்டால் அது உனக்கு உபயோகப்படுமென்று நினைக்கிறாயோ" என்று என்னைப் பார்த்துக் கேட்டார்.

ஹேஸ்டிங்ஸ்:— அப்படியா சொன்னார். என்ன அநியாயம்? ஆனால், உங்கள் தலைக்கு எதுதான் பொருந்தாது? எதையும் அணியலாம். அழகாகவே இருக்கும்.

டோனிதாயார்:—அது கிடக்கட்டும். ஹேஸ்டிங்ஸ்! டவுனில் எவ்வளவு வயதை அந்தஸ்தாக நினைப்பார்கள்?

ஹேஸ்டிங்ஸ்:—சிறிது காலத்திற்குமுன் நாற்பது வயதை தக்க பால்யவயது என்று நினைத்தார்கள்; இப்பொழுது நாற்பதை, ஐம்பது என்று உயர்த்தப் போவதாகக் கேள்விப்பட்டேன்.

டோனிதாயார்:—வாஸ்தவமாகவா!! அவ்விதம் ஏற்படுத்தினால் என் வயது மிகவும் இளம் வயதாகத் தோன்றுமே.

ஹேஸ்டிங்ஸ்:—40 வயதிற்கு முன், ஒரு ஸ்திரீயும் இந்தக் காலத்தில் நகை போட்டுக்கொள்வதில்லை.

டோனிதாயார்:— என் மருமகள் மிஸ் நெவில், அடுத்தாற்போல், பெரிய கிழவி மாதிரி நகை போட்டுக் கொள்ள ஆசைப்படுகிறாள்.

ஹேஸ்டிங்ஸ்:—உங்கள் மருமகளா அவள்? அவளுடனிருந்த இன்னொரு சிறுவன் யார்? உங்கள் தம்பியா?

டோனிதாயார்:— என் மகன். அவர்கள் இருவரும் கலியாணம் செய்துகொள்ளப் போவதாகப் பேசிக்கொள்ளுகிறார்கள்; அவர்கள் கொஞ்சி விளையாடுவதைச் சற்று

கவனியுங்கள். அதற்குள், புருஷன் மனைவி மாதிரி, ஒரு நாளைக்குள் பத்துத் தடவை சண்டை போட்டுக்கொள்ளுகிறார்கள். [டோனியும் மிஸ் நேவிலும் வருவதைப் பார்த்து] என்னப்பா டோனி! குழந்தே! அவளுடன் என்ன கொஞ்சிப் பேசினாய்?

டோனி:—கொஞ்சவுமில்லை; குலாவவுமில்லை; என்னை இவ்விதம் துரத்திக்கொண்டு வருவது மஹா உபத்திரவமாயிருக்கிறது. வீட்டில் தங்குவதற்குக் கூட இடம் அகப்படாமல், குதிரை லாயத்திற்குத்தான் ஓடவேண்டும்போலிருக்கிறது.

டோனி தாயார்:—நெவில்! அவன் அப்படித்தான் சொல்லுவான்; கவலைப்படாதே. உனக்குப் பின்னால் உன்னைப்பற்றிப் புகழ்ந்து வேறு விதமாகப் பேசுகிறான்.

மிஸ்நேவில்:—எனக்குத் தெரியுமே, அவர் அந்தரங்கம்; அந்தரங்கமாக வெகு விசுவாசம். எல்லோருக்கும் முன்னால் கோபித்தும், ஒளி மறைவாக மன்னிப்புக் கேட்டும், என்னைப் புகழ்ந்த வண்ணமுமாக இருக்கிறார். அது தெரியுமா?

டோனி:—அது —, சுத்த —, கலப்பில்லாத —, அபாண்டமான —, ஸஹிக்க முடியாத —, பொய்.

டோனி தாயார்:—ஆமாம்; அவன் ஸாகஸக்காரன்; கபடமாக, தந்திரமாக இருக்கிறான். ஹேஸ்டிங்ஸ்! அவர்கள் எவ்வளவு ஒத்திருக்கிறார்கள்? பாருங்கள் முகஜாடை,

கூட ஒரே மாதிரி இருக்கும்போலிருக்கிறது. ஏறக் குறைய ஒரே உயரம். டோனி, இங்கே வா. நீயும், நெவிலும் சேர்ந்து நில்லுங்கள்; யார் உயரம் என்று ஹேஸ்டிங்ஸ் பார்க்கட்டும்.

டோனி:—(நேவிலுடன் சேர்ந்து நின்று அளப்பதுபோல் அவள் தலையில் படீரென்று மோதிக்கொண்டே) என்னிடம் இனி இந்தச் சேஷ்டையெல்லாம் வேண்டாம்.

மிஸ்நேவில்:—அப்பாடீ! என் மண்டை நொறுங்கி விட்டது.

டோனிதாயார்:—(டோனியைப் பார்த்து) ஏ! காண்டா மிருகம்! நீ ஒரு மனுஷனுட்டமா? உனக்கு இப்படி நடந்துகொள்ள வெட்கமில்லையா?

டோனி:— நான் மனிதனுயிருக்க வேண்டுமானால் என் இஷ்டப்படி விடு; ஓஹோ! என்னைக் கழுதையாக அடிக்க இனிமேல் முடியாது.

டோனி தாயார்:—நன்றி கெட்ட கழுதை! இதற்கா, இவ்வளவு நான் கஷ்டப்பட்டேன், குழந்தை முதற் கொண்டு உன்னைத் தாலாட்டி, தோளில் சுமந்து, கொஞ்சிக்குலாவி, வளர்த்ததின் பயனு இது? கொஞ்சம் உடம்பு படுத்திஞல்கூட நான் கவலைப்பட்டு அழுவேனே.

டோனி:—அழவேண்டியது நியாயம்தான். குழந்தை முதற்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகச்சலுகைகொடுத்து என்னைக் குட்டிச் சுவராகப் பண்ணியது நீ தானுமே?

கொடுத்த சலுகையெல்லாம் போதும்; இனி வேண்டாம்; என்னை இனிமேல் பைத்தியமாக அடிக்கவே முடியாது.

டோனி தாயார்:—அடே சனியனே! உன் நலத்திற்குத்தானேடா இவ்வளவு பாடுபட்டேன்.

டோனி:—என்னையும், என் நன்மையையும் ஒன்றும் செய்யாமல் சும்மாவிட்டாலே போதும். நல்லது வந்தால் தானே வரட்டும்; சும்மா கிளறி, குத்திக் குத்தியா வரப் போகிறது. நான் குடித்துவிட்டுச் சந்தோஷமாயிருக்கும்போது இம்மாதிரியெல்லாம் பிராணனை வாங்காதே.

டோனி தாயார்:—பொய் ஏண்டா சொல்லுகிறாய்? நீ குடித்து நான் பார்த்ததேயில்லையேடா. சரி, எங்கேயாவது தொலை. கண்ட நாய்கள் படுத்திருக்கும் இடத்திற்கும், சாராயக் கடைக்கும் போய் ஒழிந்து போ. இந்த நன்றி கெட்ட நாய் குலைப்பதைப் பார்க்கப் பிடித்தால்தானே.

டோனி:—அம்மா! நம்மிருவரில் நீ கத்துவதுதான் மூர்க்கத்தனமாயிருக்கிறது.

டோனி தாயார்:—இப்படி எங்கேயாவது உண்டா? என் உயிரை எடுத்துவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பான்போலிருக்கிறது.

ஹேஸ்டிங்ஸ்:—அம்மா! நான் அந்தச் சிறுவனிடம் பேசி, உங்களிடம் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டும்

என்று சொல்லி, அவன் கடமை என்ன வென்று சொல்ல முடியுமா என்று பார்க்கிறேன்.

டோனி தாயார்:—சரி; நான் போகிறேன். நெவில்! என் கண்ணு! நீ என்னோடு வா அம்மா. ஹேஸ்டிங்ஸ்? நீங்களே நேரில் நான் படும் கஷ்டங்களைப் பார்த்தீர்கள்ளல்லவா? நல்ல அழகுள்ள, சமத்தான, ஆனால், அடங்காப் பிடாரியான குழந்தையின் கையில் அகப்பட்டுக் கொண்டு தவிக்கிறேன். (அழுது கொண்டே, நெவிலை அழைத்துக் கொண்டு போகிருள்.)

[அவள் போனதும், டோனி பாடுகிறான்.]

டோனி:— "ரிங்க டில்லோ டீ;
"ரிங்க டில்லோ டீ"

பாவாயில்லை; அவள் அழட்டும். அழுதால் அவளுக்குப் பொருத்தமாயிருக்கும். அவளும், அவளுடைய சகோதரியும் ஒரு புத்தகத்தைப் படித்துவிட்டு ஒரு மணி நேரம் அழுவதைப் பார்த்திருக்கிறேன். அவர்களை "ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டதற்கு "புத்தகம் நன்றாயிருக்கிறது; அழுகை வருகிறது." என்று சொன்னார்கள். "அழுகை வர, வர, அதிகம் படிப்போம்" என்றும் சொன்னார்கள். அதனால் அவர்கள் அழுதால்தான் சந்தோஷமாயிருப்பார்கள். அதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள்.

ஹேஸ்டிங்ஸ்:—ஆனால் உங்களுக்கு ஸ்திரீகளைக் கண்டால் பிடிக்காதோ? நீங்கள் அவர்களிடம் அன்புடன் இருக்கமாட்டீரோ!

டோனி:—அப்படித்தான்.

ஹேஸ்டிங்ஸ்:—உன் தாயார் உனக்காக தேர்ந்தெடுத்த பெண்ணிடம் கூடவா? என் மனதிற்கு அந்தப் பெண் மிகவும் அழகு வாய்ந்து அமரிக்கையுடன் இருப்பதாகத்தோன்றுகிறதே.

டோனி:—உங்களுக்கு அவ்விதம்தான் தோன்றும். அவளைப்பற்றி எனக்குத் தெரிந்த அளவு உங்களுக்குத் தெரியாதல்லவா? அவளைப்பற்றி எனக்கு ஒவ்வொரு அணுவும் தெரியும்; இந்த உலகத்தில் அவளைப்போல் உள்ள நட்டுவாக்களி கிடையவே கிடையாது. அப்பா! என்ன சேஷ்டை!

ஹேஸ்டிங்ஸ்:—(தனக்குள்) காதலன் முன், பெண்ணைப்பற்றி வர்ணனை ரொம்ப நன்றாயிருக்கிறது.

டோனி:—எனக்கு அவளை இவ்வளவு உயரத்தி லிருந்து தெரியும். [கையினுல் உயரத்தைக் காண்பிக்கிருன்] புதருக்குள் உள்ள முயலுக்கும், சிறு கழுதைக் குட்டிக்கும் கூட அவ்வளவு விஷமம் தெரியாது.

ஹேஸ்டிங்ஸ்:—எனக்கு என்னமோ புத்திசாலித் தனமாகவும், சாதுவாகவும் இருப்பதாகத் தோன்றுகிறதே.

டோனி:—ஆஹா; யாராவது இரண்டு மூன்று பேர்கள் இருந்தால் பரம சாதுதான்; தனிமையாக இருக்கும்பொழுது பன்றிக்குட்டி உறுமுவதைவிட, கேவலமாக உறுமும்.

ஹேஸ்டிங்ஸ்:—அவளிடம் இருக்கும் ஓர் அமரிக்கை யான குணம் என் மனதைக் கவருகிறதே.

டோனி:—அது சரி; அவளை சற்று அடக்கிப் பாருங்கள்; கை, கால், இவைகளை உதறிக்கொண்டு, உங்களை சாக்கடையில் உதைத்துத் தள்ளுவாள்.

ஹேஸ்டிங்ஸ்:—எவ்விதமிருந்தால் என்ன? அவள் நல்ல சௌந்தர்யமும் அழகும் பொருந்தியவள் அல்லவா?

டோனி:—ஆமாம்; அழகு. பௌடர் அழகுதான்; வேறொன்றும் இல்லை. ஐயோ! என்ன அழகு வேண்டி யிருக்கிறது! கன்னங் கரேலென்று நாகப்பழம் மாதிரி இரண்டு கறுப்புக் கண்கள்; தலகாணி மாதிரி இரண்டு கன்னம். அவளை அழிச்சால் இரண்டுபேர் பண்ணலாமே. நல்ல அழகு! அப்படிப் பார்த்தால் வேலைக்காரி பெட் பவுன்சர்கூடத்தான் அழகு.

ஹேஸ்டிங்ஸ்:—ஆனால் நீ அவளை கலியாணம் செய்து கொள்ளாமல், வேறு யாராவது மணந்துகொண்டால் சந்தோஷமாயிருப்பாயா?

டோனி:—அப்பா............டா.!

ஹேஸ்டிங்ஸ்:—அவனுக்கு உன் நன்றியைச் செலுத்துவாயா?

டோனி:—அதற்கென்ன சந்தேகம்? ஆனால் எனக்கு அப்பேர்ப்பட்ட நண்பன் எங்கிருந்து கிடைப்பான்? எவன் அவளைக் கல்யாணம் செய்துகொள்ளுவான்!

ஹேஸ்டிங்ஸ்:—என்னைக் குறித்துத்தான் சொல்லிக் கொண்டேன்; அந்த நண்பன் நான்தான். நீ மாத்திரம் உதவிசெய்தால், அவளை பிரான்ஸ் தேசத்திற்கு அழைத்துப்போய்விடுவேன்; பிறகு அவள் உன் வழிக்கு வராமல் பார்த்துக்கொள்ளுகிறேன்.

டோனி:—உங்களுக்கு ஒத்தாசையா? அதென்ன அவ்விதம் கேட்கிறீர்கள்? என் தேகத்தில் இரத்த ஓட்டம் இருக்கும்வரையில் உங்களுக்கு உதவி செய்யத் தயார். ஒரு வண்டியையும், சிட்டாகப் பறக்கக்கூடிய குதிரைகளையும் ஒரு நொடிப்பொழுதில் அனுப்புகிறேன். மேலும், கனவில்கூட கிடைக்கும் என்று நினையாத மிஸ் நெவிலின் நகைகளைக்கூட அனுப்புகிறேன்.

ஹேஸ்டிங்ஸ்:—உன்னைப்போன்ற சமத்து எங்கேயாவது உண்டா? எனக்கு மிகவும் உன்னைப் பிடித்திருக்கிறது.

டோனி:—கவலைப்படாதீர்கள்; நீங்கள் கிளம்புவதற்கு முன் என் சமர்த்தைப் பூராவும் தெரிந்துகொள்ளுவீர்கள்.

பாடுகிறான்:—

பலே பேஷ்; ; பலே பேஷ்;
எனக்குப் பயமில்லை,
சத்தத்தைக் கண்டு பயமில்லை;
குண்டு கர்ஜனைக்குப் பயமில்லை.

[இருவரும் போகிறார்கள்.]

## மூன்ருவது பாகம்.

ஹார்ட்காஸில் தனியே வருகிருர்.

ஹார்ட்காஸில்:—(தனக்குள்) எனது நண்பர் ஸர் சார்லஸ், தன் மகன் மார்லோவைப்போல் பரம சாது எங்கும் கிடையாதென்று சிபார்சு செய்து அனுப்பினுரே; இதன் அர்த்தம் என்ன? அவனை கவனித்த மட்டில், உலகத்தில் அவ்வளவு வாயாடியாகவும், அதிகப் பிரசங்கி யாகவும் வேறு ஒருவரும் இருப்பது அஸாத்தியம் என்றே தோன்றுகிறது. அடுப்பங்கரையில் ஒரு ஈஸி செயரைப் போட்டுக்கொண்டு காலை நீட்டிப் படுத்துக்கொண்டான்; கம்ரா உள்ளில் பூட்டை கழட்டிப் போட்டுவிட்டு, என்னைப் "பார்த்துக்கொள்," என்று கட்டளையிட்டான். என் பெண்ணிடம் எவ்விதம் நடந்துகொண்டானே தெரியவில்லை; இவ்விதமெல்லாம் இருந்தால், அவளுக்குப் பிடிக்காதே.

[கேட் சாதாரண உடை தரித்து வருகிருள்.]

ஹார்ட்காஸில்:-என்ன கேட்? என்ன ஸமாச்சாரம்; ஏது! சொன்னபடி உடையை மாற்றிக்கொண்டுவிட்டாயே. அதற்கு அவச்யம் ஏற்படவில்லை.

கேட்:—உங்கள் உத்திரவைக் கீழ்ப்படிந்து நடக்க மிகவும் பிடிக்கும்; அது சரியா, தப்பா, என்றுகூட நினைக்கமாட்டேன்.

ஹார்ட்காஸில்:—சில வேளைகளில் தப்பிதமாகவே சொல்லிவிடுகிறேன்; அதுவும், இன்று உன்னைப் பார்க்க வந்திருக்கும் பையனை மிகவும் "ஸாது," "கூச்சமுள்ளவன்," என்று சொல்லிப் புகழ்ந்தேன்.

கேட்:—நீங்கள் முதலில் வர்ணித்தபொழுது மிகவும் அபூர்வமான மனிதர் என்றே எண்ணினேன்; நேரில் சந்தித்ததும், பன்மடங்கு நீஙகள் சொல்லியதைவிட உயர்வாகவே இருந்தது.

ஹார்ட்காஸில்:—என் ஜீவதிசையில் இம்மாதிரி கண்டதேயில்லை; அவன் செய்ததை எல்லாம் நினைத்தால் தலை சுழல்கிறது; ஒன்றுமே புரியவில்லை.

கேட்:—நானும் அம்மாதிரி பார்த்ததில்லை; உலக அனுபவம் தெரிந்து, எல்லா விஷயங்களும் அறிந்தவராயிருக்கிறார்,

ஹார்ட்காஸில்:—ஆம்; இதெல்லாம் பல ஊர்களில் பிரயாணம் செய்ததின் பலன். பிரயாணம் அடிக்கடி செய்பவன் 'கூச்சமுள்ளவனாய்' இருப்பான் என்று நினைத்தது, என் முட்டாள்தனம். நல்ல வேஷக்காரனாயிருப்பான் போலிருக்கிறது.

கேட்:—சர்வ சாதாரணமாக இருப்பவர்போல் தோன்றுகிறதே.

ஹார்ட்காஸில்:—கெட்ட சகவாஸமும், கூத்தாடிகளின் பழக்கமும் இருந்தால், வேறு எவ்விதமிருக்க முடியும்?

கேட்:—என்ன அப்பா, இவ்விதம் பேசுகிறீர்கள்? கூத்தாடிகளின் பழக்கமிருந்தால்—, இவ்வளவு வெட்கம்—; கூச்சமுள்ள தோற்றம்—; பேசும்பொழுது ஓர் கலவரம்—;

ஹார்ட்காஸில்:—யார் தோற்றம்? எவருடைய வெட்கம்? யாரைப்பற்றிப் பேசுகிறாய்?

கேட்;—மார்லோவைப் பற்றித்தான். அவரைக் கண்டதும், அவருடைய நாணமும், வெட்கமும் என் மனதைக் கவர்ந்தன.

ஹார்ட்காஸில்:—அவ்விதமிருந்தால், உன் முதல் பார்வை உன் கண்ணை மூடிவிட்டிருக்கும்; எனக்கு அவனை முதல் முதல் சந்தித்தும், இவ்வளவு போக்கிரித் தனமுள்ளவனை, முன் பார்த்ததில்லை என்றே தோன்றியது.

கேட்:-நிஜமாகவா? கேலி பண்ணுகிறீர்களா என்ன? இவ்வளவு கூச்சமுடையவரை நான் பார்த்ததேயில்லை.

ஹார்ட்காஸில்:— உண்மையாகவா சொல்லுகிறாய்? அவனைப்போல் அகம்பிடித்து, அலக்ஷ்யமாக நடந்து கொள்ளும் ஜந்துவை என் ஜீவதிசையில் கண்டதே கிடையாது. புல்லி, டாஸன், எல்லோரும் போக்கிரித்தனமாக இருப்பதற்கு இவனிடம் பிச்சை வாங்கவேண்டும்.

கேட்:—இதென்ன விநோதம்? என்னைக் கண்டதும் தலை குனிந்து வணங்கி, பிறகு, குனிந்த தலை நிமிராமல் கூச்சத்தினால் திக்கிக்கொண்டே பேசினார்; குனிந்த தலை நிமிரவேயில்லை.

ஹார்ட்காஸில்:—என்னைப் பார்த்ததும், இந்த வீட்டு யஜமானன் மாதிரி தடபுடலாக அதட்டினான்; எனக்குக் கோபம் வந்து ரத்தம் கொதிக்கும்படி நடந்துகொண்டான்.

கேட்:—என்னுடன் மட்டும் மரியாதையாகவே நடந்து கொண்டார்; தற்காலத்துப் பகட்டான பழக்கங்களையும், நடத்தைகளையும் கண்டித்துப் பேசினார். சிரிக்காத பெண்களைப் பிடிக்கும் என்று புகழ்ந்து பேசினார்; தனக்குப்பேசத்தெரியவில்லை என்று சொல்லி அடிக்கடி மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். என்னை விட்டுப் போகும்பொழுது 'அம்மணி, இனி உங்களைத் தாமதிக்கும்படி செய்வது பிசகு' என்று மரியாதையுடன் தலை வணங்கிச் சொன்னார்.

ஹார்ட்காஸில்:—என்னிடம் பிறந்தது முதற் கொண்டு பழகியது போல் பேசினான்; நினைத்தபடியெல்லாம் கேள்விகள் கேட்டு, அதற்குப் பதில் சொல்லுவதைக்கூட லக்ஷ்யம் செய்யாமல் மேலும் மேலும் கேட்டான். நான் அழகாகப் பேசும்போது தான் சமத்தாகப் பேசுவதாக நினைத்து புதிர் போட்டுப் பேசினான்; நான் மார்ல்பரோ கதையை ரஸித்துச் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது குறுக்கே, "உங்களுக்கு "பஞ்ச்" என்ற சாராயம் தயாரிக்கத் தெரியுமா?" என்று கேட்டான். ஆமாம், வாஸ்தவமாக! உன் தகப்பனாரை இவ்விதம் கேட்டான்.

கேட்:—நம்மில் ஒருவர் அவரைப் பற்றித் தவறுதலாக நினைத்துக்கொண்டிருக்கிறோம்.

ஹார்ட்காஸில்:—இம்மாதிரி இருந்தால், உன்னை அவன் மணந்துகொள்வதற்கு, சம்மதிக்கவேமாட்டேன்.

கேட்:—அவர் அழுமூஞ்சியாயிருந்தால் ஒரு நாளும் கலியாணம் செய்துகொள்ளமாட்டேன்.

ஹார்ட்காஸில்:—நம்மிருவர் மனமும் ஒரு விஷயத்தில் ஒன்றுபட்டிருக்கிறது. அவனை வேண்டாமென்பதில்.

கேட்:—ஆம்! ஆனால் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அதாவது:- 1. அவர் உங்களிடம் சற்று மரியாதையுடனும், என்னிடம் சிறிது தைர்யமாகவும்; 2. உங்களிடம் சற்று கூச்சத்துடனும், என்னிடம் அவர் காதலைத் தெரிவித்தும், இவ்விதமிருந்தால், எனக்கு என்ன சொல்லுவதென்று தெரியவில்லை. அவரைப் பரவாயில்லை என்றுதான் நினைக்கிறேன். நான் சொல்லிய நிபந்தனைகளுக்கு உட்பட்டிருந்தால், அவரை அங்கீகரிக்கலாம்.

ஹார்ட்காஸில்:—அப்படி இருந்தால்தானே? பார்த்துக்கொள்ளலாம். அதுதான் அசாத்யமாயிற்றே, எனக்கு முதல் முதலிலிருந்தே நல்ல அபிப்பிராயம் ஏற்படவில்லை. என் முதல் அபிப்பிராயம் சரியாகவேயிருக்கும்.

கேட்;— முதல் அபிப்பிராயம் அவ்விதமிருந்தாலும், பிறகு ஆராய்ந்து பார்த்தால் விசேஷ குணங்கள் வெளிப்படும்.

ஹார்ட்காஸில்:-ஆம்; பெண்களுக்கு என்னதெரியும்? ஒருவன் அழகாயிருந்தால் போதும்; பிறகு முகூர்த்தத்திற்கு உடனே நாள் பார்த்துவிடுவார்கள். முகம் பளிச்சென்றும், சௌந்தர்யமாயுமிருந்தால், அவனைப்போல் உலகில் இல்லையென்றே சொல்லிவிடுவார்கள். மனதிற்குப் பிடித்தால் எல்லாம் சரியாகவே தோன்றிவிடும்.

கேட்:—இந்த சம்பாஷணை துவங்கும் பொழுது என்னை 'புத்திசாலி' என்றீர்கள்; முடியும்பொழுது 'மூடம்' என்று பரிகசிக்கிறீர்களே.

ஹார்ட்காஸில்:— அவ்விதமில்லையம்மா; கோபித்துக்கொள்ளாதே. நீ சொல்லியபடி நம்மிருவரையும் சந்தோஷிக்கும்படி அவன் நடந்து கொண்டால், ஒருவேளை நான் சம்மதிக்கலாம்.

கேட்:—சரி; 'நம்மிருவரில்', ஒருவருடைய அபிப்பிராயம் தவறு; அதைக் கண்டு பிடிப்போமே.

ஹார்ட்காஸில்:—பாரேன்; நான் சொல்லுவதுதான் சரியாயிருக்கும்.

கேட்:—நான் சொல்லுவது தவறுதலாக இராது. பார்ப்போமே.

[இருவரும் போகிறார்கள்]

வேறு ஸீன்:—[டோனி ஒரு நகைப் பெட்டியை எடுத்துக்கொண்டு வருகிறான்.]

டோனி:-(தனக்குள்) அப்பாடா! கிடைத்துவிட்டது. நெவில் நகைகளையெல்லாம் எடுத்து வந்தேன். பாவம்! அவளுடைய நகைகளை அபகரிக்கும்படி என் தாயாருக்கு இடம் கொடுக்க மாட்டேன். அதென்ன நியாயம்? ஓ! யாரப்பா அது? நீங்களா?

[ஹேஸ்டிங்ஸ் வருகிறார்.]

ஹேஸ்டிங்ஸ்:—எவ்விதம், உன் தாயார், அந்த நகைகளை உன்னிடம் கொடுக்க சம்மதிக்கும்படி செய்தாய்? நீ நெவிலை காதலிப்பதாகச்சொல்லி, அவள் சொல்லுக்கு இணங்குவதாகப் பாசாங்குசெய்து, உன் தாயாரை ஏமாற்றினாயோ? என் குதிரைகள் சீக்கிரம் இளைப்பாறி விடும்; நாங்கள் கிளம்பத் தயாராக இருக்கிறோம்.

டோனி:—உங்கள் பொறுப்பில் சில சாமான்கள் கொடுக்கிறேன். [நேவிலின் நகைப்பெட்டியைக் கொடுக்கிறான்.] உங்கள் காதலியின் நகைகள்; சாவதானமாக வைத்துக்கொள்ளுங்கள். அதை அபகரிக்க எவரேனும் வந்தால் உயிரை வாங்கிவிடுங்கள்.

ஹேஸ்டிங்ஸ்:—அது கிடக்கட்டும்; உனக்கு இது எவ்விதம் கிடைத்தது? உன் தாயாரிடமிருந்து எவ்விதம் கைப்பற்றினாய்?

டோனி:-என்னைக்கேள்வி ஒன்றும் கேட்காதீர்கள்; நான் பதில் சொல்லமாட்டேன். என் கடித்தனத்தினுல் தான் கொண்டுவந்தேன். என் தாயார் வைத்திருக்கும் ஒவ்வொரு பீரோவுக்கும், என்னிடம் கள்ளச் சாவி இல்லாவிட்டால் நான் இப்பொழுது போகிற மாதிரி சாரயக்கடைக்கு எவ்விதம் அடிக்கடிப் போகமுடியும்? நான் என் சொத்தைத்தானே திருடுகிறேன்; அதனுல் பரவாயில்லை.

ஹேஸ்டிங்ஸ்:—இதில் என்ன திருட்டுத்தனம்? உலக வழக்கந்தானே; இதில் ஒரு குற்றமுமில்லை; உன்னிடம் ஒன்றையும் ஒளியாமல் எனக்குத் தோன்றியதைச் சொன்னேன். மிஸ் நெவிலுக்கு, நீ நகைப்பெட்டியை எடுத்து வந்தது தெரியாது; உன் தாயாரைக் கேட்டுக் கொண்டிருக்கிருள்; உன் தாயார் அதற்கு இணங்கி நகைகளை எடுக்கப்போனுல், விஷயம் விபரீதமாக ஆகிவிடுமே.

டோனி:-நீங்கள் அதெற்கொன்றும் பயப்படவேண்டாம். இந்த நகைகளை பத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள். நெவில் என் தாயாரிடமிருந்து வாங்கவே முடியாது அவள் குணம் எனக்குத் தெரியும்; அவள் பல்லைப்பிடுங்கினுலும் பிடுங்கலாம்; கையிலிருந்து ஒரு சாமானையும் வாங்கமுடியாது.

ஹேஸ்டிங்ஸ்:—இருந்த போதிலும், நகைகள் களவாடிப்போயிற்று என்று அறிந்தால், அவள் நிர்த்தாளி செய்துவிடுவாளே; நினைக்கவே பயமாயிருக்கிறது.

டோனி:—அவள் கோபத்தைக் கண்டு நீங்கள் அஞ்சவேண்டாம்; நான் கவனித்துக்கொள்ளுகிறேன்; அவள் கோபமெல்லாம் சீனுவடி மாதிரியாகத்தான். நகைப்பெட்டி ஜாக்கிரதை. அதோ அவர்கள் வருகிறார்கள்.

[ஹேஸ்டிங்ஸ் போகிறார்]

[டோனியின் தாயாரும், மிஸ் நேவிலும் வருகிறார்கள்]

டோனி தாயார்:-நெவில்; என்ன அசடாயிருக்கிறாய்? நீ சொல்லுவதெல்லாம் விநோதமாயிருக்கிறது. உன்னைப் போலொத்த சிறு குழந்தைகள் நகை போட்டுக்கொள்வார்களா? இன்னும் இருபது வருஷம் கழித்து, உன் அழகு குறைந்தால் அது தெரியாமலிருக்கும்படி நகைகளை வாரிப்போட்டுக்கொள்ளலாம்.

மிஸ் நேவில்:—என்ன அத்தை! அப்பொழுது குறைவுபடாமல் செய்யும் நகையை இப்பொழுது போட்டுக்கொண்டால், என் அழகைப் பன்மடங்கு எடுத்துக் காட்டாதா?

டோனி தாயார்:—குழந்தே! உனக்கு அதெல்லாம் அவசியமேயில்லை. நீ ஒரு மழலைச் சிரிப்புச் சிரித்தால் போதுமே; ஆயிரம் நகைகள் போட்ட லாவண்யத்தைவிட அதிகமாகக் காண்பிக்கும். மேலும், இந்தக்காலங்களில் ஆபரணம் அணிவதே அநாகரிகம்; அடுத்தாற்போல் பார்; பகல் வெளிச்சம் லேடி கீப், கிரம்ப், எல்லோ

ரும் நகையா போட்டுக்கொள்ளுகிறார்கள். எல்லாநகைகளை யும் டவுனில் விற்றுவிட்டு மூஞ்சி நிறைய பவுடரையும், பேஸ்டையும் வாரிப் பூசிக்கொள்ளுகிறார்கள்.

மிஸ் நேவில்:—என்னை, நகையுடன் காதலிக்கலாம் என் காதலர். அவர் எவ்விதம் என்னை இருக்க நினைக்கிறார் என்று எப்படிச்சொல்ல முடியும்? தயவு செய்து என்னிடம் என் நகையைக் கொடுத்துவிடுங்கள்.

டோனி தாயார்:—அதெல்லாம் கிடக்கட்டும்; முதல் முதலில் நீ கண்ணாடியைப் போய்ப் பார். நக்ஷத்திரம் போல் பிரகாசிக்கும் உன் கண்களின் ஜோதியை எடுத்துக்காட்ட, மினு மினுக்கும் நகை வேண்டுமா என்று பார்த்துக்கொள். டோனி! நீ என்னப்பா சொல்லுகிறாய்? அவள் அழகை எடுத்துக்காட்ட நகைகள் போட்டுக் கொண்டால்தான் பிடிக்குமா?

டோனி:—அப்புறம் வேண்டியிருந்தாலும், வேண்டியிருக்கலாம்.

மிஸ் நேவில்:—அத்தை! அத்தை! உங்களை கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். என் நகைகளை என்னிடம் கொடுத்துவிடுங்கள்.

டோனி தாயார்:—அதென்னத்திற்கு? பழைய காலத்து நகை; கர்நாடகக் கட்டு; போட்டுக்கொண்டால் பகல் வேஷக்காரன் மாதிரி இருக்கும். மேலும், அதை எங்கே வைத்திருக்கிறேன் என்றுகூட ஞாபகமில்லை; கெட்டுப் போச்சோ, இருக்கோ, என்னமோ?

டோனி:—(தாயாரிடம் ரகசியமாக) அப்படி அவ ளிடம் அப்பவே சொல்லித் துலைப்பதற்கென்ன? சும்மா உன் உயிரை எடுக்கிறாளே. கெட்டுப்போய் விட்டது என்று சொல்லிவிடு; அப்பொழுதுதான் அவள்பேசாம லிருப்பாள். கெட்டுப்போய் விட்டது என்று நீ சொல்லு; நான் சாக்ஷி சொல்லுகிறேன்.

டோனி தாயார்:— (டோனியிடம் தனிமையாக) குழந்தே! உனக்குத்தானப்பா இவ்வளவு சிரமப்பட்டு அந்த நகைகளை வைத்திருக்கிறேன். நான் கெட்டுப் போய்விட்டது என்றால், நீ சாக்ஷி சொல்லுவாயா? நிஜ மாகவா? ஹா! ஹா! ஹா! என்ன ஆணித்தரமான யோசனை.

டோனி:-(தாயாரிடம் தனிமையாக) என்னைப்பொருத் துச் சிறிதும் பயப்படாதே. அது களவு போனதை நானே நேரில் பார்த்ததாகவே சொல்லுகிறேன்.

மிஸ் நேவில்:—அத்தை! அந்த நகைகளை ஒரே ஒரு நாளைக்குக் கொடுத்தால் போதும்; ஒரு ஆசைக்கு அந்த ஆவிவந்த பூர்வீக நகைகளைப் போட்டுக்கொண்டு, உங் களிடமே பிறகு கொடுத்துவிடுகிறேன்.

டோனி தாயார்:—நெவில்! உன்னிடத்தில் உண்மையை மறைப்பானேன்? கிடைத்தால் கொடுக்க மாட்டேனா? அது எங்கேயோ காணோம்; கெட்டுப்போய் விட்டது போலிருக்கிறது? கொஞ்சம் பொறுமையோடு இரு; தானே ஒரு நாளைக்குக் கிடைத்துவிடும்.

**மிஸ்** நேவில்:—நான் இதைத் துளிக்கூட நம்பவே மாட்டேன். கெட்டுப்போவதாவது? கெட்டுப்போகும் படி வைத்துக்கொள்ளவேண்டிய நகையா? என் நகைகளை என்னிடம் கொடுக்காமலிருப்பதற்கு இது ஒரு சாஹஸமா? அது என்ன, சாதாரண விலையா? கெட்டுப் போக? அதுவும் நீங்கள் ஜவாப்தாரியாக இருக்க—;

டோனி தாயார்:—நெவில் பயப்படாதே. கெட்டுப் போனால் நான் உனக்கு உத்திரவாதமல்லவா? பதில் நகை கொடுக்கவேண்டியது நான்தானே; என் குழந்தைக்குக்கூடத் தெரியும்; எங்கேயோ கெட்டுப்போய் விட்டது. தேடிப்பார்த்தேன், காணேம்.

டோனி:-அதற்கு நானும் சாக்ஷி; அது எங்கேயோ தொலைந்துபோய்விட்டது; தேடிப் பார்த்தும் காணவில்லை. சத்யமாகச் சொல்லுகிறேன்.

டோனி தாயார்:—என்னம்மா இப்படியிருக்கே? ஒரு குழந்தைக்குப் பொறுமை வேண்டாமா? ஆஸ்தி போனாலும் பொறுமையை இழக்கலாமோ? என்னைப் பார்! நான் எவ்வளவு சாந்தமாக இருக்கிறேன்.

மிஸ் நேவில்:— ஆம், ஆம்; கேட்பானேன்; பிறர் சொத்து கொள்ளை போனால், நாம் சாந்தமாயிருப்பதற்குக் கேடென்ன?

டோனி தாயார்:-இந்த அல்ப விஷயத்துக்கு இவ்வளவு அங்கலாய்ப்புடன் நீ இருப்பதைப்பார்க்க விநோதமாயிருக்

கிறது. அது தேடிப்பார்த்தால் அகப்பட்டுவிடும்; அது அகப்படும் வரையில் என் ராக்கோடியைப் போட்டுக் கொள்.

மிஸ் நேவில்:—உங்கள் ராக்கோடியை நினைத்தாலே விஷம் மாதிரி இருக்கிறது.

டோனி தாயார்:—அதுதான் உன் அழகை எடுத்துக் காட்டும். நான் அணிந்துகொண்டால் என்னை எவ்வளவு அழகாகக் காண்பிக்கிறது? நீ அதைப்போட்டுக்கொள்ளத்தான் வேண்டும்.

[எடுத்துவரப் போகிறாள்.]

மிஸ் நேவில்:—அத்தை! அது எனக்கு வேண்டவே வேண்டாம்; எடுத்துவராதேயுங்கள். இந்த அநியாயத்தை யாராவது கேட்டதுண்டா? அல்லது கண்டதுண்டா? என் விலையுயர்ந்த நகைகளைப் பிடுங்கிக்கொண்டு, அதற்குப் பதிலாக ஓட்டை, உடைசலைக் கொடுப்பதை எங்கேயாவது கேள்விப்பட்டதுண்டா?

டோனி:—அட அசடே! ராக்கோடியைக் கொடுத்தால் அதை வாங்கிக்கொள். உன் நகைகளெல்லாம் உனக்கு ஏற்கனவே வந்துவிட்டன. அவள் பீரோவிலிருந்து நான் திருடிக்கொண்டு வந்துவிட்டேன்; அது அவளுக்கு இன்னும் தெரியாது. நீ உன் காதலனிடம் ஓடு; அவர் எல்லா விஷயமும் உனக்குச் சொல்லுவார். அம்மாவை நான் கவனித்துக்கொள்ளுகிறேன்.

மிஸ் நேவில்:—என்ன அத்தான்! உன்னைப்போல் உண்டா?

டோனி:—இங்கு நில்லாதே. மாயமாக மறைந்து விடு; அவள் அதோ வருகிருள்; நகைகள் கெட்டுப்போனதைப் பார்த்துவிட்டாள். (மிஸ்நேவில் ஓடி விடுகிருள்.) வந்துவிட்டாள்டாப்பா, வாயைக் கிழித்துக்கொண்டு, மடாத் தவளை மாதிரி கத்துவதைப்பார்.

[டோனி தாயார் அலறிப்புடைத்துக்கொண்டு வருகிருள்.]

டோனி தாயார்:—ஐயையோ! திருடன்! திருடன்! குடி முழுகிபோய்விட்டது! கொள்ளை போய்விட்டது! என் பீரோவை யாரோ திறந்து, பூட்டை உடைத்து, எல்லா நகைகளையும் கொள்ளையடித்து விட்டார்கள்! மோசம் போய்விட்டது!

டோனி:—என்ன? என்ன? என்னம்மா ஸமாச்சாரம்? வீட்டிலுள்ளவர்களுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டு விட்டதா?

டோனி தாயார்:—நம்மை யாரோ கொள்ளையடித்து விட்டார்கள். பீரோவையெல்லாம் திறந்து, நகைகளையெல்லாம் அடித்துக்கொண்டு போய்விட்டார்கள். குடி முழுகிப்போச்சு.

டோனி:—ஓ! இவ்வளவுதானு! ஹா! ஹா! ஹா! சத்தியமாகச் சொல்லுகிறேன். இவ்வளவு சாமர்த்தியமாக நடிப்பதை நான் எங்கும் பார்த்ததேயில்லை. ஒரு

வேளை, நிஜமாகத்தான் குடிமுழுகிப் போய்விட்டதோ வென்றுகூட நினைத்தேன். ஹா! ஹா! ஹா!

டோனி தாயார்:—ஆமாண்டா குழந்தே! நிஜமாகவே மோசம் போய்விட்டதுடா. பீரோ உடைந்து திறந்து கிடக்கிறது. எல்லாம் களவு போய்விட்டதடா.

டோனி:—அதுதான் சரி, அப்படியே சொல்லு. விடாதே; ஹா! ஹா! ஹா! விடாதே; நான்தான் சாக்ஷி சொல்லுகிறேன், என்று சொல்லியிருக்கிறேனே. சாக்ஷிக்கு என்னைக்கூப்பிடு.

டோனி தாயார்:—டோனி! சத்யமாக தெய்வம் அறியச்சொல்லுகிறேண்டா; நான் அடியோடு போய் விடுவேண்டா.

டோனி:—அதற்கென்ன சந்தேகம்! அது கொள்ளை போய்விட்டதென்று எனக்குக்கூடத் தெரியுமே. அப் படித்தானே நான் சொல்லவேண்டும்.

டோனி தாயார்:—என் அருமைக் குழந்தே! என்னைக்கேளுடா. அந்த நகைகள் எங்கேயோ துலைந்து போய்விட்டதடா. நிஜமாகச் சொல்லுகிறேண்டா.

டோனி:—அம்மா; எனக்கு சிரிப்பு அடக்கமுடியாமல் வருகிறது. ஹா! ஹா! அதை யார் எடுத்தார்கள் என்றுகூட எனக்குத் தெரியும் ஹா! ஹா! ஹா!

டோனி தாயார்:—விளையாட்டிற்கும், வினைக்கும், வித்தியாசம் தெரியாத மூடம் உன்னைப்போல் உலகில் எங்கேயாவது உண்டாடா! ஏ! ஜடமே! நான் விளையாடவில்லேடா.

டோனி:—அப்படித்தான்: அதுதான் சரி; ஒரே ஆத்திரத்துடன் இருப்பதுபோல் இருக்கவேண்டும்; அப்பொழுதுதான் நம்மை ஒருவரும் சந்தேகிக்கமாட்டார்கள்.

டோனி தாயார்:—நான் சொல்லுவதையே காதில் போட்டுக்கொள்ளாத மதிகெட்ட மிருகமா நீ? உன்னை புத்திகெட்ட மடையன் என்று நான் கூப்பிட்டால் அதற்கும் நீ சாக்ஷி சொல்லுவாயா? என் தலை விதி! என்னைப் போல பரிதவிக்கும் ஸ்திரீ உலகத்தில் எங்கேயாவது உண்டா? ஒரு பக்கம் வடிகட்டின, மதியற்ற மடையன்; மற்றொரு பக்கத்தில் திருடன்; நடுவில், நான் இருந்து கொண்டு தவிக்கிறேன்.

டோனி:—அதற்கும் நான் சாக்ஷி சொல்லுவேன்.

டோனி தாயார்:—சாக்ஷி சொல்லுவாயா? நீ நாசமாகப் போக. உன்னை இந்த வீட்டை விட்டு அடித்துத் துரத்தாவிட்டால் நான் ஒரு மனுஷியா பார். பாவம்! என் மருமகள் நெவில், நகை கெட்டுப்போய் விட்டதென்று தவிப்பாளேடா. நான் கஷ்டப்பட்டு அலறுவதைப் பார்த்து சிரிக்கிறாயா உணக்கை கெட்ட கழுதை.

டோனி.—அதற்கும் நான் சாக்ஷி.

டோனி தாயார்:—*எண்டா, என்னை அவமானப் படுத்தி என் வயற்றெரிச்சலை கொட்டிக்கொள்ளுகிறாய்? சூடு கெட்ட கழுதை. இதோ வந்துவிட்டேன் பார் —,* [அவனைத் துரத்திக்கொண்டே போகிறாள்.]

டோனி:—*அதற்கும் நான் சாக்ஷி.* [ஓட்டம் பிடிக் கிறான்.]

[ஹார்ட்காஸில் பெண் "கேட்" என்பவளும் வேலைக் காரியும் வருகிறார்கள்.]

கேட்:—*என் தமயன் பண்ணும் காரியங்களெல்லாம் ஒன்றும் பிடிபடாமல் இருக்கிறதே. அவர்களிடம் இந்த வீட்டை ஒரு ஹோட்டல் என்று சொல்லி அனுப்பிய தின் அர்த்தமென்ன? ஹா! ஹா! அவனுடைய சேஷ்டை களெல்லாம் விநோதமாகவே இருக்கிறது.*

வேலைக்காரி:—*அதிலும் விநோதம் என்னவென்றால் நீங்கள் இந்த உடையில் இருப்பதனால் உங்களை, இந்த ஹோட்டல் சிற்று வேலைக்காரி என்று நினைத்துக்கொண் டிருக்கிறார், அந்தப் புதிதாக வந்த யஜமானர். நீங்கள் அவர் பக்கத்தில் போனபோது உங்களைப் பார்த்து என்னை அவ்விதம் கேட்டார்.*

கேட்:—*அப்படியா? அவ்விதமே அவர் நினைத்துக் கொள்ளட்டும்; நாம் வேடிக்கை பார்க்கலாம். என் உடை எவ்விதமிருக்கிறது?*

வேலைக்காரி:—கிராமத்து உடை மாதிரி இருக்கிறதுங்க.

கேட்:—அவர் என்னையாவது, என் முகத்தையாவது முன் பார்த்ததாக ஞாபகம் இல்லையென்று நிச்சயமாகத் தெரியுமா?

வேலைக்காரி:—அதிலே ஒரு சந்தேகமுமில்லையுங்க.

கேட்:—நானும் அப்படித்தான் நினைத்தேன்; நாங்கள் இருவரும் சிலநேரம் பேசிக்கொண்டிருந்தபோதிலும், அவருடைய கூச்சத்தினால் ஏற்பட்ட கலவரத்தில் ஒரு தடவையாவது என்னைப்பார்க்கவில்லை; அவ்விதம் ஒரு வேளை பார்த்திருந்தாலும், என்னுடைய பானட் மறைத்திருக்கும்.

வேலைக்காரி:—அவர் தப்பிதமாக நினைத்திருப்பதிலிருந்து என்ன வேடிக்கை பார்க்கப்போகிறீர்கள்?

கேட்:—முதல் முதலாக, அவர் என்னை நன்றாகப் பார்க்கமுடியும். கலியாணமாகவேண்டிய பெண் முகத்தை முதலில் அறிந்தால்தானே நல்லது; இரண்டாவதாக; அவரோ உயர்தரப் பெண்களுடன் சகஜமாகப் பழகுவதில்லை; இந்த உடையிலிருக்கும்பொழுது அவர் என்னுடன் கூச்சமில்லாமல் பேசும் நிமித்தம், பழக்கம் ஏற்பட்டு ஒருவரை ஒருவர் அறியலாம். முக்கியமாக, அவர் அயர்ந்தாற்போல் இருக்கும்பொழுது எவ்விதம் நடந்துகொள்ளுகிறார் என்று அவர் அறியாமல் நான் அறிந்துவிட்டு, பிறகு என் சுயரூபத்தை வெளிப்படுத்தி வேடிக்கை பார்க்கவேண்டும்.

வேலைக்காரி:—அவரோ உங்களை சித்து வேலைக்காரி என்றே நினைத்திருக்கிறார்; அதற்கேற்றாற்போல் உங்கள் குரலையும் மாற்றிக்கொண்டு அவ்விதமே நடக்கமுடியுமா?

கேட்:—அதைப்பற்றி கவலைப்படாதே. அந்த வேஷத்திற்கு ஏற்ற குரலும், தொனியும் இருக்கிற தென்றே எண்ணுகிறேன். இதோ பார். எவ்விதம் பேசுகிறேனென்று:— "யஜமானரு கூப்பிட்டீங்களா? அடே! அதுயாரப்பா! யஜமானர் சொல்லுவதைக் கேளு டாப்பா; யஜமானருக்கு ஸிகரேட் கொண்டுட்டு வரச்சொல் லட்டுங்களா"?

வேலைக்காரி:—அதுபோதும். அவுங்கவராங்க.

[வேலைக்காரி போகிறாள்]

[மார்லோ வருகிறார்]

மார்லோ.—[தனக்குள்] என்ன, இந்த வீட்டில் எங்கு பார்த்தாலும், ஒரே கூச்சலும் கூப்பாடுமாக இருக்கிறது. ஒரு நிமிஷமாவது நிம்மதியாக இருக்கமுடியவில்லை. இருப்பதில் நல்ல அறையாக இருக்குமிடத்திற்குப் போனால், அந்த ஹோட்டல்காரன் பழங்கதைகளை யெல்லாம் அவிழ்த்துவிடுகிறான்; மாடிக்குப்போனாலோ, வீட்டுக்காரி தரைமட்டம் வரையில் குனிந்து உபசரித்துப் பிராணனை வாங்குகிறாள். அப்பாடா! இப்பொழு தாவது தனிப்படையாக என்னிஷ்டம்போல் சற்று நேர மாவது இருக்கச் சமயம் வாய்த்ததே. [அங்கும் இங்கும் ஆழ்ந்த யோசனையில் நடக்கிறார்]

கேட்:—யஜமான்! கூப்பிட்டீங்களா? என்னை கூப்பிட்டீங்களா யஜமான்?

மார்லோ:—[முணு முணுத்துக்கொண்டே] ஹார்ட் காஸில் பெண் 'கேட்' என்பவளையோ எனக்கு பிடிக்காது போலிருக்கிறது; முகத்தை தூக்கிக்கொண்டு இருப்பாள் போலிருக்கிறது.

கேட்:—என்னை கூப்பிட்டீங்களா யஜமான்?

[அவ்விதம் சொல்லிக் கொண்டே அவர் எதிரில் நிற்கிருள். அவர் அதை கவனியாமல் திரும்பி நடக்கிருர்.]

மார்லோ:—இல்லை; கூப்பிடவில்லை. [மறுபடியும் தனக்குத்தானே பேசிக்கொண்டே நடக்கிருர்] என் தகப்பனரை திருப்தி செய்யும்பொருட்டு வந்தேன்; இனி நான் கிளம்பிப் போகலாமென்றே நினைக்கிறேன். [டைம் டேபிளை பார்க்கிருர்]

கேட்:—ஒருவேளை அந்த யஜமானர் கூப்பிட்டாரோ?

மார்லோ:—இல்லேன்னு!

கேட்:—உத்திரவிடுங்கோ யஜமான். இங்கே ஆளுக்குக் குறைவில்லை. யஜமான் உத்திரவுப்படி நடக்கிறோம்.

மார்லோ:—இல்லை; நான்தான் வேண்டாமென்று சொல்லுகிறேனே. [அவர் நிமிர்ந்து அவளுடைய பூரு முகத்தையும் முழுவதும் பார்த்துவிட்டு] ஆமாம் குழந்தே!

நான் கூப்பிட்டது மாதிரியாகத்தானிருக்கிறது. எனக்கு வேண்டியது—எனக்கு—எனக்கு—ஐயோடி! உன்னைப் பார்த்தால் நீ ரொம்ப அழகாயிருக்கிறாய்.

கேட்:—இப்படிச் சொன்னா எனக்கு வெட்கமாயிருக்காதுங்களா?

மார்லோ:—இவ்வளவு காந்தமும், ஒளியும் உள்ள புறுபுறுப்பான போக்கிரிக் கண்களை நான் எங்கும் பார்த்ததேயில்லை. ஆமாம், ஆமாம்; உன்னை நான்தான் கூப்பிட்டேன், இந்த வீட்டில் நல்ல—நல்ல—அதுக்குப் பேரென்ன? அது கிடைக்குமா?

கேட்:—இல்லேங்க; பத்துநாளாய் கிடைக்கலேங்க.

மார்லோ—இங்கு எது கேட்டாலும் கிடைப்பதில்லை; உதாரணமாக, மாதிரிக்கு உன் உதட்டு அமிர்தமான ருசியை கேட்கலாமோ? அதுகூட கிடைக்காதோ என்னமோ?

கேட்:—அமிர்தமா! அமிர்தமா! இந்தப் பக்கங்களில் அம்மாதிரியான சாராயம் தயாரிப்பதில்லையே. இங்கே பிரஞ்ச் சாராயம் விற்பதில்லை.

மார்லோ:—நான் கேட்பது சுத்த அசல் இங்கிலீஷ் வளர்ச்சி.

கேட்:—அது எனக்குத் தெரியாமலிருப்பது ஆச்சர்யமாகவல்லவோ இருக்கிறது. இந்த இடத்தில் எல்லா

வித சாராயமும் பானகமும் தயார் செய்கிறோம். நானும் இவ்விடம் 18 வருஷங்களாக இருக்கிறேன்.

மார்லோ:—18 வருஷமா! நீ சொல்வதைப் பார்த்தால் நீ பிறப்பதற்கு முந்தியே இவ்விடம் இருந்ததாகச் சொல்லுவாய் போலிருக்கிறதே குழந்தே! உன் வயதென்ன?

கேட்:—ஓ! என் வயதை சொல்லக்கூடாதுங்க. பெண்களின் வயதையும் ஸங்கீதத்தின் வயதையும் கணக்கிடலாமா? கூடாதாமே.

மார்லோ:—உத்தேசமாக இவ்விடமிருந்து பார்த்தால் உனக்கு 40 வயதுக்கு மேலிராது [நெருங்கி வந்து கொண்டே] கிட்ட வந்து பார்த்தால் அவ்வளவு இராது போலிருக்கிறது. [இன்னும் பக்கத்தில் நெருங்கி] சில பெண்மணிகள் நெருங்க நெருங்கத்தான் பால்யமாகத் தோன்றுகிறார்கள்; மிகவும் அருகில் வந்தால் [அவளை முத்தமிட பிரயத்தனம் செய்கிறார்]

கேட்:—ஐயா! தயவு செய்து அந்த இடத்திலேயே நில்லுங்கள். நீங்கள் நெருங்குவதைப் பார்த்தால், குதிரைக்குப் பல்லைப்பிடித்து வயது கண்டு பிடிப்பது போல் அல்லவோ இருக்கிறது.

மார்லோ:—என் செல்வமே! என்னிடம் நீ இவ்விதம் நடந்துகொள்வது அழகல்ல; என்னை இவ்வளவு தூரத்

தில் நிறுத்தினல், நீயும் நானும் எவ்விதம் நெருங்கிப் பழகமுடியும்?

கேட்:—உங்களுடன் பழக யார் இப்பொழுது விரும்புகிருர்கள்? நான் இச்சைப்படவில்லை. சற்றுமுன் உங்கள் எதிரில் வந்த ஹார்ட்காஸிலின் பெண் 'கேட்' என்பவளை இம்மாதிரி உதாசீனமாக நடத்தினீர்களா? அவள் எதிரில், வெட்கி, தலைகுனிந்து, கூச்சத்தில் ஒன்றும் புரியாமல் தரையைப் பார்த்தவண்ணமே, ஏதோ நியாயஸ்தலத்தில் தண்டனை பெற்றவர் போல் நின்று இருப்பீர்கள் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

மார்லோ:—[தனக்குள்] அடே! எவ்வளவு கணக்காகச் சொல்லுகிருள்! [அவளிடம்] அவளைக் கண்டு நானு பயந்தேன்? ஹா! ஹா! ஹா! அந்த அவலக்ஷணம் பிடித்த ஒண்ணரைக் கண்ணைக் கண்டா? கிடையவே கிடையாது. அவளிடம் கேலித்தனமாக, பரிகசித்துப் பேசினேன். நீ என்னைச் சரியாக அறிந்துகொள்ளவில்லை. அவளிடம் அதிகக் கடுமையாக இல்லை; ஒரு பெண்ணிடம் எப்படியிருப்பது?

கேட்:—ஓஹோ! ஆனல் நீங்கள் ஸ்திரீகளுடன் சகஜமாகப் பழகுவதுண்டோ?

மார்லோ:—அவர்களுக்கு நான் ரொம்ப செல்லம், அவ்விதம் அவர்கள் இருப்பதற்கு என்னிடம் என்ன குணம் இருக்கிறதென்றுதான் புரியவில்லை. லேடிஸ்

கிளப்பில், என்னை 'ராட்டில்' என்று செல்லப் பெயர் வைத்துக் கூப்பிடுகிறார்கள். ஆனால் 'ராட்டில்' என்பது என் பெயர் இல்லை. என் உண்மையான பெயர் 'ஸாலோமன்ஸ்' இதோ பார்; இந்த ஸாலோமன்ஸ் நமஸ்கரிக்கிறான். [மரியாதையாகத் தலைகுனிந்து வணங்குகிறார்]

கேட்:—போதும் ஐயா, போதும்! நீங்கள் என்னை உங்கள் லேடி கிளப்புக்கு அறிமுகப்படுத்துவது போலிருக்கிறதே ஒழிய, உங்களை எனக்கு அறிமுகப்படுத்துவது போலில்லை. அது கிடக்கட்டும்; நீங்கள், ஸ்திரீகளின் அத்யந்த ஸ்நேகிதர் என்றா சொல்லுகிறீர்?

மார்லோ:—ஆம் கண்ணே. அவர்கள் இருக்குமிடத்திற்கு பிரகாசத்தைக் கொடுக்கும் ஓர் தீபம் போல் அல்லவா நான்!

கேட்:—அவ்விடம் மிகவும் உத்ஸாகமாகவே இருக்குமல்லவா?

மார்லோ:—சீட்டு, சுகமான விருந்து, சாராயம், ஸ்திரீகள், இருக்குமிடத்தில் கேட்பானேன்?

கேட்:—அதிலும், அங்கு அவர்களுடைய அத்யந்த ஸ்நேகிதரான 'ராட்டில்' இருக்கும்பொழுது வேறு எவ்விதமிருக்க முடியும்? ஹா! ஹா! ஹா!

மார்லோ—[தனக்குள்] இந்த சுட்டித்தனமான பேச்சு பிடிக்கவில்லையே. ஒருவேளை, அவளுக்கு நான் யார், என்று தெரியுமோ. [அவளிடம்] ஏன் குழந்தே! சிரிக்கிறாய்.

கேட்:—உங்களுடன் கிளப்பில் அந்த ஸ்திரீகள் நேரத்தைக் கழித்தால், வீட்டுவேலையை எப்பொழுது தான் கவனிப்பார்கள் என்று நினைத்தபொழுது சிரிப்பு வந்தது.

மார்லோ:—[ தனக்குள் ] நல்ல வேளை; என்னைப் பார்த்துச் சிரிக்கவில்லை. [ அவளிடம் ] குழந்தை உனக்கு ஏதாவது வேலை தெரியுமா?

கேட்:—ஆம்; இந்த வீட்டிலுள்ள ஒவ்வொரு ஸ்கிரீனும் தலைகாணியும்கூட அதற்கு சாக்ஷி சொல்லும்.

மார்லோ:—பலே பேஷ்! உன்னுடைய எம்ப்ராய்டரி வேலைகளெல்லாம் எனக்குக் காண்பித்துத்தான் ஆக வேண்டும். எனக்கும், எம்ப்ராய்டரி வேலையும், டிஸையின் போடவும் தெரியும்; உன் வேலை நன்றாயிருக்கிறதா என்று நான் பார்த்துச் சொல்லுகிறேன்; என்னைக் கேள். [அவளுடைய கையைப் பிடித்துக்கொள்ளுகிறார்.]

கேட்:—[ திமிறிக்கொண்டே ] மெழுகுவத்தி வெளிச்சத்தில் ஒன்றும் சரியாகத் தெரியாது; காலையில் பார்த்துக்கொள்ளலாம்.

மார்லோ:—ஏன் இப்பொழுது கூடாது? என் அருமைச் செல்வமே! உன் அழகின் வேகத்தை என்னால் எதிர்க்கக்கூட முடியாமலிருக்கிறதே— ஆ! அதோ யார் வருகிறது? அந்தக் கிழமா? [ மார்லோ போகிறார் ]

[ ஹார்ட்காஸில் இதையெல்லாம் பார்த்ததின் பயனாக ஸ்தம்பித்து நிற்கிறார் ]

ஹார்ட்காஸில்:—அம்மா! போதும்; இவன்தானே உனது கூச்சமுள்ள காதலன்; இவன்தான் குனிந்த தலை நிமிராமல், பூமியைப் பார்த்த வண்ணம் தூரத்தில் நின்று பேசினவனோ? கேட்! கேட்! உன் தகப்பனாரை இவ்விதம் நீ ஏமாற்றுவதற்கு வெட்கமாயில்லையா?

கேட்:-அப்பா, நான் சொல்லியதை நம்பவேண்டாம். அவர் கூச்சமுள்ள மனிதர் என்று நீங்களும் கூடிய சீக்கிரத்தில் தானே அறிந்து கொள்ளுவீர்கள்.

ஹார்ட்காஸில்:—இதுவும் ஓர் அதிசயம் தான்; அவனுடைய போக்கிரித்தனம் எல்லோருக்கும் பரவும் போலிருக்கிறதே. உன் கையை அவன் பிடிக்கும் பொழுது நான் பார்க்கவில்லையா? உன்னைக் கர கரவென்று இழுப்பதை கவனிக்கவில்லையா? நீ என்னிடம் இப்பொழுது, அவனுடைய மட்டு, மரியாதை, கூச்சம், எல்லாவற்றையும் பற்றிப் பேசுகிறாய்.

கேட்:—அவருடைய மரியாதையை எடுத்து உங்களுக்கு ரூபித்து, வர வர அவருடைய பிழைகளெல்லாம் திருத்தி, உயர்தரமான குணங்கள் ஓங்கி வளரும் என்று ரூபித்தால், அவரை மன்னித்து விடுவீரா?

ஹார்ட்காஸில்:— என்னை முழுப்பைத்தியமாக அடித்துவிடுவாள் போலிருக்கிறதே இந்தப் பெண்! நீ

சொல்லுவதை நம்பவே மாட்டேன். அவன் இங்கு வந்து மூன்று மணி நேரம்கூட ஆகவில்லை; எனக்கு இந்த வீட்டிலுள்ள உரிமைகளை எல்லாம் அபகரித்துக் கொண்டான். உனக்கு அவனுடைய போக்கிரித்தனம் பிடித்திருந்து, அதை கூச்சம் 'என்றே' சொல்லிக்கொள்ளலாம். ஆனால், எனக்கு மாப்பிள்ளையாக வரும் பையனுக்கு இம்மாதிரியான குணங்கள் இருந்தால் முடியாது.

கேட்:—இன்று ராத்திரி வரையில் அவகாசம் கொடுங்கள்; நான் ரூபிக்கிறேன்.

ஹார்ட்காஸில்:—அதில், பாதி நேரம் வரைகூட என்னால் சகிக்கமுடியாது; இந்த நிமிஷமே விரட்டிவிட வேண்டுமென்று இருக்கிறேன்.

கேட்.—அந்நேரம்வரை கொடுத்தால் போதும்; உங்கள் மனதிற்கு திருப்தியடையும் விதம் ரூபிக்கிறேன்.

ஹார்ட்காஸில்:—சரி; உன்னை உத்தேசித்து ஒரு மணி நேரம் கொடுக்கிறேன். அப்புறம் விளையாடக் கூடாது. இப்பொழுதே கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன். மறைவுதலாக நான் சொல்லும் வழக்கமில்லை.

கேட்:—உங்கள் உத்திரவைச் சிரசில் ஏற்று நான் அதன் படி நடந்துகொள்ளுவதே எனக்கு ஓர் பெருமை என்று நினைத்திருப்பதை நீங்கள் அறிந்துகொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். [இருவரும் போகிறார்கள்]

## நான்காவது பாகம்

[ஹேஸ்டிங்ஸும், மிஸ் நேவிலும் வருகிறார்கள்]

ஹேஸ்டிங்ஸ்:—நீ சொல்லுவது நம்பக்கூடியதாயில்லையே? ஸர்சார்லஸ் இன்று இங்கு வருகிறாரா? உனக்கு யார் இந்தத் தகவல் கொடுத்தது?

மிஸ் நேவில்:—அதில் ஒரு சந்தேகமுமில்லை; நானே மிஸ்டர் ஹார்ட்காஸிலுக்கு அவர் எழுதிய கடிதத்தைப் பார்த்தேன். தன் மகன் மார்லோ கிளம்பிய சில நேரத்தில் தானும் புறப்பட்டு வருவதாக எழுதியிருந்தார்.

ஹேஸ்டிங்ஸ்:—என் அருமைக் காதலி! அவர் வருவதற்கு முன் நாம் கிளம்பத் தயாராக இருக்கவேண்டும். அவர் என்னை நன்கு அறிவார்; என்னைப் பார்த்தால், என் பெயரையும், எதை உத்தேசித்து வந்திருக்கிறேன் என்று இங்குள்ளவர்களுக்கு வெளிப்படுத்தக்கூடும்.

மிஸ் நேவில்:—நகைகளை பத்திரமாக வைத்திருக்கிறீர்களல்லவா?

ஹேஸ்டிங்ஸ்:—ஆம்; பெட்டிச் சாவிகளை மார்லோ வைத்திருப்பதால், அவரிடம் அனுப்பியிருக்கிறேன். சரி, நாழியாய்விட்டது; நாம் ஒருவரும் அறியாமல் ஓடிப்போவதற்குத் தயார் செய்கிறேன்; டோனி, நல்ல குதிரைகளாகக் கொடுப்பதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறான். அவனுக்கு, நான் நேரில் சந்திக்க முடியாமல்,

ஏதாவது தகவல் கொடுக்கவேண்டியிருந்தால் எழுதிக் கொள்ளுகிறேன். [போகிறார்]

மிஸ் நேவில்:—சரி! உங்கள் காரியம் ஜயமடையட்டும். அதற்குள், நானும் என் அத்தையிடம் போய், அவளுடைய மகனையே உயிராகப் பாவித்துக் காதலிப்ப தாகப் பாசாங்கு செய்கிறேன். [போகிறாள்]

[மார்லோ, ஒரு வேலையாளுடன் வருகிறார்]

மார்லோ:—ஹேஸ்டிங்ஸ், இவ்வளவு விலையுயர்ந்த நகைப் பெட்டியை என்னிடம் அனுப்பி பத்திரமாக வைத்துக்கொள்ளச் சொன்னதின் அர்த்தம் புரியவில்லை. இந்த ஹோட்டலில் பத்திரமாக வைப்பதற்கு ஒரு இடமுமில்லை என்று அவனுக்குத் தெரியும். ஏய்! நான் சொல்லியபடி இந்த வீட்டு யஜமானியிடம் நகைப்பெட்டி யைக் கொடுத்து ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ளச் சொன்னயா? அவள் கையில் நேரில் கொடுத்தாயா?

வேலையாள்:—யஜமான்! உத்திரவுப்படியே செய் தேன்.

மார்லோ:—அவள் ஜாக்கிறதையாக வைத்துக்கொள் வதாகச் சொன்னளா?

வேலையாள்:—ஆம்; ரொம்ப பத்திரமாக வைத்துக் கொள்வதாகச் சொன்னள். 'உனக்கு இது எப்படிக் கிடைத்தது?' என்று கேட்டாள். அதன் விபரம் பூராவும் விசாரிக்க வேண்டுமென்றும் சொன்னள்.

[வேலையாள் போகிறன்]

மார்லோ:—ஹா! ஹா! ஹா! நல்லவேளை; நகைகளை பத்திரமாக வைத்துவிட்டோம். இந்த இடத்தில் ஒன்றும் தலை, கால் புரியாமல் விஷயங்கள் நடந்துகொண்டிருக்கின்றன; இவ்விடத்திலுள்ளவர்கள் தலை சுழலும்படி நடந்து கொள்ளுகிறார்கள்; ஆனால் அந்த சிறு சிற்று வேலைக்காரி என் மனதில் பதிந்து இவைகளையெல்லாம் மறக்கும்படி செய்கிறாள். அவள்தான் எனக்கு; அவளையல்லாமல் வேறு ஒருவரையும் லக்ஷியம் செய்யப் போவதில்லை.

[ஹேஸ்டிங்ஸ் வருகிறார்.]

ஹேஸ்டிங்ஸ்:—அடேடே! மிஸ் நெவிலிடம் தோட்டத்தின் ஓரமாக நான் காத்துக்கொண்டிருப்பேன் என்று சொல்ல மறந்துவிட்டேனே. இது யார்? மார்லோவா? வெகு குஷியாக இருக்கிறாரே.

மார்லோ:—ஹேஸ்டிங்ஸ்! என்ன போ! நான்கூட ஜயம் அடைந்தேன்; பெண்களிடமா நாம் ஜயிக்க முடியாது?

ஹேஸ்டிங்ஸ்:—'சில பெண்களிடம்' என்று சொல்லு. அது கிடக்கட்டும்; இவ்வளவு நிலைதெரியாமல் சந்தோஷப்படும்படி என்ன செய்துவிட்டீரோ தாங்கள்?

மார்லோ:—இடுப்பில் கொத்துச்சாவிகளைத் தொங்கவிட்டுக்கொண்டு, அங்கும் இங்கும், சுறுசுறுப்பாக, மனதை மயக்கும்படி, அழகிய ஒரு பெண், புறு புறுவென்று போவதை நீ பார்க்கவில்லையா?

ஹேஸ்டிங்ஸ்:—அதற்கென்ன இப்போ?

மார்லோ:—அட பைத்தியமே. இது தெரியவில்லை யா? அவள்தாண்டா எனக்கு. என்ன ஜோதி? என்ன நடை? எவ்வளவு அழகான கண்கள்? எவ்விதமான உதடு. ஆனால் அது மஹா போக்கிரி? நான் முத்தமிடுவதைத் தடுத்துவிட்டது.

ஹேஸ்டிங்ஸ்:—அது சரியப்பா; அவள் உன்னைக் காதலிக்கிறாள் என்று உணர்ந்தாயோ?

மார்லோ:—அவள் தன் எம்ப்ராயிடரி வேலையைக் கூட காண்பிக்கிறேன் என்றாள்; நான் அதைப்பார்த்து அதிலும் அழகாக எவ்விதம் செய்வது என்று சொல்லிக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறேனே. இதைவிட என்ன?

ஹேஸ்டிங்ஸ்:—மார்லோ ஒரு பெண்ணின் மரியா தைக்கு, குறைவு வரும்படி நடந்துகொள்வது சரியா?

மார்லோ:—ஸ்......ஸு! ஒரு ஹோட்டலில் உள்ள பெண் எவ்வளவு மரியாதை வைத்துக்கொண்டிருப்பாள் என்று நமக்குத்தான் தெரியுமே. அவளை நான் திருடிக் கொண்டு போகப்போவதில்லை; ஹோட்டலில்தான் எந்த சாமானும் பணம் கொடுத்துத்தானே வாங்கு கிறோம்.

ஹேஸ்டிங்ஸ்:—அந்தப் பெண், மானம் உள்ளவள் என்றே நான் நினைக்கிறேன்.

மார்லோ:—அவ்விதமிருப்பாளாயின், என் உயிர் போனாலும் அதற்கு பங்கம் வரும்படி நடந்து கொள்ள மாட்டேன்.

ஹேஸ்டிங்ஸ்:—நான் மிகவும் ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ளும்படி அனுப்பிய நகைப்பெட்டியை பொறுப்புடன் வைத்திருக்கிருயா? பத்திரமாகத்தானே இருக்கிறது?

மார்லோ:—ஆம்! ஆம்; பத்திரமாகவே இருக்கிறது. அக்கரையுடன் ஜாக்கிரதை பண்ணிவைத்திருக்கிறேன். ஆமாம்; இந்த ஹோட்டலில் எவ்விடத்தில் பத்திரமாக வைக்கக்கூடும் என்று நினைத்து அதை என்னிடம் அனுப்பினுய்? என்ன முழிக்கிருய்? அதைப்பற்றி கவலைப்படாதே. உன்னைவிட அதிக ஜாக்கிரதையாக வைப்பதற்கு — நான் —,

ஹேஸ்டிங்ஸ்:—என்னது?

மார்லோ:—இந்த ஹோட்டல் யஜமானியிடம் உனக்காக ஜாக்கிரதையாக வைத்து வைக்கும்படி அனுப்பி விட்டேன்.

ஹேஸ்டிங்ஸ்:—ஹோட்டல் யஜமானியிடமா?

மார்லோ:—ஆம்; அவளிடமேதான்.

ஹேஸ்டிங்ஸ்:—அனுப்பிவிட்டாயோ?

மார்லோ:—அனுப்பிவிட்டேன், நம்மிடம் திரும்பவும் கொடுப்பதற்கு அவள் உத்திரவாதம்.

ஹேஸ்டிங்ஸ்:—ஒரு சாக்ஷியுடன் கூட அவள் உத்திரவாதமாயிருப்பாள்.

மார்லோ:—நான் செய்தது சரிதானே? இந்தத் தடவையாவது நான் புத்திசாலித்தனமாக நடந்தேன் என்று ஒப்புக்கொள்ளுவாய் அல்லவா?

ஹேஸ்டிங்ஸ்:—[தனக்குள்] என் கலவரத்தை அவன் பார்க்காமலிருக்கவேண்டும்.

மார்லோ:—உன்னைப் பார்த்தால் ஏதோ வேதனைப் பட்டுக்கொண்டிருப்பது போலிருக்கிறதே; தவறாக ஒன்றும் நடந்துவிடவில்லையே.

ஹேஸ்டிங்ஸ்:—அதெல்லாம் ஒன்றுமில்லை; இவ்வளவு சந்தோஷமாக நான் ஒரு நாளும் இருந்ததேயில்லை; நீ இந்த ஹோட்டல் யஜமானியிடம் கொடுத்தாயாக்கும்; அவள் அதை ஆவலுடன் பத்திரப்படுத்தி வைத்தாளாக்கும்.

மார்லோ:—ஆத்திரத்துடன் எடுத்து அவசரமாக வைத்துக்கொண்டாளாம்; அந்த நகைப் பெட்டியை மாத்திரமல்ல; கொண்டுவந்த வேலைக்காரனையும் பத்திரப் படுத்தி வைக்கவேண்டுமென்று சொன்னாளாம்! ஹா! ஹா! ஹா!

ஹேஸ்டிங்ஸ்:—ஹீ! ஹீ! ஹீ! எப்படியாவது பத்திரமாயிருக்க வேண்டியதுதானே?

மார்லோ:—லோபியிடம் உள்ள பணப்பை மாதிரி பத்திரமாயிருக்கிறது.

ஹேஸ்டிங்ஸ்:—[தனக்குள்] நகைகள் தொலைந்து விட்டன; அது இல்லாமலே கிளம்பவேண்டியதுதான். [மார்லோவிடம்] மார்லோ! நீ உன் புறு புறு என்கிற சித்து வேலைக்காரியை நினைத்துக்கொண்டிரு. ஹீ! ஹீ! ஹீ! எனக்கு எவ்வளவு ஜயத்தை அடையும்படி செய்தாயோ, அந்த ஜயத்தை நீயும் அடைவாய். நான் போய் வருகிறேன். [போகிறார்]

மார்லோ:—ஹேஸ்டிங்ஸ், உனக்கு மிகவும் வந்தனம். எனக்கு அவ்வளவு ஜயம் கிடைத்தால் போதும்; அதற்கு மேல் கேட்கவில்லை.

[ஹார்ட்காஸில் வருகிறார்]

ஹார்ட்காஸில்:—என் வீட்டு அடையாளமே எனக்குத் தெரியவில்லையே; எல்லாம் தலைகீழ் பாடமாயிருக்கிறதே. அவனுடைய வேலைக்காரர்களெல்லாம் முழுக்குடியில் அமிழ்ந்து ரகளை பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்; என்றால் இனி இதைத் துளிக்கூட சகிக்க முடியாது; அவன் தகப்பனாரை உத்தேசித்து கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போம். [மார்லோவிடம்] மிஸ்டர் மார்லோ! தங்கள் தாஸன், தங்கள் அடிமை தாஸன். [தலை குனிந்து வணங்குகிறார்.]

மார்லோ:—அடியேன் உங்கள் தாஸன்; [தனக்குள்] இதென்னடா புது வம்பு?

ஹார்ட்காஸில்:—உங்கள் பெயர் போன தகப்பனுரின் புதல்வனுயிருப்பதின் நிமித்தம், எங்கு போனுலும் உம்மை, மரியாதையுடன் நடத்துகிறும் என்று நீர் அறிந்துகொண்டீரா? அது தெரிந்திருக்குமென்றே நினைக்கிறேன்.

மார்லோ:—எனக்கு நன்ருகத் தெரியும்; அதை எடுத்துரைக்க அவசியமேயில்லை. என் 'பெயர் பெற்ற தகப்பனுரின்' மகனை எங்கு போனுலும் நன்கு வரவேற்கும்படியே செய்துகொள்வேன்.

ஹார்ட்காஸில்:—அவ்விதம் நீங்கள் செய்துகொள்ள வேண்டுமென்றே நானும் எண்ணுகிறேன். உங்கள் நடத்தையைப்பற்றி நான் ஒன்றும் சொல்லி குறை கூறப் போவதில்லை; ஆனுல் உங்கள் வேலைக்காரர்கள் பண்ணும் அட்டகாசத்தை சகிக்கவே முடியவில்லை. இவ்விடத்தில் அவர்கள் ரஸிக்கக்கூடாத பழக்கத்தை ஏற்படுத்துகிருர்கள்; அது என் மனதிற்கு ஏற்றதல்ல என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன்.

மார்லோ:—ஐயா! அது என் குற்றமில்லை; அவர்கள் அதிகம் குடிக்காவிட்டால் அவர்களுடைய குற்றம்தான். உங்களிடமுள்ள சாராயப் பீப்பாவைக் காலிசெய்துவிட வேண்டுமென்று என் வேலையாட்களுக்கு உத்திரவிட்டிருந்தேன். அதில் ஒரு சந்தேகமும் வேண்டாம்.

[தன் வேலையாளை கூப்பிட்டு] யாரடா அவன்? இங்கே வா. [ஹார்ட்காஸிலிடம்] நான் குடிப்பது வழக்கமில்லாததினால், எனக்கும் சேர்த்து அவர்களை குடிக்கச் சொல்லியிருந்தேன்.

ஹார்ட்காஸில்:—உங்கள் உத்திரவின்படியா அவர்கள் குடித்தார்கள்? எனக்கு இதுவே போதும்.

மார்லோ:—ஆமாம் என்கிறேனே. அவர்களையே நீங்கள் நேரில் கேட்டுப்பாருங்கள்.

[வேலைக்காரன் குடி வெறியில் வருகிறான்.]

மார்லோ:—ஏ! ஜெரமீ! இங்கே வா. ஏய்! என்னடா சொல்லியிருந்தேன் உனக்கு? தாராளமாய் உன் இஷ்டப்படி குடித்துவிட்டு, 'உனக்கு வேண்டியதெல்லாம் கேட்டு வாங்கிக்கொள்' என்று சொன்னேனல்லவா?

ஹார்ட்காஸில்:—[தனக்குள்] என் பொறுமையை இழந்துவிடுவேன்போலிருக்கிறதே.

ஜெரமி:—என்ன யஜமான்! நமக்கு சுதந்திரம் இல்லேங்க! நமக்கு எவ்வளவும் உண்டுங்க; சாப்புட்டுட்டு நல்லா குடிச்சேனுங்க; அப்பதானுங்க சரியாயுருக்குங்க; குடிச்சாக்கே ... க்குக் ... குக் [குடியில் இருமுகிறான்.]

மார்லோ:—பார்த்தீர்களா? நல்ல குடிவெறியில் இருக்கிறான். இன்னுமா குடிக்கவேண்டு மென்கிறீர்கள்? அப்பொழுது சாராயப் பீப்பாயில்தான் அவனை அமுக்க வேண்டும்.

ஹார்ட்காஸில்:—[தனக்குள்] இனிப் பேசாமலிருந்தால், என்னைப் பயித்தியமாக அடித்துவிடுவான். [மார்லோவிடம்] மிஸ்டர் மார்லோ. ஐயா! நானும் இந்த 4 மணி நேரமாக உங்களுடைய அட்டகாசத்தைப் பொறுத்துப் பார்த்தேன்; அது அடங்கும் வழியாகக் காணோம்; ஐயா! இந்த இடத்தில் இனி என் அதிகாரப்படியே நடக்கவேண்டும் என்று தீர்மானித்துவிட்டேன். என் வீட்டைவிட்டு நீர், உங்களுடைய குடிகாரக் கூட்டங்களுடன் வெளிக் கிளம்புங்கள்; இந்த நிமிஷமே.

மார்லோ:—உங்கள் வீட்டைவிட்டுக் கிளம்புவதா? இதென்ன விளையாட்டு? என்ன? உங்கள் லாபத்தைக் குறித்து, உங்களைத் திருப்தி செய்வதற்காகச் செய்ததின் பயனா?

ஹார்ட்காஸில்:—நீங்கள் செய்யும் விஷயம் ஒன்றும் என் மனதிற்குப் பிடிக்கவில்லை; தயவு செய்து வீட்டைவிட்டு வெளிக் கிளம்புங்கள்.

மார்லோ:—இதை நீங்கள் வாஸ்தமாகச் சொல்லவில்லை என்று நினைக்கிறேன். அதுவும் இந்த நேரத்திலா? இம் மா தி ரி யா ன இருட்டிலா? என்னை மிரட்டி வேடிக்கை பார்க்கிறீர்களா?

ஹார்ட்காஸில்:—ஐயா வாஸ்தவமாகவே சொல்லுகிறேன்; என் கோபத்தை வீணில் புயற்காற்று மாதிரி கிளப்பியபிறகு நான் இனி சும்மா இருக்கமாட்டேன். ஐயா! இது என் வீடு தெரியுமல்லவா? இது என்னுடைய

வீடு. இதை விட்டு ஒரு நிமிஷம் தாமதியாமல் வெளிக் கிளம்புங்கள், இந்த க்ஷணம்.

மார்லோ:—ஹா! ஹா! ஹா! இதென்ன புயற் காற்றில் ஏற்படும் சுழல்போல் இருக்கிறது? என்னாலே ஒரு அடி கூட வெளியில் எடுத்துவைக்க முடியாது; அதை தெரிந்துகொள்ளுங்கள். [கோபமாக] அடே? இது உன் வீடோ! என் வீடு. நான் தங்கவேண்டும் என்று நினைக்கும்வரையில் என் வீடு. என்னை வெளியில் போகச் சொல்லுவதற்கு நீ யார்? இவ்வளவு போக்கிரித்தனத்தை நான் இதுவரையில் பார்த்ததுமில்லை; பார்க்கப்போவது மில்லை.

ஹார்ட்காஸில்:—நானும் இவ்வளவு அடாபிடித் தனத்தைப்பார்த்ததேயில்லை; அங்கேயிருந்து வந்தான்; கண்டதைக்கொண்டுவா, என்று அதிகாரம் பண்ணினான்; எனக்கு வைத்திருந்த நாற்காலியைக்கூட பிடுங்கிக் கொண்டு காலை நீட்டிக்கொண்டு படுத்துக்கொண்டான்; வீட்டிலுள்ள குடும்பஸ்தர்களையெல்லாம் அவமரியாதை யாக நடத்தினான்; வேலைக்காரனையெல்லாம் நினைத்தபடி குடிக்கச்சொன்னான்; இதையெல்லாம் எடுத்துக்கேட்ட தற்கு "இது உன் வீடு இல்லை, என் வீடு" என்கிறான். இந்தப் போக்கிரித்தனத்தை நினைத்தால் சிரிப்புக்கூட வருகிறது. ஹா! ஹா! ஹா! [கேலித்தனமாக] இந்த வீடுதான் உங்களுடையதாகிவிட்டது. அதிலுள்ள சாமான்களெல்லாம் எப்படியோ? ஒரு ஜோடி மெழுகு வர்த்தி வைக்கும் வெள்ளிப்பிடி இருக்கிறது; ஸ்க்ரீன்

நல்லதாயிருக்கிறது ; அடுப்பு ஊதும் குழாய்கள் ;—அதி லெல்லாம் உங்களுக்கு ஒரு மோஹம் வந்தாலும் வரலாம்.

மார்லோ:—[அலுப்புடன்] ஐயா! உங்கள் "பில்" எவ்வளவு என்று சொல்லுங்கள். வீண் வார்த்தை வேண்டாம்.

ஹார்ட்காஸில்:—கொஞ்சம் புத்தகங்கள் இருக் கின்றன ; அதுவும் உங்களுடையதுதான். அதில் "போக் கிரியின் போக்கு" என்று ஒரு புத்தகம் இருக்கிறது ; அது உங்கள் அறையில் எப்பொழுதும் இருக்கவேண்டி யது அவசியம்.

மார்லோ:—உன் பில்லைக்கொண்டுவா ; உன்னையும், உன்னுடைய லக்ஷணமான வீட்டையும் விட்டு இந்தச் விநாடியே கிளம்பிவிடுகிறேன்.

ஹார்ட்காஸில்:—ஒரு கண்ணாடி அமைத்த மேஜை யிருக்கிறது ; கருங்காலி மரத்தால் செய்யப்பட்டது ; கண்ணாடியில் உங்கள் முகத்தைப் பார்த்துக்கொள்ளலாம்.

மார்லோ:—இதென்னடா தொல்லையா யிருக்கிறது? என்னுடைய பில்லைக் கொண்டுவா.

ஹார்ட்காஸில்:—சொல்ல மறந்துவிட்டேன். ஈஸீ செயர் கூட இருக்கிறது ; சாப்பிட்டுவிட்டு காலை நீட்டிக் கொண்டு சயனத்தில் சுகமாக இருக்கலாம்.

மார்லோ:—உஸ்! அதிகமாகப் பேசாதே. என்னுடைய "பில்" எங்கே?

ஹார்ட்காஸில்:—[நிதானமாக] அப்பா, குழந்தே! உன் தகப்பனர் உன்னை யோக்யன், மட்டு மரியாதை தெரிந்தவன் என்று எழுதி அனுப்பியதிலிருந்து, யோக்யப் பொறுப்புள்ள விருந்தாளி வரப்போகிருன் என்று எதிர்ப்பார்த்தேன். இங்கே என்னடான்ன! காட்டுமிராண்டித்தனமாக ஒரு தடிப்பயல் என் எதிரில் நிற்கிருன். உன் தகப்பனரும் இங்கு சீக்கிரம் வந்துவிடுவார்; விஷயங்களை எல்லாம் பூரு அவரே நேரில் தெரிந்துகொள்ளட்டும். [போகிருர்]

மார்லோ:—[தனக்குள்] என்னது இது? வீட்டை ஹோட்டல் என்று நினைத்துவிட்டேன என்ன? எதைப் பார்த்தாலும் ஹோட்டல் மாதிரியாகவே இருக்கிறதே. வேலையாட்கள் எல்லாம் அங்குமிங்கும் நினைத்தபடி போய்க்கொண்டு கூச்சல் போட்டுக்கொண்டிருக்கிருர்கள்; கவனிப்போ, தாறுமாருக இருக்கிறது; சிற்று வேலைக்காரி கூட ஹோட்டலில் இருப்பதுபோல் இருக்கிருள். இதோ வருகிருளே. கேட்போமே. எங்கே அவ்வளவு அவசரமாகப்போகிருயம்மா; இங்கே வா. ஒருவார்த்தை.

[கேட் சிற்று வேலைக்காரி உடையில் வருகிருள்]

கேட்:—சீக்கிரம் சொல்லுங்கள்; எனக்கு சாவகாசமில்லை [தனக்குள்] ஓஹோ! தான் தப்பிதமாக இந்த வீட்டைப்பற்றி நினைத்துக்கொண்டிருப்பது தெரிந்து

விட்டதுபோலிருக்கிறது. இருந்தாலும் கொஞ்சம் வேடிக்கை பார்க்கலாம்;

மார்லோ:—குழந்தே! தயவுசெய்து ஒரு கேள்விக்கு மாத்திரம் பதில் சொல்லு. நீ யார்? இந்த வீட்டில் உனக்கு என்ன வேலே?

கேட்:—இந்த வீட்டுக்காரர்களுக்குச் சொந்தம் நான்.

மார்லோ:—சொந்தம் என்கிருயே? ஒருவேளே நீ ஏழையோ?

கேட்:—ஆம் ஐயா ஏழைதான். இந்த வீட்டுச்சாவி களே வைத்தும், வந்தவர்களே என்னுல் கூடுமானவரையில் உபசரித்துக் கவனிக்கச் சொல்லியும் உத்திரவிட்டிருக்கி ருர்கள்.

மார்லோ:—அதாவது நீ இந்த ஹோட்டல் சிற்று வேலேக்காரியா?

கேட்:—ஹோட்டலா! அட பாவமே! இதை எவ் விதம் ஹோட்டல் என்று நீனேத்தீர்கள்? இந்தப் பக்கங் களில் மிகவும் பெயர்போன குடும்பஸ்தர் வீடு, ஹோட்ட லாகிவிட்டதா? ஹா! ஹா! ஹா! பேஷ்! மிஸ்டர் ஹார்ட்காஸில் அவர்களுடைய வீடு, ஹோட்டலா!

மார்லோ:—ஹார்ட்காஸிலுடைய வீடா? குழந்தை நிஜத்தைச் சொல்லு; இது அவர் வீடா!

கேட்:—நிச்சயமாகவே சொல்லுகிறேன். வேறு என்னவென்று நினைத்தீர்கள்.

மார்லோ:—இனிமேல் என்ன இருக்கிறது? என்னை யாரோ படுமோசமாக இதை ஹோட்டல் என்று சொல்லி ஏமாற்றி விட்டார்கள். எனக்குத்தான் புத்தி எங்கு போய்விட்டது? ஊர் சிரிக்கும்படி நடந்துகொண்டு விட்டேனே. தெருத் தெருவாக என் பெயர் இதைக் கேட்டதும் சந்தி சிரிக்குமே. இதை ஹோட்டல் என்றும் என் தகப்பனுருடைய ஆப்த நண்பராகிய மிஸ்டர் ஹார்ட்காஸிலை ஹோட்டல்காரர் என்றும் எவ்விதம் நினைத்தேன்? அவர் என்னை எவ்வளவு போக்கிரி என்று நினைக்கக்கூடும்? நான் எப்பேர்ப்பட்ட மடையன் என்று எனக்குப் புலப்படுகிறது? என்ன மடத்தனம்? உன்னை ஒரு ஹோட்டல் சிற்று வேலைக்காரி என்று எண்ணியிருந்தேன்.

கேட்:—எ.........ன்.........ன? என்ன? அவ்வளவு கேவலமாக என்னை நினைக்கும்படி நான் நடந்து கொண்டேனு என்ன?

மார்லோ.—இல்லேம்மா, இல்லை. எவ்வளவோ தப்பிதமான எண்ணங்களில் அதொன்று; என் மதியீனத்தால் எல்லாவற்றையும் தப்பிதமாகவே முதலிலிருந்து கடைசிவரையில் எண்ணிவிட்டேன். என்னை நீ கவனிப்பதை, இச்சையினுல் என்றும், உன் அமைதியான தோற்றத்தையும், உடையையும் கண்டு, என்

மனதைக் கவர அவ்விதமிருக்கிறாய் என்றும், நினைத்து விட்டேன். இனி அவ்விதம் ஏற்படாது. இந்த வீட்டில் என் முகத்தைக்காண்பிக்க யோக்யதையில்லை.

கேட்:— ஐயா! உங்கள் மனம் கசியும்படி நான் நடந்துகொள்ளவில்லையென நினைக்கிறேன். என்னுடன் இவ்வளவு பிரியமாகவும், அன்புடனும் அழகிய வசனங் களினாலும், கௌரவப்படுத்தியவரை வீட்டை விட்டுப் போகும்படி அலக்ஷ்யமாக நடத்தினேன் என்று நினைக்க வருத்தமாயிருக்கிறது, எனக்கு மிகவும் வருத்தமாக ............ (அழுவதுபோல் பாசாங்கு செய்கிறாள்) என்றால் நீங்கள் வெளியில் போகிறீர்கள் என்று கேட்க மனம் அலறுகிறது. இதைக்கேட்டு, என் நடத்தையைப்பற்றி பிறர் தோஷம் சொல்லாமலிருக்கவேண்டுமே என்று இருக்கிறது. என்னிடம் பணம் ஒன்றும் கிடையாது; ஒழுங்குள்ள நடத்தையே 'தனம்' என்று நினைத்து அதைத்தான் நம்பியிருக்கிறேன்.

மார்லோ:— (தனக்குள்) என்ன செய்வது; அழுகிறாளே, என் மனதை உறுக்குகிறது. (அவளிடம்) பிரியமுள்ள குழந்தே, என்னை மன்னிக்கவும்; உன்மேல் ஒரு குறையுமில்லை. உன்னை விட்டுப் பிரியவேண்டுமே என்ற வருத்தத்துடன் தான் கிளம்புகிறேன். உன்னிடம் சொல்லுவதற்கென்ன? நம்மிருவருக்குள் உள்ள வித்தியாசத்தினால், அதாவது, பிறப்பு, வளர்ப்பு, படிப்பு, செல்வம் முதலிய விஷயங்களில் உள்ள தாரதம்மியத்தினால், நம்மிருவரும் மணம்புரிய முடியாமல்

தடையாக இருக்கின்றன. என்னை நீ நம்பியிருந்ததற்கு, உன் தூய்மையான குணத்திற்கும், மாசற்ற கற்பிற்கும் கேடு வரும்படி ஒருநாளும் நான் நடந்துகொள்ள மாட்டேன்? ஆனால் உனக்கு உன் அழகுதான் தோஷம்.

கேட:— [தனக்குள்] எவ்வளவு உன்னதமான மனிதர்? எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. [மார்லோவிடம்] நான் ஏழையாயிருந்தபோதிலும், என் அந்தஸ்தும் குலமும், ஹார்ட்காஸிலுடைய பெண்ணின் அந்தஸ்திற்கும், குலத்திற்கும் சரி சமமானது. பணமில்லாதது ஓர் குற்றம் என்று இதுவரையில் நான் கனவிலும் நினைக்கவில்லை.

மார்லோ:—ஏன்! இதுவரையில் என்கின்றாய்? இப்பொழுது அவ்விதம் நினைக்கக்காரணம் என்ன குழந்தே!

கேட்:—ஏனெனில் என்னிடம் ஐச்வர்யம் இருந்தால் அதையெல்லாம் தியாகம் செய்து கிடைக்கக்கூடிய புருஷனை, என் ஏழ்மைத்தனம் கிடைக்காமல் செய்துவிட்டது.

மார்லோ:—[தனக்குள்] இவ்வளவு வெகுளித்தன்மை என் மனதை இழுக்கிறது; இனி தாமதித்தால் என் மனம் சகிக்காது; நான் கிளம்ப முயற்சி செய்வதுதான் நல்லது. [அவளிடம்] நீ என்னைக்காதலிப்பது என் மனதில் ஊடுருவிப் பாய்ந்திருக்கிறது; என் இஷ்டம்போல் நடக்க எனக்கு அதிகாரமிருந்தால், உன்னையே மணப்பேன்; ஆனால் உலகத்தோர் நினைப்பதற்கும், என்

தகப்பனுர் கட்டளைக்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டியிருக்கிறது. எனக்கு மேலும் பேச நா எழவில்லை—மிகவும் வருத்தமாயிருக்கிறது. நான் போய் வருகிறேன். [போகிருர்.]

கேட்:— அவருடைய பெருந்தன்மையான குணங்களில் பாதிகூட இதுவரை நான் அறியவில்லையே. எனக்கு சாமர்த்தியமும் வாக்குச் சாதுர்யமும் இருக்குமாஞல், அவர் கிளம்பிப் போகாமல் எவ்விதமாவது தடுத்துவிடுவேன். இவ் வுடையையே தரித்து, சிற்று வேலைக்காரி மாதிரியாகவே இருந்து "ஜெயமடையவே பணிகிருள்" என்று நினைக்கும்படி செய்து, தாழ்மையின் வெற்றியைக் காண்பிப்பேன். என் தகப்பனுர் எண்ணியது தவறு என்று ரூபித்து, அவர் பிரதிக்ஞையை மாற்றி சிரிக்கும்படி செய்வேன். [போகிருள்.]

[டோனியும், மிஸ் நேவிலும் வருகிருர்கள்.]

டோனி:—ரொம்ப அழகுதான் போ. இனி என்ஞல் முடியாதம்மா. நீதான் உன் நகைகளை மறுபடியும் திருடி எடுத்துக்கொள்ளவேண்டும். என்ஞல் கூடியதை உனக்குச் செய்துவிட்டேன். என் தாயாரிடம் மறுபடியும் நகைகள் போய்ச் சேர்ந்துவிட்டன. அதில் சந்தேகமே இல்லை; எதோ வேலையாட்களின் தவறுதலால் இவ்விதம் நடந்திருக்கிறது என்று எண்ணியிருக்கிருள்.

மிஸ் நேவில்:—என்ன அத்தான்? நாங்கள் தவித்துக்கொண்டிருக்கும்பொழுது இவ்விதம் கைவிடலாமா?

நான் ஓடிப்போவதாக சிறிதேனும் சந்தேகம்தோன்றினுல் அவள் என்னைப் பூட்டிவைப்பாள்; அல்லது அந்தப்பெரிய யமன் பேடிக்ரீ வீட்டிற்கு அனுப்பிவைப்பாள்.

டோனி:— ஆமாம்; அத்தைகள் எல்லாம் யமன் தான். ஆனுல், நான் என்ன செய்ய முடியும்? மனே வேகமாய் பறக்கும் ஒரு ஜோடி குதிரைகள் தயாரித்து வைத்திருக்கிறேன். அவள் சந்தேகிக்காதபடி அவள் எதிரில் உன்னைக் காதலிப்பதுபோல் கொஞ்சியுமிருக் கிறேன். அவளும் இதோ வருகிருள்; அவள் சந்தேகிக் காதபடி கொஞ்சுவதுபோல் பாசாங்கு செய்வோம்.

[இருவரும் கொஞ்சுகிருர்கள்.]

[டோனி தாயார் வருகிருள்.]

டோனி தாயார்:—எனக்கு உடம்பெல்லாம் படபடப் பாகப் போய்விட்டது. என் குழந்தை டோனி, "அதெல் லாம் வேலைக்காரனின் தவறுதலாக இருக்கும்" என்று சொல்லுகிருன். இருந்தபோதிலும், அவன் நெவிலை மணந்துகொள்ளும் வரையில் கவலையாகத்தானிருக்கும்; அப்புறம் அவர்கள் பாடு; அவர்கள் சொத்தை அவர் களே பார்த்துக்கொள்ளுகிருர்கள்.—இதென்ன ஆச்சர் யம்? அவர்களிருவரும் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக் கிருர்களே. இது கனவா? அல்லது உண்மையா? டோனி யை இவ்வளவு உத்ஸாகத்துடன் இதற்குமுன் பார்த்ததே யில்லையே. ஆ! என் கண்ணுகளா? இப்படித்தான் இருக்க வேண்டும்;

கொஞ்சி, குலாவி, கடைக்கண்ணுல் பார்த்துக்கொண்டு முணுமுணு என்று மிருதுவாகப் பேசிக்கொண்டு—இதுதான் சரி.

டோனி:—அம்மா, முணுமுணுத்துக்கொண்டுதான் சில நேரங்களில் இருக்கிறோம். எங்கள் காதல் மாத்திரம் வளரவில்லை.

டோனி தாயார்:— அப்படி, அப்படிப் பேசிக் கொண்டே இருந்தால், தானே நன்ருக வளர்ந்துவிடும்.

மிஸ் நேவில்:—அத்தான், இனி வீட்டைவிட்டு அதிக மாகக் கிளம்புவதில்லை யென்றும், நம்முடன் கூடவே இனி இருக்கப் போவதாகவும் சொல்லியிருக்கிருர். இல்லே அத்தான்?

டோனி:—ஓ! நீ எவ்வளவு அருமையான பெண்? இவ்வளவு வசீகரமாக சிரிக்கும்பொழுது, என் பிரியமான குதிரையை பவுண்டில் விட்டாலும் விட்டுவிடுவேன்; உன்னை விடுவேனு? உன் புன் சிரிப்பு உனக்கு எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது?

மிஸ் நேவில்:-தங்கமான அத்தான்; யார்தான் நீங்கள் வேடிக்கையாக சிரிப்புவரும்படிப் பேசுவதையும், [அவன் கன்னத்தைத் தடவிக்கோண்டே] இந்த சிரித்த, அகண்ட, சிவந்த, மதியில்லாத — ஆஹா! என்ன தீவிரமான முகம்!

டோனி தாயார்:—கபடமே கிடையாது. பாவம்.

டோனி:— எனக்கும் நெவிலுடைய பஞ்சடைத்தாற் போலுள்ள பூனைக்கண்ணும், அழகிய நீண்ட கைவிரல் களும் பிடித்திருக்கிறது. கையை கோர்த்துக் கொண் டால் பிரப்பங்கூடைமாதிரி இருக்கிறது.

டோனி தாயார்:—ஆ! அவன் வாய் ஜாலகன். என் மனம் இப்பொழுதுதான் குளிர்ந்திருக்கிறது; இவ்வளவு சந்தோஷமாக ஒரு பொழுதும் இதுவரையில் இருந்ததே யில்லை. என் குழந்தை டோனி, என் முதல் புருஷன் லம்கின் மாதிரியாகவே அதே விதம் இருக்கிறான். நெவில்! நகையெல்லாம் உனக்குத்தான் அம்மா, சந்தேக மில்லாமல் உனக்குத்தான். நீயே வைத்துக்கொள். டோனி, மிகவும் அருமையான பையன் இல்லையா? நாளைக்கு நீ கலியாணம் செய்துகொண்டு விட்டால், அவ னுடைய படிப்பைப்பற்றி சமயம் வந்தபோது பார்த்துக் கொள்ளலாம்.

[டிக்கரி வருகிறான்]

டிக்கரி:—சின்ன யஜமானர் எங்கே? யஜமான், தங்களுக்கு ஒரு கடிதம் கொண்டுவந்திருக்கிறேன்.

டோனி:—அம்மாவிடம் கொடு; அவள்தான் என் கடிதங்களை யெல்லாம் முதல் முதலில் படிக்கிறாள்,

டிக்கரி:—தங்கள் கையில் நேரில் கொடுக்கும்படி எனக்கு உத்தரவுங்க.

டோனி:—யாரிடமிருந்து வந்திருக்கிறது?

டிக்கரி:—யஜமான் அந்தக் கடிதத்தைத்தான் கேட்கு றுங்க.

டோனி:—எனக்கும் இதில் இருப்பது தெரிந்தால் தேவலேதான். [லெட்டரை இப்படியும் அப்படியுமாக புரட்டி உற்றுப் பார்க்கிறுன்].

மிஸ் நெவில்:— [தனக்குள்] துலேந்து போய்விட் டோம்! ஹேஸ்டிங்ஸிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது; அதை அத்தை பார்த்துவிட்டால் மோசம் போய்விடும். அவள் அதைப் பார்க்காமலிருக்கும்படி பேச்சுக்கொடுத் துப் பார்க்கிறேன். [டோனி தாயாரிடம்] அத்தை! உங்க ளிடம் முன்னுல் சொல்லவில்லேயே; சற்றுமுன் மார்லோ வுக்குப்பளீர் என்று அத்தான் பதில் சொல்லி அவனை திகைக்க வைத்ததைப்பற்றிச் சொல்லவில்லேயே. எங்க ளுக்கெல்லாம் சிரிப்பா வந்தது.—உங்களுக்கு அதைக் கட்டாயம் சொல்லியாகவேண்டும்—இந்தப்பக்கம் வாருங் கள்; அவர் காதில் படக்கூடாது.

[இருவரும் தனித்து நின்று பேசுகிறுர்கள்].

டோனி:—[கடிதத்தை உற்றுப் பார்த்துக்கொண்டே] நல்ல எழுத்துடா இது! தலேயெழுத்து மாதிரி; இவ்வளவு கோணலாக நான் என் ஆயுளில் பார்த்ததேயில்லே. நிறுத்தி, அச்சுமாதிரி இருந்தால் படிக்கலாம். இங்கே ஒரு கோடு—, அங்கு ஒரு கோணல்; அப்புறம் ஒரு கிறுக் கல்;—ச்சீ! இந்த கடிதத்தில் தலேகால் புரியவில்லே. வெளி யில் 'டோனி அவர்களுக்கு' என்று என் பெயரை எழுதி

யிருப்பதால் எப்படியோ தட்டு கிட்டு படித்துவிட்டேன். அதைத் திறந்து பார்த்தால் —, ப்பூ! ஒரே குளறல்; ஒன்றுமே புறியவில்லை; விலாசத்தைப் படித்தால் என்ன பிரயோஜனம்? கடிதத்தின் உள்ளேதானே சத்து இருக்கிறது.

டோனி தாயார்:—[நேவிலிடம்] ஹா! ஹா! ஹா! ரொம்ப சந்தோஷம் ரொம்ப சந்தோஷம்; டோனி அவ்வளவு சாமர்த்தியமாகப் பேசினுனு?

மிஸ் நேவில்:—ஆம்; இன்னும் பூராவையும் கேளுங்கள். இந்தப்பக்கம் சற்று வாருங்கள்; அத்தான் கேட்கக்கூடாது. அவர், மார்லோவை எப்படி திகைக்கவைத்தார் என்று சொல்லுகிறேன்.

டோனி தாயார்:—இப்பொழுது டோனியைப் பார்த்தால், அவன்தான், எதையோ பார்த்துத் திகைத்துக் கொண்டிருப்பது போலிருக்கிறதே.

டோனி:—[கடிதத்தையே இன்னும் முழித்துப் பார்த்த வண்ணம்] என்னடா உபத்திரவம்! குடித்தவன் மேலும் கீழுமாகக் கிறுக்கி எழுதினமாதிரி இருக்கிறது! [படிக்கிறான்.] 'அன்புள்ள ஐயா'—, அது புறிந்துவிட்டது; அப்புறம் இங்கே ஒரு 'ம' தெரிகிறது, அங்கே ஒரு 'த' வும் 'டி' யும் இருக்கிறது; அடுத்த எழுத்து? 'ர்ராவா', அல்லது 'கா' என்றுவது — தலைவலிக்கும், போலிருக்கிறது — ஒன்றுமே புறியவில்லை.

டோனி தாயார்:—என்ன குழந்தே! முழித்துக் கொண்டிருக்கிறுய். நான் உனக்கு உதவி செய்யட்டுமா?

மிஸ் நேவில்:— அத்தை! நான் வாசிக்கிறேன்; கூட்டெழுத்தை என்போல் ஒருவரும் படிக்கமுடியாது. [அவன் கையிலிருந்து கடிதத்தை வேகமாகப் பிடிங்கிக் கொண்டு] யாரிடமிருந்து அது வந்திருக்கிறது தெரியுமா?

டோனி:—தெரியவில்லே; ஒரு வேளே டிக்ஜின்ஜர் என்பவனிடமிருந்து வந்திருக்கோ என்னமோ.

மிஸ் நேவில்:- அதேதான். [வாசிப்பதுபோல் பாவனே செய்கிறுள்].

அன்புள்ள ஐயா,

நான் இவ்விடம் சௌக்கியம்; நீங்களும் சுகமாக என்னைப்போல் இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். 'ஷேக் கிளப்' மெம்பர்கள் 'கூஸ் கிளப்' மெம்பர்களை ஒரு பெறட்டு பெறட்டிவிட்டார்கள். அதிலேயிருந்து — உம்,உம் — சண்டை—உம்,உம்— பெருத்த குஸ்தி—உம் உம்—எல்லாம் சண்டையையும் கூச்சலைப்பற்றியும் தானிருக்கிறது; முக்கியமான விஷயம் ஒன்றுமில்லே; இதை நீங்களே எங்கேயாவது போடுங்கள். [கசக்கி கடிதத்தை டோனியின் கையில் திணிக்கிறுள்].

டோனி:—சரியாப் போச்சு! முக்கியமான விஷயமில்லேயா? அதுதான் எனக்கு முக்கியம். அதிலிருப்பது

என்னவென்று தெரிந்துதான் ஆகவேண்டும்; அம்மா, இதை நீ படி. உனக்கு புறிகிறதோ பார்ப்போம். முக்கியமான விஷயம் இல்லையா......! [ கடிதத்தை தாயாரிடம் கொடுக்கிறான்.]

டோனி தாயார்:—இதென்னடாது !? [படிக்கிறாள்]

என் பிரியமுள்ள டோனிக்கு,

நான் தோட்டத்தின் ஓரத்தில் மிஸ் நெவிலுக்காக, ஒரு கோச் வண்டியுடன் காத்துக்கொண்டிருக்கிறேன். என் குதிரைகள் களைப்புடன் இருக்கின்றன; ஆதலால் உன் வாக்குறுதிப்படி ஒரு நல்ல ஜோடிக் குதிரைகள் கொடுத்து உதவிசெய்வாயென்று நம்பி இருக்கிறேன். அவசியம் உடனே போய்விடவேண்டும்; இல்லாவிட்டால் அந்த கிழம் (அந்த பொல்லாத கிழம்) உன் தாயார், எங்களை சந்தேகித்துவிடுவாள்.

உன் பிரியமுள்ள,
ஹேஸ்டிங்ஸ்.

இதென்னடி அதிசயம்! என் மார், பட பட வென்கிறதே; பித்துப்பிடித்துப்போய்விடும் போலிருக்கிறதே. இந்த அநியாயம் தாங்கவில்லையே.

மிஸ் நெவில்:—அத்தை! சற்று பொறுங்கள்; நான் நிரபராதி; இந்தக்கடிதத்திற்கும் எனக்கும் ஒரு சம்பந்தமுமில்லை; வேறொருவர் செய்த குற்றத்திற்கு நான்

காரணம் என்று நினைக்காதிருக்கும்படி மன்றாடி வேண்டிக்கொள்கிறேன்.

டோனி தாயார்:—[ஈனக்குரலில்] நல்ல ஜாலம்டி அம்மா; எவ்வளவு புத்திசாலித்தனமாகவும், மட்டுமரியாதையுடனும், அமரிக்கையே அவதாரம் எடுத்த மாதிரி இருக்கிறாயம்மா? [குரலைமாற்றி அதட்டிய வண்ணம்] நன்றிகெட்ட கழுதை! உன் வாயைமூடு; நீயுமா துரோகம் செய்ய ஆரம்பித்துவிட்டாய்? இதோபார்; உன் சூழ்ச்சி எல்லாம் ஒரு நிமிஷத்தில் தொலைத்துவிடுகிறேன். நீ தான் தோட்டத்தின் ஓரத்தில் வண்டி, குதிரைகள் எல்லாம் வைத்துக் கொண்டிருக்கிறாயே. அதை வீணாக்கலாமா? உன் காதலனோடு ஓடுவது கிடக்கட்டும்; என்னோடு கிளம்பத் தயாராக இரு. இருடிம்மா இரு. உன் பெரிய அத்தை பேடிக்ரீ ரொம்ப நன்னா உன்னை வைத்துக்கொள்ளுவாள். [டோனியைப் பார்த்து] நீ எங்களுக்கு வழிகாண்பிக்கவும், காவலுக்கும் வேண்டும் நீயும் கிளம்பு. யாரடா அவன்? தாமஸ்! ரோஜர்! டிக்கிரி! [வேலைக்காரனைக் கூப்பிட்டுக்கொண்டே போகிறாள்] உனக்கு சொல்லித்தரேம்மா; சொல்லித்தரேன்.

[போகிறாள்]

மிஸ் நேவில்:—நான் இனி தொலைந்துவிட்டேன்.

டோனி:—அதற்கென்ன சந்தேகம்?

மிஸ் நேவில்:—இவ்வளவு வடிகட்டின மடையனோடு சேர்ந்தால் என்னதான் கிடைக்கும்? கடிதத்தைக்

கொடுக்காதே என்று தலையை அசைத்து எவ்வளவு ஜாடை காட்டினேன்? ஒன்றுமா மண்டையில் எட்டாது?

டோனி.—என்னுடைய மடத்தனமல்ல; உன்னுடைய அதிக சாமர்த்தியம் தான் இதற்குக் காரணம். நீ 'ஷேக் கிளப்' 'கூஸ் கிளப்' என்று என்னல்லாமோ நம்ப முடியாமல் புளுகிஞய்.

ஹேஸ்டிங்ஸ் வருகிருர்.

ஹேஸ்டிங்ஸ்:—ஸார்! என் கடிதத்தை காண்பித்து மோசம் செய்துவிட்டீர்கள் என்று என் வேலையாள் மூலம் அறிந்தேன்; இது நியாயமா? உங்களுக்கே பிடித்திருக்கிறதா?

டோனி:—அவளைக்கேளுங்கள், யார் காண்பித்துக் கொடுத்தாள் என்று. எல்லாம் அவளுடைய சாமர்த்தியத்திஞல் தான்.

மார்லோ வருகிருர்.

மார்லோ:—நீங்கள் எல்லோரும் என்னை மிகவும் கௌரவமாக இருக்கும்படி செய்து விட்டீர்கள். ஊர் சிரிக்கும்படி, கேவலமாகவும் ஏளனமாகவும் என்னை பிறர் நினைக்கும்படி செய்துவிட்டீர்கள்.

டோனி:—சரி! இதோ ஒரு பயித்தியம் வந்துவிட்டதா? சற்று நேரத்தில், ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியை திறந்துவிட்டது போல் ஆகிவிடும் போலிருக்கிறது.

மிஸ் நேவில்:—அதோ நிற்கிறதே; அந்தக் குழந்தை தான் எல்லாவற்றிற்கும் காரணம்.

மார்லோ:—அது பால்ய வயதுடனும், முழு மூடமாகவும் இருக்கிறது; அதை நினைத்துத்தான் அதனிடம் கோபித்துக்கொள்ள முடியவில்லை.

ஹேஸ்டிங்ஸ்:—இந்த மதியில்லாக் குரங்கை எங்கேயாவது திருத்த முடியுமா?

மிஸ் நேவில்:—நாம் படும் கஷ்டத்தைப் பார்த்து சந்தோஷமடைய வேண்டிய குறும்பும் போக்கிரித்தனமும் மாத்திரம் குறைவில்லாமலிருக்கிறது.

ஹேஸ்டிங்ஸ்:—உணக்கை கெட்ட ஜன்மம்.

மார்லோ:—பொறுக்க முடியாத விஷமமும், போக்கிரித்தனமும் தான் மிச்சம்.

டோனி:—ஓஹோ! ஒவ்வொருவராக என்னிடம் சண்டைக்கு வரப்போகிறீர்களா? நான் பார்த்துக் கொள்ளுகிறேன்.

மார்லோ:—அவனுக்கு வெட்கம் ஏது? ஆனால், ஹேஸ்டிங்ஸ்; உங்கள் நடத்தைக்குச் சரியான காரணம் சொல்லவேண்டும்; நான் இந்த வீட்டை "ஹோட்டல்" என்று தப்பு அபிப்பிராயத்துடன் இருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரிந்தும், என்னை ஏன் திருத்தவில்லை?

ஹேஸ்டிங்ஸ்:—நான் அவஸ்தைப் பட்டுக்கொண்டு, கொட்டு வாயிலிருக்கும்பொழுது, என்னை இதெல்லாம் கேட்பதற்கு இதுவா சமயம்?

மார்லோ:—இருந்தபோதிலும் நீங்கள் ...,

மிஸ் நேவில்:—நாங்கள் உங்களிடம் வேண்டுமென்று மறைக்கவில்லை; சொல்லுவதற்குள் விஷயம் முற்றிவிட்டது.

வேலையாள் வருகிறான்.

வேலையாள்:—அம்மா! யஜமானியம்மா உங்களை உடனே கிளம்பச் சொன்னாங்க. குதிரை, வண்டியில் பூட்டியாய்விட்டதுங்க. உங்கள் தொப்பி சாமான் எல்லாம் அடுத்த உள்ளே இருக்குங்க. பொழுது விடிவதற்கு முந்தி 30 மைல் போகவேண்டுமாம்.

[ வேலைக்காரன் போகிறான் ]

மிஸ் நேவில்:—சரி, போ; நான் இதோ வந்துவிட்டேன்.

மார்லோ:—[ ஹேஸ்டிங்ஸிடம் ] என்னை எல்லோரும் ஏளனம் செய்யும்படி இடங்கொடுத்தது நியாயமா? பிறர் சிரிக்கும்படி என்னை கேவலப்படுத்தலாமா? எனக்கு இந்தச் செய்கைக்கு சரியானபடி பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்; இல்லாவிட்டால் சும்மா விடமாட்டேன்.

ஹேஸ்டிங்ஸ்:—அவ்வளவு முறுக்காக இருந்தால், நான் உங்களை நம்பி ஒருவஸ்துவை கொடுத்ததிற்கு, அதை நீர் மாத்திரம் பிறரிடம் கொடுத்தது ஒழுங்கோ?

மிஸ் நேவில்:—மிஸ்டர் ஹேஸ்டிங்ஸ்! மிஸ்டர் மார்லோ! ஒன்றுமில்லாததிற்கு வீண் சண்டை போட்டு, என் வேதனைப்பட்டமனதை இன்னும் ஏன் புண்படுத்துகிறீர்கள்? நான் உங்களிருவரையும் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்; இந்தச் சண்டை வேண்டாம்.

வேலைக்காரன் வருகிறான்.

வேலைக்கான்:—இந்தாங்கம்மா; உங்கள் துணிமணிகள்; அம்மா அவசரப்படராங்க. [போகிறான்]

மிஸ் நேவில்:—இதோ வந்துவிட்டேன். நீங்கள் இருவரும் இவ்விதம் சண்டை போட்டுக் கொண்டால் என் மனது உடைந்துவிடும்.

[ வேலையாள் வருகிறான் ]

வேலையாள்:—இதோ உங்கள் விசிறி, மப்ளர், கை குட்டை. அம்மா! குதிரை தயாராயிருக்குங்க.

[போகிறான்]

மிஸ் நேவில்:—மார்லோ! நீங்கள் மாத்திரம் நான் போகுமிடத்தில் என்னென்ன அவஸ்தைக்கும் கோபத்திற்கும் உட்படுவேன் என்று கொஞ்சமேனும் அறிந்தால், இவ்விதம் சண்டை போடாமல் என்மேல் பச்சாதாபப்படுவீர்கள்.

மார்லோ:—எனக்கு மனதில் ஏற்பட்டிருக்கும் பல வேதனைகளினால் நான் என்ன செய்கிறேனென்று எனக்கே புரியவில்லை. என்னை மன்னித்துவிடு. ஹேஸ்டிங்ஸ்! நீயும் என்னை மன்னித்துவிடு. என் முன்கோபம் தான் உனக்குத் தெரியுமே. அப்படியிருக்க அதைக்கிளப்பி விட்டு வேடிக்கை பார்க்கலாமா.

ஹேஸ்டிங்ஸ்:—நான்படும் அவஸ்தைதான் காரணம்.

மிஸ் நேவில்:—அருமை ஹேஸ்டிங்ஸ்! நாம் நம்பியிருக்கிற விதம் நீங்கள் உண்மைக் காதலுடன் இருக்கும் பக்ஷத்தில், இன்னும் மூன்று வருஷங்களுக்குப் பிறகு நானே சுயேச்சையாக உங்களை மணந்துகொண்டு சந்தோஷித்து இருக்கலாம். ஆனால்——

டோனி தாயார்:—[ உரக்க கோபத்துடன் உள்ளேயிருந்து கூப்பிடுகிறாள் ] நெவில்! நெவில்! நெவில்!

மிஸ் நேவில்:—இதோ வந்துவிட்டேன் அத்தை. ஹேஸ்டிங்ஸ், என்னை மறந்துவிடாதீர்கள்; உறுதியான எண்ணத்துடன் இருங்கள். [போகிறாள்]

ஹேஸ்டிங்ஸ்:—இதை எவ்வாறு சகிப்பேன். சந்தோஷமாயிருப்பேன் என்ற மனோராஜ்யமெல்லாம் உடைந்துவிட்டதே.

மார்லோ:—[ டோனியிடம் ] உன் புத்தியில்லாச் செய்கையின் விபரீதத்தை பார்த்தாயா? உனக்குக் கொண்டாட்டமாயிருப்பது எல்லோருக்கும் திண்டாட்டமாகி விட்டது.

டோனி:—[ ஆழ்ந்த யோஜனையிலிருந்து எழுந்திருப்பவன் போல் ] அதாண்ட சரி; நல்ல யோசனை தோன்றியது, அழுமூஞ்சிகளா! நீங்கள் பேசாமலிருங்கள்; அழாமல் எனக்குக் கை கொடுத்துக் குலுக்குங்கள்— ஏய்! யாரது! என் பூட்ஸை கொண்டுவா. நீங்கள் இன்னும் இரண்டு மணிநேரம் கழித்து தோட்டத்தின் கோடியில் பாருங்கள். டோனி நல்ல பையன்தான் என்று ரூபிக்காத பக்ஷத்தில் என்னை என்ன வேண்டுமென்றாலும் செய்து கொள்ளுங்கள். வாடா இங்கே; பூட்ஸ் எங்கே?

[ போகிறான் ]

---

## ஐந்தாவது பாகம்

[ ஹேஸ்டிங்ஸும், வேலையாளும் வருகிறார்கள் ]

ஹேஸ்டிங்ஸ்:—அந்தக்கிழ அம்மாவும், மிஸ் நெவிலும் கிளம்பிப் போனதை நேரில் பார்த்ததாகவா சொல்லுகிறாய்?

வேலையாள்:—ஆமாங்க, யஜமான். ஒரு கோச்வண்டியில் போனாங்க; டோனி யஜமானரு குருதேலே போனாங்க.

ஹேஸ்டிங்ஸ்:—என் எண்ணங்கள் எல்லாம் வீணாய்ப் போயின.

வேலையாள்:—மார்லோ யஜமானருடைய தகப்பனுர் கூட, வந்துட்டாங்க. அவர்களும் எங்கவீட்டு யஜமானரும் மார்லோ பண்ணின தப்புகளையெல்லாம் நினைச்சு, நினைச்சு அரைமணி நேரமா சிரிச்சுக்கிட்டிருக்காங்க. அவங்களும் இதோ வராங்க.

ஹேஸ்டிங்ஸ்:—அவ்விதமானுல் நான் இங்கு இருக்கக்கூடாது. தோட்டத்தில் டோனி சொல்லியபடி போய் காத்திருக்கிறேன். எனக்கு நம்பிக்கை இல்லை; இருந்தாலும் போகிறேன்.

[ போகிருன் ]

[ மார்லோவின் தகப்பனுர் ஸர் சார்லஸும் ஹார்ட்காஸிலும் வருகிருர்கள் ]

ஹார்ட்காஸில்:—ஹா! ஹா! ஹா! அவனுடைய கம்பீரமான உத்திரவுகளை யெல்லாம் எவ்வளவு அதிகாரத் தோரணையில் இருந்தன?

ஸர் சார்லஸ்:—நீங்கள் பேசவரும் போதெல்லாம், கொஞ்சம் மௌனமாகத்தானே இருந்திருப்பான்.

ஹார்ட்காஸில்:—என்னவிருந்தாலும், என்னை அவன் ஒரு சாதாரண ஹோட்டல்காரன் என்று நினைத்திருக்கவேண்டாம்.

ஸர் சார்லஸ்:—ஒரு வேளை உயர்ந்த ஹோட்டல்காரர் என்று நினைத்துவிட்டானே என்னமோ? ஹா! ஹா! ஹா!

ஹார்ட்காஸில்:— எது எவ்விதமாயிருந்தால் தான் என்ன? என் மனதில் இப்பொழுது சந்தோஷத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லை. இந்த சம்மந்தம் நம்மிருவர் குடும்பத்தில் ஏற்படுவதின் நிமித்தம், தலைமுறையாக இருவர் குடும்பத்திற்கும் சிநேகம் ஏற்பட்டுவிடும்; என் மகளுக்கு அதிக பூஸ்திதி இல்லாவிட்டாலும் —,

ஸர் சார்லஸ்:— அதைப்பற்றி எதற்கு என்னிடம் பேசுகிறீர். என் மகனுக்கு ஏராளமான சொத்து இருக்கிறது; அவன் வாழ்நாள் சந்தோஷமாயிருக்கும் பொருட்டு ஒரு நல்ல பொருத்தமான மனைவிதான் வேண்டும். அவனும், உங்கள் மகளும் ஒருவரை ஒருவர் நேசித்தால் —; நீங்கள்தான், அவர்கள் ஒருவரையொருவர் காதலிப்பதாகச் சொல்லுகிறீரே? வேறு என்ன?

ஹார்ட்காஸில்:—'நேசித்தால்' என்று சந்தேகமாகச் சொல்லுகிறீரே? என் மகள், இருவரும் ஆழ்ந்த பிரியத்துடன் காதலித்திருப்பதாக என்னிடம் சொன்னாள்.

ஸர் சார்லஸ்:— பெண்கள் எல்லோரும் அவ்விதம் தான் சொல்லுவார்கள்.

ஹார்ட்காஸில்:—அவளுடைய கையை மிருதுவாகவும், பிரியமாகவும் அவன் பிடித்திருப்பதை நான் நேரிலேயே பார்த்தேன். உங்கள் சந்தேகம் தெளியவைப்பதற்கு மார்லோ அதோ வருகிறார்; நேரில் கேளுங்கள்.

[மார்லோ வருகிறார்]

மார்லோ:—ஐயா! உங்களிடம் மறுபடியும், என் அறிவில்லாத செய்கைகளுக்கு மன்னிப்புக்கேட்க வந்தேன். என் நடத்தையைப்பற்றி நான் நினைக்கும் பொழுது என் அவமானத்தை சகிக்க முடியவில்லை.

ஹார்ட்காஸில்:—அது கிடக்கட்டும்; அதைவிட்டுத் தள்ளு; இதென்ன பிரமாதம்? என் மகளுடன் ஒரு மணி அல்லது இரண்டு மணி தமாஷாகப் பேசினால் எல்லாம் மறந்துவிடும். இதனாலெல்லாம், அவள் உன்னை தப்பிதமாக நினைக்கமாட்டாள்.

மார்லோ:—அவள் நேசத்தைப் பாராட்டுவேன்.

ஹார்ட்காஸில்:—மிஸ்டர் மார்லோ! 'நேசம்' என்பது மிகவும் பொருத்தமான வார்த்தையல்ல. நான் கவனித்ததில் அதைவிட மேன்மையான உணர்ச்சியிலே இருக்கிறீர்கள். என்ன, நான் சொல்லுவது புரிந்ததா?

மார்லோ:—நான் அறியவில்லை.

ஹார்ட்காஸில்:—இங்கே வாப்பா! நான் கிழவன் தான்; இருந்தாலும் சிறியவர்களெல்லாம் எப்படியிருப்பார்களென்று எனக்குத் தெரியாதா? உங்கள் இருவருக்குள் என்னென்ன நடந்ததென்று எனக்குத் தெரியும்; வெளியில் மாத்திரம் சொல்லமாட்டேன்.

மார்லோ:— ஒன்றுமில்லை; நான் அவளிடம் மிக்க மரியாதையுடன் இருந்தேன்; அவளும் மிக்க வணக்கத்துடனும், நாணத்துடனும் இருந்தாள். பிறரிடம் என்

அறியாத்தனத்தால் அலக்ஷ்யமாய் நடந்துகொண்டது போல், அவளிடமும் நடந்துகொண்டேன் என்று நினைக்கக்கூடாது.

ஹார்ட்காஸில்:—நான் அவ்விதம் சொல்லவில்லை —, அவ்விதமில்லை — சற்று, வேடிக்கையாக, விளையாடினாய் என்று மாத்திரம் கேள்விப்பட்டேன்; அவள் ஒன்றும் என்னிடம் சொல்லவில்லை.

மார்லோ:— அவள் என்னைப்பற்றி சொல்லுவதற்கு இடமே வைத்துக்கொள்ள வில்லையே.

ஹார்ட்காஸில்:—சரி, சரி; கொஞ்சம் கொஞ்சம் வெட்கப்பட்டால்தான் அழகாயிருக்கும்; ஆனால் ரொம்பவும் இருக்கக்கூடாது. வெளிப்படையாக உன் அந்தரங்கத்தைத் தெரிவித்தால் பரவாயில்லை; நானும், உன் தகப்பனாரும் அதை மெச்சுவோம்.

மார்லோ:—நான் எப்பொழுதாவது அவ்விதம்——;

ஹார்ட்காஸில்:— நான் தான் சொல்லுகிறேனே. அவள் உன்னை வெறுக்கவில்லை; உனக்கும் அவளைப் பிடித்திருக்கிறது.

மார்லோ:—ஐயா, நான் சொல்லுவது ——,

ஹார்ட்காஸில்:— நானும் அதைத்தான் சொல்லுகிறேன்; நல்ல முகூர்த்தத்தில் நீங்கள் ஏன் மணம் புரிந்துவிடக்கூடாது என்று தான் புரியவில்லை.

மார்லோ:—என்னைச் சற்றுக் கேளுங்கள் —;

ஹார்ட்காஸில்:— உன் தகப்பனருக்குப் பூர்ண சம்மதம்; நானும் மிக சந்தோஷத்துடன் ஆமோதிக்கிறேன்; இனி ஒரு நிமிஷம்கூட தாமதிக்கக் கூடாது அதனால் —,

மார்லோ:-நான் சொல்லுவதை ஏன் கேட்கமாட்டேனென்கிறீர்கள்? உங்கள் மகளிடம், அவள் சந்தேகிக்கும்படியாகக் கூட ஒரு பற்றுதலையாவது, நேச பாவத்தையாவது அறிவித்ததில்லையே. ஒரே ஒரு தடவை தான், நாங்கள் சந்தித்தோம்; அன்னியர்கள் மாதிரி அடக்க ஒடுக்கமாய் நடந்துகொண்டோம்.

ஹார்ட்காஸில்:-[தனக்குள்] இவனுடைய போக்கிரித்தனமான வேஷம் எனக்கு சிறிதும் பிடிக்கவேயில்லை.

ஸர் சார்லஸ்:— ஆனல், அவள் கையைப் பிடித்துக்கொண்டு, நீ அவளைக் காதலிப்பதாகச் சொல்லவில்லையா?

மார்லோ:— தெய்வம் அறியச் சொல்லுகிறேன்; உங்கள் உத்திரவிற்குக் கீழ்ப்பட்டு இவ்விடம் வந்தேன்; அந்தப் பெண்ணை யாதொரு உணர்ச்சியுமில்லாமல் சந்தித்தேன்; யாதொரு மன வருத்தமன்னியில் விட்டுப் பிரிந்தேன். இனி என்னை அதிகமாகப் பரிசோதிக்காமல் விடைபெற்றுச் செல்ல அனுமதி கொடுப்பீர்கள் என்று நம்புகிறேன்; நான் இங்கு அடைந்த அவமானம் போதும்.

[போகிறார்]

ஸர் சார்லஸ்:—ஆச்சர்யமாயிருக்கிறதே! அவன் சொல்லும் மாதிரியைப் பார்த்தால் அவன் சொல்லுவது தான் உண்மையாயிருக்கும்போலிருக்கிறது.

ஹார்ட்காஸில்:-அவன், அவ்வளவையும் மறைத்துச் சொல்லுவது எனக்கும் ஆச்சர்யமாகத்தானிருக்கிறது.

ஸர் சார்லஸ்:—அவன் பொய்யே சொல்லமாட்டான்.

ஹார்ட்காஸில்:—இதோ என் மகள் வருகிறாள்; அவள் உண்மையைத்தான் சொல்லுவாள், என்று எங்கு வேண்டுமென்றாலும் சத்தியம் செய்வேன்.

[ கேட் வருகிறாள். ]

ஹார்ட்காஸில்:—கேட்; இங்கே வாம்மா குழந்தே. ஸங்கோஜமன்னியில் ஒன்றையும் ஒளியாமல் நடந்த விஷயங்களைச் சொல்லு. மார்லோ, உன்னிடம் எப்பொழுதாவது தன் நேசத்தையாவது, காதலையாவது அறிவித்தானா?

கேட்:—இவ்வளவு திடீரென்று கேட்டால் நான் என்ன செய்வது? இருந்தாலும் ஒளியாமல் சொல்ல வேண்டும் என்று உத்திரவிடுவதால் சொல்லுகிறேன். அவர் என்னைக் காதலித்து, தன் காதலைத் தெரிவித்தார் என்றே எண்ணுகிறேன்.

ஹார்ட்காஸில்:—[ஸர் சார்லஸிடம்] பார்த்தீர்களா?

ஸர் சார்லஸ்:—அம்மா, தயவுசெய்து சொல்லு. நீயும், என் மகனும் ஒரு தடவைக்குமேல் சந்தித்ததுண்டா?

கேட்:—ஆம்; பல தடவை சந்தித்தோம்.

ஸர் சார்லஸ்:—காதலைப்பற்றி அவன் பேசினானோ?

கேட்:—அதைத்தான் பேசினார்,

ஹார்ட்காஸில்:—பார்த்தீர்களா!

ஸர் சார்லஸ்:—விநோதமாயிருக்கிறதே. ஒழுங்கான முறையில் பேசினானா!

கேட்:—ஆம்.

ஹார்ட்காஸில்:—ஸர் சார்லஸ்! இப்பொழுதாவது உங்கள் மனதிலுள்ள சந்தேகம் நிவர்த்தியாகிவிட்டதா?

ஸர் சார்லஸ்:—உன்னிடம் அவன் எவ்விதம் நடந்து கொண்டானம்மா?

கேட்:—உண்மையான காதலரைப்போல்தான். அழகிய வசனங்களால் என் எதிரில் பேசினார்; தன் குறைகளைப்பற்றி எடுத்துரைத்து என்னைப் புகழ்ந்த வண்ணமாயிருந்தார்; தன் ஹிருதயத்திலிருந்து நேசிப்பதாகச் சொன்னார்; மன உருக்கமாகப்பேசிவிட்டு, அளவில்லா ஆனந்தத்தில் பரவசமானார்.

ஸர் சார்லஸ்:—இப்பொழுது எனக்கு சந்தேகம் நிவர்த்தியாகிவிட்டது. இம்மாதிரி அவன் பெண்கள் எதிரில் பேசமாட்டான் என்று எனக்குத் தெரியும்; பேசினால் பணிவுடன்தான் பேசுவான். இவ்விதமாக

அவன் தாறுமாருக நடந்துகொண்டான் என்று சொல்லு வது அவனைக் குறித்து இல்லையென்று தீர்மானமாகச் சொல்லுவேன். அவள் சொல்லுவது, அவனைப்பற்றி இல்லவே இல்லை.

கேட்:—நான் சொல்லியதெல்லாம் உண்மையென்று உங்கள் எதிரிலேயே ரூபித்தால் நம்புவீர்களா? இன்னும் அரை மணி நேரத்தில் நீங்களும், என் தகப்பனாரும் அந்த மறைவுக்குப் பின்னால் நின்றுகொண்டிருங்கள்; அவர் தன் காதலை என்னிடம் எம்மாதிரியாக அறிவிக் கிருர் என்று நேரில் காண்பிக்கிறேன்.

ஸர் சார்லஸ்:—சம்மதம். அவ்விதம் ரூபித்தால் அவன் என்னை ஏமாற்றியதற்கு வருந்துவேன். [போகிருர்]

கேட்:—நான் சொல்லுகிறபடி அவர் இராவிட்டால் —, எனக்குச் சந்தோஷம் என்பது ஆரம்பமில்லாமலே போய்விடுமே. [போகிருர்கள்]

வேறு ஸீன்:—[தோட்டத்தின் பின்புறம். ஹேஸ்டிங்ஸ் வருகிருர்.]

ஹேஸ்டிங்ஸ்:—விஷமத்தில் பிரியமுள்ள ஒரு பைய னின் வார்த்தையைக் கேட்டு நான் இவ்விடம் அவன் ஏளனம் செய்து பரிகசிக்கும்படி காத்திருப்பது எவ்வளவு முட்டாள்தனம்! குறிப்பிட்ட நேரத்திற்கு அவனே வரு வது கிடையாது; இனி நான் இங்கு தாமதிக்கப் போவ தில்லை. அதோ வருவது யார்? அவன்தான்; மிஸ் நெவி லைப்பற்றிய தகவல் கொண்டுவந்திருப்பான்; கேட்கிறேன்.

[டோனி பூட்ஸை போட்டுக்கொண்டு சேறும் சகதியுமாக வருகிறான்.]

ஹேஸ்டிங்ஸ்:—இவ்வளவு நல்ல பையனா நீ! உன் வார்த்தைப்படி வந்துவிடுவாயென்று இப்பொழுதுதான் எனக்குத் தெரியவருகிறது. உண்மையான சிநேக முறைக்கு இதுதான் அடையாளம்.

டோனி:—ஏ! உங்கள் சிநேகிதன் தான்! எல்லா விஷயங்களையும் கேட்டால் என்னைப்போன்ற நண்பன் உலகிலே கிடையாதென்று கூட சொல்லி விடுவீர்கள். இரா வேளையில் பிரயாணம் செய்வதே பிராண சங்கடம்தான்; கோச் வண்டியிலுள்ளவர்களைவிட நான் கஷ்டப்பட்டு, என் எலும்பெல்லாம் நொறுங்கிவிட்டது.

ஹேஸ்டிங்ஸ்:—ஏன் அப்படி? உன்னுடன் போனவர்கள் கதி என்ன? சௌக்கியமாயிருக்கிறார்களா? நல்ல இடத்தில் தங்கியிருக்கிறார்களா?

டோனி:—25 மைல், $2\frac{1}{2}$ மணி நேரத்தில் சென்றால் நல்ல சவாரி என்றுதான் நினைக்கிறேன். அந்தக் குதிரைகள் பாவம்? உயிர் பாதி போய்விட்டது; ஆனால் இந்தப் பிசாசுகளை அழைத்துக்கொண்டு 10 மைல் போவதற்குள், தனிமையாகப் போயிருந்தால் 40 மைல் போயிருப்பேன்.

ஹேஸ்டிங்ஸ்:—எதையோ சொல்லிக்கொண்டிருக்கிறாயே? அந்த ஸ்திரீகளை எங்கே விட்டிருக்கிறாய்?

டோனி:—விடவா? எங்கே விடுவது? எங்கிருந்து கிளம்பினார்களோ, அங்குதான்.

ஹேஸ்டிங்ஸ்:—இதென்ன புதிர்.

டோனி:—இந்தப் புதிரின் அர்த்தத்தை நீங்களே சொல்லுங்கள். வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டு வீட்டைத் தொடாமல் எது இருக்கும்?

ஹேஸ்டிங்ஸ்:—இன்னும் புரியவில்லை.

டோனி:—யார் என்று புரியவில்லையா? ஏன்; என் அம்மாதான். இந்த ஊருக்கு ஐந்து மைல் சுற்றிலுமுள்ள ஒரு குளம், குட்டை கூட விடாமல் பிரண்டுவிட்டு வந்திருக்கிறார்கள்.

ஹேஸ்டிங்ஸ்:—ஹா! ஹா! ஹா! எனக்கு இப்பொழுது புறிந்துவிட்டது. அவர்கள் நேராகப் போய்க் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்; பாவம்! நீ அவர்களைச் சுற்றி, சுற்றிக் நொண்டுபோய் கிளம்பிய இடத்திற்கே கொண்டுவந்து விட்டாய்.

டோனி:—ருசிகரமான விஷயம்! கேளுங்கள். முதல் முதல் "பெதர்பெட்" சந்தின் வழியாகப்போகவும், சேற்றில் வண்டி ஆழமாகப் பதிந்துவிட்டது; பிறகு ஒரு மலையில் காடுமுரடான பாதையில் தலை தெறிக்க, ஓட்டம் ஓட்டமாக வண்டியை ஓட்டச்செய்தேன்; பிறகு சுற்று வட்டமாகப் பல இடங்களில் இழுத்துக் கடைசியில் எங்

கிருந்து கிளம்பினேமோ அங்கேயே, வீட்டுத்தோட்டத்திற்கு அருகிலுள்ள குட்டைப் பக்கத்தில் அவர்களை நிறுத்தி வைத்திருக்கிறேன்.

ஹேஸ்டிங்ஸ்:—அபாயம் ஒன்றும் ஏற்படவில்லையே?

டோனி:—அதெல்லாம் ஒன்றுமில்லை; என் தாயார் தான், கதிகலங்கி நடுங்கிக்கொண்டிருக்கிறாள். 40 மைலுக்கு அப்பால் இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு இந்தப்பிரயாணம் போதும், போதும் என்று ஆகிவிட்டது; குதிரைகளோ ஒரு அடி எடுத்து ஊர்ந்து நடக்கக்கூட சக்தியில்லாமல் களைத்து இருக்கின்றன. உங்கள் குதிரைகள் தயாராயிருந்தால் மிஸ் நெவிலை அழைத்துக்கொண்டு ஓட்டம் பிடிக்கலாம்; ஒரு பிராணி உங்களைப் பின் தொடர்ந்து வராது.

ஹேஸ்டிங்ஸ்:—என் அருமை நண்பா, உனக்கு என் நன்றியை எவ்விதம் பாராட்டுவேன்?

டோனி:—ஆஹா! இப்பொழுது நல்ல சிநேகிதன் என்று சொல்லமாட்டீரா? சற்று முன்தான் என்னை மடையன், முட்டாள், முரடு என்று அடுக்கி வைத்தது ஞாபகமில்லையா? இப்பொழுது நண்பர்களாகிவிட்டோமோ?

ஹேஸ்டிங்ஸ்:—நீ சொல்லுவது நியாயம். நான் மிஸ் நெவிலை கவனிக்கப்போகிறேன். நீ அந்தக் கிழவியை கவனித்துக்கொண்டால், நான் அந்தச் சிறு பெண்ணை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுகிறேன்.

டோனி:—என்னைப்பற்றிக் கவலை வேண்டாம். அதோ என் தாயார் வருகிறாள். மறைந்துவிடுங்கள். அவள் அந்த குட்டையிலுள்ள சேற்றில் விழுந்து, இடுப்பு வரையில் சேற்றை பூசிக்கொண்டு வருவதைப் பார்த்தால் மச்சாவதாரம் மாதிரி இருக்கிறது.

[ஹேஸ்டிங்ஸ் போகிறார்.]

டோனி தாயார் வருகிறாள்.

டோனி தாயார்:—ஓ! டோனி! என் உயிர் போயே போய்விட்டது. உடம்பெல்லாம் நொறுங்கிப்பொடியாய் போய்விட்டது. அந்தக்கடைசி நொடியில், வேலியில் தள்ளி, தலை கீழாக விழுந்தது என்னை குற்றுயிர், குலையுயிராகப் பண்ணிவிட்டது.

டோனி:-என்னம்மா செய்வது? எல்லாம் நீயாக வரவழைத்துக் கொண்டதுதானே. இந்த இருட்டில் வழி துளிக்கூடத் தெரியாமல் பிடிவாதமாகக் கிளம்ப வேண்டுமென்று கிளம்பினாய்.

டோனி தாயார்;—போதுமப்பா, போதும். எனக்கு மறுபடியும் எப்பொழுது வீடு போகப் போகிறோம் என்று இருக்கிறது. என் ஜன்மத்தில் நான் இவ்வளவு தூரம் போவதற்குள் இவ்வளவு கஷ்டப்பட்டதேயில்லை. சேற்றில் விழுந்து, சகதியில் அமுங்கி, கொடை சாய்ந்து விழுந்து, உடம்பெல்லாம் நொறுங்கி, பொடியாகப்போய் —கடைசியில் வழியும் தப்பி; — இவ்வளவு கஷ்டப் பட்டதேயில்லை. உத்தேசமாக, நாம் எந்த இடத்தில் இருக்கிறோம்?

டோனி:—" க்ராக்ஸ்கல் காமன்," என்ற இடத்திற்கு வந்திருக்கிறோம் என்று உத்தேசமாக நினைக்கிறேன்; வீட்டிலிருந்து 40 மைல் தூரத்திலிருக்கிறோம்.

டோனி தாயார்:—ஐயையோ! ஐயையோ! இந்தப் பக்கங்களுக்குள் அந்த இடம் கொடிய பயங்கரமான இடம் என்று பெயர் வழங்குகிறதே. நாம் படும் அவஸ்தைக்கு கொள்ளை ஒன்றுதான் பாக்கி.

டோனி:—பயப்படாதே, அம்மா; பயப்படாதே. முன் ஐந்து தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் இருந்தார்களாம்; அதில் இரண்டு பேர்களை தூக்குப் போட்டுவிட்டார்கள். மற்ற மூவர்கள் நம்மை எங்கே பார்க்கப்போகிறார்கள். பயப்படாதே;— அதோ யாரோ ஒரு ஆள் குதிரைமேல் சவாரி செய்துகொண்டு நமக்குப்பின்னால் வருவதுபோல் தெரிகிறதே? யாரது? இல்லை, இல்லை; ஒரு மரம் அசைவதுதான் அப்படித் தோன்றுகிறது— பயப்படாதே.

டோனி தாயார்:—எனக்கு இருக்கும் திகில் என்னைக் கொன்றுவிடும்போலிருக்கிறதே.

டோனி:—அந்தப் புதருக்குப் பின்னால் ஏதோ ஒன்று கறுப்பாக அசைந்து வருவது உனக்குத் தெரிகிறதா?

டோனி தாயார்:-ஐயையோ; நான் என்ன செய்வேன்.

டோனி:—ஒன்றுமில்லையம்மா; அது ஏதோ ஒரு பசு; பயப்படாதேயம்மா; பயப்படாதே.

டோனி தாயார்:—டோனி! யாரோ நம்மை நோக்கி வாஸ்தவமாகவே வருவது போலிருக்கிறதே? அதோ வராண்டா; நாம் என்ன செய்வது?

டோனி:—[தனக்குள்] இதென்ன கஷ்டம்! ஹார்ட் காஸில் இராவேளையில் சில சமயங்களில் உலாவவருவாரே; அது இப்பொழுதுதானா சம்பவிக்கவேண்டும். [தாயாரிடம்] ஐயோ! ஒரு கொள்ளைக்காரன் தான் என்கையளவு நீள முள்ள ஒரு பெரிய துப்பாக்கியை தூக்கிக்கொண்டு வருகிறான்; அவனைப் பார்த்தாலே கதி கலங்குகிறதே.

டோனி தாயார்:—கடவுள்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்; யமன்போல் வந்துவிட்டானே.

டோனி:— அந்தப் புதருக்குள் போய் நீ மறைந்து கொள்ளுகிறாயா? நான் அவனை கவனித்துக் கொள்ளுகிறேன். ஏதாவது அபாயம் இருக்குமானால் நான் "ஹ்ஹெம்" என்று கனைக்கிறேன். நான் அவ்விதம் கனைக்கும்போது என் அருகில்வந்து உதவிக்கு பக்கத்தில் இரு. [டோனி தாயார் ஓடிப்போய் புதருக்குள் மறைந்து கொள்ளுகிறாள்.]

[ஹார்ட்காஸில் வருகிறார்.]

ஹார்ட்காஸில்:—ஏதோ, 'உதவி' வேண்டுமென்று சிலர் சப்தம் போட்டது மாதிரி காதில் பட்டதே. ஓ! டோனி! நீயா? நீ இவ்வளவு சீக்கிரம் வருவாயென்று நான் எதிர்பார்க்கவில்லை. உன் தாயாரும், மிஸ் நெவி லும் சௌக்கியமாகப் போய்ச் சேர்ந்தார்களா?

டோனி:— சௌக்கியமாகத்தான் இருக்கிறார்கள். பேடிக்ரீ வீட்டில் இருக்கிறார்கள். [கனைத்துக்கொண்டே] ஹ்ஹெறம்.

டோனி தாயார்:—[புதருக்குள்ளிருந்து] அவன் கனைக் கிறானே? ஐயையோ! ஏதோ அபாயம் வருகிறதே.

ஹார்ட்காஸில்:—40 மைல் மூன்று மணி நேரத்திலா? மிகவும் சிரமமாயில்லையா?

டோனி:—நல்ல குதிரைகளும், திடமான மனமுமிருந் தால் எதுதான் முடியாது? ஹ்ஹெறம்.

டோனி தாயார்:— [புதருக்குள் இருந்துகொண்டே] அட பாவி! அவன் என் குழந்தையை ஒன்றும் செய்யாம லிருக்கவேண்டுமே!

ஹார்ட்காஸில்:— இங்கு ஏதோ சப்தம் கேட்டதே? அதென்ன? நான் தெரிந்து கொள்ளவேண்டும்.

டோனி:—ஒன்றுமில்லை; ஐயா, நான்தான் தனக்குத் தானே பேசிக்கொண்டேன். 40 மைல் நாலு மணி நேரத்திற்குள் போய் வந்தது 'நல்ல சவாரி' என்று

சொல்லிக்கொண்டிருந்தேன். ஹ்ஹெஹம். வாஸ்த்தவமாகச் சொல்லுகிறேன்; ஹ்ஹெஹம். இந்த இரவில் வெளியில் சென்றதில் என் தொண்டை கட்டிக் கொண்டு விட்டது. நீங்கள் பிரியப்பட்டால், நாம் வீட்டிற்குப் போகலாமே.

ஹார்ட்காஸில்:—நீ பொய் சொல்லுகிறாய். நீயே கேட்டுக்கொண்டு, நீயே பதில் சொல்லிக்கொண்டாயோ? என் காதில் இரண்டு பேர்களுடைய சப்தம் கேட்டதே. [உரக்க] மற்றவர் யார் என்று கண்டுபிடித்துத்தான் தீருவேன்.

டோனி தாயார்:—[புதரிலிருந்து] அட பாவி! என்னைப் பிடிக்கவந்து விட்டானே. ஓ!

டோனி:—ஐயா! நீங்கள் போகவேண்டாம். நான் தான் நிஜத்தைச்சொல்லிவிடுகிறேன். ஹ்ஹெஹம். சொல்லி விடுகிறேனய்யா எல்லாவற்றையும் — ஹ்ஹெஹம் — ஒளியாமல் சொல்லிவிடுகிறேன். ஹ்ஹெஹம்.

[ஹார்ட்காஸில் போவதைத் தடுக்கிறான்.]

ஹார்ட்காஸில்:—[இரைச்சலுடன்] என்னைத் தடுக்காதே; நான் பார்த்துத்தான் ஆகவேண்டும்; அதைக்கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன். உன்னை நம்புவேன் என்று எண்ணாதே.

டோனி தாயார்:—[புதரிலிருந்து ஓடிவந்து] ஐயோ! என் கண் போன்ற அருமைக் குழந்தையைக் கொன்று விடுவான் போலிருக்கிறதே! ஐயா! தங்கள் கோபத்தை

யெல்லாம் என்மீது செலுத்துங்கள். என்னிடமுள்ள பணத்தையெல்லாம் எடுத்துக் கொள்ளுங்கள்; என் உயிரை வேண்டுமென்றாலும் எடுத்துக் கொள்ளுங்கள்; ஆனால், அந்த ஒன்றுமறியாக் குழந்தையை ஒன்றும் துன்பம் செய்யாதீர்கள். உங்கள் மனதில் இரக்கம் என்பது இருக்குமானால் ஒன்றும் செய்யாதீர்கள்.

ஹார்ட்காஸில்:—யார்? என் மனைவியா? எங்கிருந்து வந்தாள்? என்ன பிதற்றுகிறாள்?

டோனி தாயார்:— [முழங்காலிட்டவண்ணமே] ஓ கொள்ளைக்காரரே! எங்கள்மீது இரக்கப்படுங்கள். எங்கள் பணம், கெடியாரம், நகை — எதை வேண்டுமென்றாலும் எடுத்துக் கொள்ளுங்கள்; ஆனால் எங்களுக்கு உயிர்ப் பிச்சை மாத்திரம் கொடுங்கள். உங்கள் பேரில் யாதொரு நடவடிக்கையும் கோர்ட்டில் எடுக்கமாட்டோம் என்று சத்தியமாகச் சொல்லுகிறேன். தீவட்டிக்காரரே! இது சத்தியம்.

ஹார்ட்காஸில்:— இவளுக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன? டோரதி! உனக்கு என்னைத் தெரியவில்லையா?

டோனி தாயார்:— நீங்களா? என்னுடைய கதி கலக்கத்தில் ஒன்றுமே புரியவில்லை. யார் உங்களை வீட்டை விட்டு 40 மைலுக்கு அப்பால் உள்ள கொடிய பயங்கரமான இடத்தில் எதிர்பார்க்க முடியும்? எங்களைப் பின் தொடர்ந்து நீங்கள் எதற்கு இவ்விடம் வந்தீர்கள்?

ஹார்ட்காஸில்:—டோரதி! சந்தேகமன்னியில் உனக்குப் பைத்தியம்தான், பிடித்து விட்டது. 40 மைல் தூரமா? நாம் நமது வீட்டிலிருந்து நாற்பது கஜ தூரம் கூட இல்லையே. [டோனியைப் பார்த்து] இது உன்னுடைய விஷமமா? மானமில்லாக் கழுதை; [தன் மனைவியைப் பார்த்து] உனக்கு அந்த தோட்டத்தின் கதவு, அந்தக் குந்துமணி மரம், இதெல்லாம்கூடப் பார்த்து அடையாளம் தெரியவில்லையா? அந்தக் குட்டைகூட ஞாபகமில்லையா?

டோனி தாயார்:—ஆமாம்; அந்தக் குட்டையை என் ஆயுள் முழுவதும் ஞாபகம் வைத்துக் கொள்ளுவேன்; அதில் என் உயிர்கூடப் போய்விட்டது. [டோனியைப் பார்த்து கோபத்துடன்] நன்றிகெட்ட கழுதை; உனக்காக நான் கஷ்டப் பட்டதிற்கு இதுதானா எனக்குப் பலன்; இரு; உனக்கு சரியாக வழி காண்பிக்கிறேன்.

டோனி:—நல்லது; இந்த ஊர் முழுவதும் என்னைக் குட்டிச்சுவராகப் பண்ணுவது நீதான் என்று சொல்லுகிறார்கள். அதன் பலனை நீ அனுபவிக்க வேண்டாமா?

டோனி தாயார்:—உன்னை நானா கெடுத்தேன்? நானா?

[டோனியைத் துரத்திக்கொண்டே ஓடுகிறாள்;
டோனி ஓட்டம் பிடிக்கிறான்.]

ஹார்ட்காஸில்:—அவன் சொல்லுவதிலும் ஏதோ நியாயம் இருக்கிறது. [போகிறார்.]

[ ஹேஸ்டிங்ஸனும், நேவிலும் வருகிறார்கள். ]

ஹேஸ்டிங்ஸ்:—என் அருமைக்காதலி! ஏன் இன்னும் யோசனை செய்கிறாய்? ஒரு நிமிஷம் தாமதித்தாலும் நமது காரியம் சித்திக்காது. சற்று தைரியமாயிரு; இருந்தால், அவளுடைய கோபத்திற்கு இரையாகாமல் தப்பி விடலாம்.

மிஸ் நேவில்:—அது அசாத்தியம் என்றே எனக்குத் தோன்றுகிறது. நான் இப்பொழுது பட்ட கணக்கில்லா துன்பங்களை நினைத்தால், இன்னும் ஏதேனும் புதியதாக ஆபத்துவருமோ என்று திகில் உண்டாகி மனதைக் கலக்குகிறது. இன்னும் 2, 3 வருஷங்கள் பொறுமையுடனிருந்தால், நாம் பிறகு சந்தோஷத்துடனிருக்கலாம்.

ஹேஸ்டிங்ஸ்:—அவ்வளவு வருஷங்கள் தாமதிப்பது அழகல்ல அருமைநெவில்; நான் சொல்லுவதைக்கேள். நாம் இதைவிட்டு ஓடிவிடலாம். இந்த நிமிஷத்திலிருந்து நாம் சந்தோஷித்து இருக்கலாம். உண்மையான காதலுடனும், மனமொற்ற வாழ்வுடனுமிருந்தால் பணம் எதற்கு? அதுவே ஒரு சக்கிரவர்த்தியின் தனத்தைவிட மேலான தனம். நான் சொல்லுவதைக்கேள்.

மிஸ் நேவில்:—ஹேஸ்டிங்ஸ், அவ்விதம் நினைப்பது தவறு. எனக்குப் புத்தி வந்துவிட்டது; அதன்படி நடந்துகொள்ளுவதுதான் சரி. நமது காதலில், பணத்தை இப்பொழுது வெறுத்தால், பிறகு வருந்தும்படி நேரும்.

நான் மிஸ்டர் ஹார்ட்காஸிலிடமே என் நகைகளை கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப் போகிறேன்; அவரிடம் நியாயம் கிடைக்கும்.

ஹேஸ்டிங்ஸ்:—எனக்கு நம்பிக்கையில்லை; நீ பிடிவாதமாயிருப்பதால் உன் இஷ்டப்படி செய்.

[ இருவரும் போகிறார்கள். ]

*　　*　　*　　*

வேறு ஸீன்:–[ ஸர் சார்லஸும், ஹார்ட்காஸிலுடைய பெண் "கேட்" என்பவளும் வருகிறார்கள். ]

சர் சார்லஸ்:—இதென்ன தர்ம சங்கடம்! நீ சொல்லுவது உண்மையாயிருந்தால் என் மகனின் நடத்தை, பிசகுதான். அவன் சொல்லுவது உண்மையானால் மிகவும் பிரியத்துடன் வேண்டிய, உன்னை, என் மருமகளாக நான் அடைய முடியாது.

கேட்:—நீங்கள் என்மேலுள்ள பிரியத்திற்கு கௌரவப்படுகிறேன். நான் சொல்லியதெல்லாம் உண்மையென்று அவருடைய வாய் மொழிகளினாலேயே ரூபிக்கிறேன். அதோ அவர் வருகிறார். சற்று, நான் சொல்லியபடி மறைவாக இருங்கள்.

ஸர் சார்லஸ்:—நான் உன் தகப்பனாருடன் சேர்ந்து கவனிக்கிறேன். [ போகிறார். ]

[ மார்லோ வருகிறார்.]

மார்லோ:—நான் கிளம்புவதற்குமுன் உன்னிடம் விடைபெற்றுச் செல்லலாம் என்று வந்தேன்; இந்த நிமிஷம்வரை, விட்டுப் பிரியும் துக்கம் என்பது எவ்வித மிருக்கும் என்று அறியவில்லை.

கேட்:—ஐயா! இந்த வருத்தங்கள் பெரிதா; கூடிய சீக்கிரம் நீங்கள் மறந்துவிடும்படி நேர்ந்துவிடும். இரண்டொரு நாள் அவ்விதம்தானிருக்கும்; பிறகு வருத்த மெல்லாம் நீங்கிவிடும்.

மார்லோ:—[தனக்குள்] ஒவ்வொரு நிமிஷமும் அவள் மேலிருக்கும் பிரியம் அதிகரிக்கிறதே. [அவளிடம்] அவ் விதமிராதம்மா. நான் என் காதலின் உணர்ச்சிக்கு மிகவும் தணிந்து கீழ்ப்படிந்துவிட்டேன்; என் கௌரவத் தையும் அதற்குப் படியும்படி செய்துவிட்டேன். நமக் குள்ள, படிப்பு, சொத்து, குலம் இவைகளின் தாரதம்ய மும், என் தகப்பனாரின் கோபமும், என் சிநேகிதர்களின் ஏளனமும் எனக்குச் சிறிதும் லக்ஷியமில்லை. நான் தீர்மா னித்து விடுகிறேன்.

கேட்:—ஸரி; நீங்கள் போய் வாருங்கள்; உங்களை இவ்விடம் தாமதித்து வைக்கும்படி நான் ஒன்றும் செய் யப் போவதில்லை. நீங்கள் இவ்விடம் யாரைக் காண வேண்டுமென்று வந்தீர்களோ, அவளைவிட படிப்பிலா வது, அந்தஸ்திலாவது நான் கீழ்ப்பட்டவளல்ல; ஆயினும் பணமில்லாத தோஷமிருந்தால் எதுதான் விளங்கும்? உங்களுடைய பிரியமான வார்த்தைகளையும்

அழகிய வசனங்களையும்தான் கேட்டு மகிழவேண்டும். ஆனால் உங்கள் நோக்கமெல்லாம் பணமுள்ளவர்களுடனே செல்லுகின்றன.

[ ஒரு திரைக்குப் பின்னால் ஸர் சார்லஸும், ஹார்ட்காஸிலும் வருகிறார்கள். ]

ஸர் சார்லஸ்:—இவ்விடம், இந்தத் திரைக்குப் பின் வாருங்கள்.

ஹார்ட்காஸில்:— ஸ்——ஸு! சப்தம் செய்யாதீர்கள். என் மகள் கேட், அவனை என்னபாடு படுத்துகிறாள் என்று பாருங்கள்.

மார்லோ:—சத்யமாகச் சொல்லுகிறேன். நான் பணத்தை லக்ஷ்யம் செய்து இங்கு வரவில்லை. உன் அழகு தான் என் உள்ளத்தை முதன் முதல் கவர்ந்தது; உன் சௌந்தர்யமான முகத்தைக் கண்டு உணர்ச்சியற்று எவர்தான் இருக்கமுடியும்? உன்னுடன் பேசும்பொழுது ஒவ்வொரு நிமிஷமும் ஓர் புதிய அழகு தோன்றி, உன் லாவண்யத்தை அதிகரித்து என் மனதைக் கவர்ந்து சூறையாடி விடுகிறது. உன் கபடமற்ற மனதும், தைர்யமான நடத்தையும், உன்னதமான மனோ உணர்ச்சிகளை எடுத்துக்காட்டுகின்றன.

ஸர் சார்லஸ்:—[ திரைக்குப் பின்னால் ] இதென்ன ஆச்சர்யம்! அவன் இப்படிப் பேசுவது விநோதமாயிருக்கிறதே!

ஹார்ட்காஸில்:—நான்தான் அப்பொழுதே சொன்னேனே. உஸ்——! சப்தம் செய்யாமல் மேலும் கேளுங்கள்.

மார்லோ:—நான் இவ்விடம் தங்குவதென்றே தீர்மானித்துவிட்டேன். என் தகப்பனரும், உன்னைப் பார்க்கும் பக்ஷத்தில், என் தீர்மானம் சரியென்றே சொல்லுவார் என்ற நம்பிக்கையுண்டு.

கேட்:—இல்லை! மிஸ்டர் மார்லோ, உங்களை தங்கும்படி செய்ய நான் சம்மதியேன்; நான் மாட்டேன். சிறிதேனும் பின்பு வருந்தும்படியுள்ள தாரதம்யமற்ற சம்மந்தத்திற்கு நான் இடம் கொடுப்பேனு? இப்பொழுது காதலின் உணர்ச்சியில் ஆழ்ந்திருக்கிறீர்கள் என்றறிந்து, அதைக் கேவலமான என் சுயநலத்திற்காக உபயோகப்படுத்தி, பிறகு நீங்கள் உமக்கு சமானமானவர்களிடம் தலைகாட்டாமல் செய்வேனென்று நினைக்கிறீர்களா? உங்கள் அந்தஸ்தை தாழ்வுபடுத்தி, அதனுல் நான் ஒரு சந்தோஷமடைவது நீதியா?

மார்லோ:—உன்னுலல்லாமல், எனக்கு வேறு சந்தோஷம் எவ்விதம்வரும்? நீ எனக்கு அருகதையல்லவென்று பின்பு ஒருநாளும் வருந்தமாட்டேன். என்னை இவ்விடம் தாமதிக்கக்கூடாது என்றுலும், இங்குதான் தங்குவேன்; நீ என்னை வெறுத்துத் தள்ளினுலும், நான் உன்னைப் பின் தொடர்ந்தே, முன் அலக்ஷயமாய் நடந்துகொண்டதற்கு தக்க தண்டனைக்குள்ளாகி, உன் மனம் திருந்தும்விதம் செய்துகொள்ளுவேன்.

கேட்:—ஐயா! நீங்கள் அவ்விதம் செய்வது அழகல்ல வென்று மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். நாம் இருவரும் எதேச்சையாகச் சந்தித்தது போல், திடீ ரென்று விலகிவிடுவதுதான் நியாயம். ஒரு மணி, இரண்டு மணி நீங்கள் சந்தோஷப்படும்படி நான் நடந்து கொண் டிருக்கலாம்; ஆனால், அதன் காரணமாக மிஸ்டர் மார் லோ! உங்களை ஆலோசனையற்றவர் என்றும், என்னைப் பேராசை பிடித்தவளென்றும் உலகத்தோர் நினைக்கும் படியான ஓர் சம்பந்தத்தை நான் விரும்புவேனென்று நினைக்கிறீர்? பணத்தினால் கர்வங்கொண்டு என்னை எவ் விதமாவது அடையலாம் என்று நினைத்திருக்கும் உம்மை நான் கவருவது முறையா?

மார்லோ:—[முழங்காலிட்டு] நான் வணங்கி நிற் பதைப் பார்த்தால், கர்வமுள்ளவன் என்று உனக்குத் தோன்றுகிறதா? பணத்தின் செருக்கைக் காட்டுகின்றதா? ஒவ்வொரு நிமிஷமும் உன் உயர்வான குணத்தையும், உன்னதமான வசனங்களையும் நினைக்கும் போது, என் கலவரமும், என்னுடைய குறைவும் புலப்படுகிறது. நான் சொல்லுவதைப் பூராவும்——

ஸர் சார்லஸ்:—[திரையிலிருந்து வெளிவந்து] என்னால் இனி பொறுக்க முடியாது. மார்லோ, மார்லோ, என்னை இவ்விதம் ஏமாற்றி மோசம் செய்தது சரியா? இதுதானா நீ பெண்களுடன் கூச்சப்படுவது? இதுதானா நீ அச்ரத் தையுடன் இருந்தது?

ஹார்ட்காஸில்:—இது தான் உன் உணர்ச்சியற்ற சம்பாஷணேயோ? சாதாரணமாகப் பேசிக்கொண்டதோ? என்னப்பா இப்பொழுது சொல்லுகிருய்?

மார்லோ:—எனக்கொன்றும் புரியவில்லையே; இதற்கென்ன அர்த்தம்?

ஹார்ட்காஸில்:—அர்த்தமா ...... ? ...... ! நீங்கள் சமயத்திற்குத் தகுந்தபடி பேசுவீர்கள் என்று தான் அர்த்தம். தனிப்படையாக, ஒரு ஸ்திரீயிடம் முழங்காலிட்டு, மறுசமயம் அடியோடு பேசவேயில்லை என்று சொல்லுவீர் என்றுதான் அர்த்தம். என்னிடம் ஒரு விதமாகவும், என் பெண்ணிடம் மற்ருரு விதமாகவும் நடந்துகொள்ளுவீர் என்றும் ஒரு அர்த்தம்.

மார்லோ:—உங்கள் பெண்ணு? இவள் உங்கள் புத்திரியா ! ! ! ?

ஹார்ட்காஸில்:—ஆம்; என் ஒரே மகள், 'கேட்' பின் வேறு யார் என்று நினைத்தீர்?

மார்லோ:—இதென்ன..............!

கேட்:—[ தலை வணங்கி நமஸ்கரித்து ] ஆம் ஐயா; அந்த ஒண்ணரைக் கண் என்று சொல்லி, நெட்டைப் பனைமரம் என்று பரிகசித்தீர்களே! அவள் தான் நான். மிகவும் கூச்சமும், சாந்தமும், வெட்கமுமுள்ள மனிதரும் லேடீஸ் கிளப்பில் "ராட்டில்" என்று செல்லப் பெயருடன் வழங்கும் உம்மிடம் பேசிக்கொண்டிருந்தவளும் நான்தான். ஹா! ஹா! ஹா!

மார்லோ:—என்னுல் இந்தப் பரிகாசமும், வெட்க மும், நான் செய்ததையும் நினைத்துப் பார்த்தால் சகிக்க வேயில்லை; மானம் போகிறது.

கேட்:—நீங்கள் யார் என்று நான் முதலில் அறிந்து கொள்ளவேண்டும். உடல் நடுங்கி பெண்கள் முகத்தையே ஏறிட்டுப் பார்க்காமல், தரை நோக்கி, தலை வணங்கிக் கூச்சத்துடன் உள்ள மனிதரா? அல்லது, லேடீஸ் கிளப் பில் இரவு மூன்று மணி வரை எல்லா ஸ்திரீகளுடனும் கலகலப்பாகப் பேசிக்கொண்டு அங்கு விளங்கும் ஜோதி யா? ஹா! ஹா! ஹா!

மார்லோ:—எனக்குத் தலை சுழல்கிறது; நான் இனி இங்கு தங்குவதற்குத்தகுதியற்றவன். நான் போகிறேன்.

ஹார்ட்காஸில்:—அதெல்லாம் முடியாதப்பா! ஏதோ தவறுகள் நடந்தாலும், முடிவை நினைத்தால் எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. "கிளம்புவேன்" என்ற பேச்சை மாத்திரம் பேசாதே; அதைக் கண் டித்துச்சொல்லிவிட்டேன். அவள், உன் பிழைகளெல் லாம் மறந்துவிடுவாள். ஏனம்மா, கேட்! அப்படித் தானே? நாங்கள் எல்லோரும் உன்னை மன்னித்து விட்டோம். தைர்யமாய் இரு.

["கேட்" மார்லோ இருவரும் போகிறுர்கள். மார்லோவை விளையாட்டாக, கேட் பரிகசித்துக் கொண்டே போகிறுள்.]

[ டோனியும், டோனி தாயாரும் வருகிறார்கள். ]

டோனி தாயார்:—அவர்கள் ஓடிப்போய்விட்டார்கள் என்று சொல்லுகிறாய்? ஓடட்டுமே; எனக்கென்ன?

ஹார்ட்காஸில்:—யார் ஓடினது?

டோனி தாயார்:—அந்த பரமசாது இருக்கே! அந்த மிஸ் நெவிலும், டவுனிலிருந்து 'ஹேஸ்டிங்ஸ்' என்று ஒரு யோக்கியர் வந்தாரே, அவரும். மஹா யோக்யன் போல் பேசினான்.

ஸர்சார்லஸ்:-யார்? ஜியார்ஜ் ஹேஸ்டிங்ஸா! தங்கமான பையனல்லவா? அவனைப் புருஷனாக அடையும் பெண் நல்ல அதிர்ஷ்டக்காரி என்றுதான் சொல்லவேண்டும்.

ஹார்ட்காஸில்:—அதைக் கேட்க எனக்கு மிகவும் சந்தோஷம்; அவ்வளவு உயர்ந்த சம்பந்தம் என்று நினைக்க என் மனம் குளிர்ந்திருக்கிறது.

டோனி தாயார்:—பெண்ணைத் தூக்கிக்கொண்டு போனால் போகட்டுமே; அவள் நகையெல்லாம் என்னிடம் அகப்பட்டுக்கொண்டது; எனக்கு அது போதும்.

ஹார்ட்காஸில்:—டோரதீ; ஆனாலும், நீ இவ்வளவு அல்பத்தனமாக இருக்கக்கூடாது.

டோனி தாயார்:—நீங்கள் சும்மா, பேசாமலிருங்கள். உங்களை யார் கேட்டது? என் விஷயத்தில் நீங்கள் தலையிடாதீர்கள்.

ஹார்ட்காஸில்:—உன் மகன் மேஜரானதும், அவன் மிஸ் நெவிலைக் கலியாணம் செய்துகொள்ள மறுத்து விட்டால், நகைகளையெல்லாம் திருப்பிக்கொடுத்துவிடவேண்டுமென்று தெரியுமோ, தெரியாதோ?

டோனி தாயார்:—அவனுக்கு இன்னும் வயதாகவில்லை; பார்த்துக்கொள்ளலாம். அவள் தான் அதைக் கூட கவனிக்காமல் ஓடிவிட்டாளே.

[ ஹேஸ்டிங்ஸூம், மிஸ் நெவிலும் வருகிறார்கள்.]

டோனி தாயார்:—[தனக்குள்] இதென்னடா, திரும்பி அதற்குள் வந்துவிட்டது! எனக்குக் கொஞ்மானும் பிடித்தால்தானே.

ஹேஸ்டிங்ஸ்:—[ஹார்ட்காஸிலிடம்] நீங்கள் அறியாமல், உங்கள் மருமகள் மிஸ் நெவிலை, நான் அழைத்துப் போக நினைத்ததிற்கு தகுந்த தண்டனை அடைந்து விட்டேன். என் மானம் போகும்படி நடந்து விட்டேன். எங்களிருவருக்கும் நியாயத்தை செய்வீர்கள் என்று நம்பி திரும்பி வந்திருக்கிறோம்; உங்களை நாடியே வந்திருக்கிறோம். நான் மிஸ் நெவிலை மணம்புரிய அவளுடைய தகப்பனார் உயிருடன் இருக்கும் பொழுது சம்மதித்தார்; அவர் ஆக்ஞைப்படியே அவளும் நடந்து கொள்ள சம்மதிக்கிறாள்,

மிஸ் நேவில்:—அவர் காலம் சென்ற பிறகு, என் அத்தையின் நிர்ப்பந்தத்தையும், கொடுமையையும்

சகிக்க முடியாமல், அவள் இஷ்டம் போல் நடந்து கொள்ளுவதாகப் பாசாங்கு செய்தேன். ஒரு சமயத்தில் என் நகைகளை இழந்து என் காதலனுடன்கூடப் போக லாமென்றுகூட நினைத்தேன். என் மனம் இப்பொழுது தெளிந்துவிட்டது; உங்களை அண்டி, என் மனக்குறை களைச்சொல்லி, நியாயம் பெறலாம் என்று நினைத்து வந் திருக்கிறேன்.

டோனி தாயார்:—பலே பேஷ்! இதென்ன, ஒரு நாவல் முடிவடைவதற்கு முன் உள்ள, பீடிகை மாதிரி இருக்கிறதே.

ஹார்ட்காஸில்:—எப்படியிருந்தாலென்ன? அவர் களுக்குச் சொந்தமானதை கேட்க வந்திருக்கும்பொழுது நீ கொடுத்துவிடவேண்டியதுதானே! அப்பா டோனி! இங்கு வா. உனக்கு மிஸ் நெவிலை மணந்துகொள்ள இஷ்டமா?

டோனி:—நான் மேஜராவதற்குமுன் என்ன சொல் லிப்பிரயோஜனம்? நான் மறுப்பதற்கு எனக்கு அது வரை சுதந்திரம் இல்லையே.

ஹார்ட்காஸில்:—நீ எங்களுக்குட்பட்டு திருந்த வேண்டுமென்று நினைத்து, உன் தாயார் வேண்டுகோ ளின்படி, உன் வயதை மறைத்து வைத்திருந்தேன். ஆனால், இப்பொழுது உன் தாயார் செய்கையினால் உன் உண்மையான வயதைச் சொல்லும்படி நேர்ந்துவிட்டது. நீ மேஜராகி மூன்று மாதங்கள் ஆகிவிட்டன.

டோனி:—நான் மேஜரா? நிஜமாகவா?

ஹார்ட்காஸில்:—மூன்று மாதங்களுக்கு மேல் ஆகி விட்டது.

டோனி:—அவ்விதமிருந்தால், என் சுய அதிகாரத்தை எவ்விதம் செலுத்துகிறேன் பாருங்கள். [மிஸ் நேவில் கையைப் பிடித்துக்கொண்டு] இதன் மூலம் சகல ஜனங்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால்:- ஒரு ஜமீனுக்கும் உரிமையில்லாத அந்தோனீ லம்கின் என்ற பிரபுவாகிய நான், என் அம்மங்காளாகிய மிஸ் நேவிலை, கலியாணம் செய்துகொள்ளப் போவதில்லையென்று தீவிரமாகவும், பகிரங்கமாகவும் அறிவிக்கிறேன். மிஸ் நெவில் அவள் இஷ்டம் போல் எவரை வேண்டுமென்றாலும் மணந்துகொள்ள சம்மதிக்கிறேன். டோனி லம்கின் இனி சுயேச்சையாகவே இருப்பார்."

ஸர் சார்லஸ்:—ஓ! எவ்வளவு பொருத்தனமான பேச்சு!

ஹேஸ்டிங்ஸ்:—எவ்வளவு அருமையான நண்பர்?

டோனி தாயார்:—எவ்வளவு சொல்லுக்கடங்காத குழந்தை!

மார்லோ:—ஹேஸ்டிங்ஸ்! இவ்விதமான முடிவிற்கு என் மனமார்ந்த வாழ்த்துகளைச் செலுத்துகிறேன். குறும்புத்தனமாகப் பேசிக்கொண்டிருக்கும் என் அருமைக் காதலியும் என்னை அங்கீகரித்தால், என்னைப் போன்ற பாக்கியவான் உலகில் இல்லை.

ஹேஸ்டிங்ஸ்:—[ கேட் என்பவளிடம் ] அம்மணீ! இனி அவரை சோதிக்கக்கூடாது. நீங்கள் அவரை அளவற்ற காதலுடன் நேசிக்கிறீர் என்று எனக்குத் தெரியும்; அவரும் உங்களிடம் அவ்விதமே இருக்கிருர். நீங்கள், அவரை அங்கீகரித்துக் கௌரவப்படுத்த வேண்டும்.

ஹாட்காஸில்:—[ கேட் கரங்களையும், மார்லோவின் கரங்களையும் பிடித்து இணைத்து ] நானும் அவ்விதமே சொல்லுகிறேன். என் அருமை மகள் என்னிடம் எவ்வளவு பிரியமாய் இருந்தாளோ, அவ்வளவு அன்புடன் உன்னிடம் இருந்தால், உன்னைப் போன்ற பாக்கியசாலி உலகில் இல்லை. நீங்களிருவரும் நாளை தினமே மணந்து, மணமாக வெகுகாலம் வாழ்ந்து, சிரஞ்சீவிகளாக, இன்பத்துடன் வாழ்வீர்களாக. என் மகளும் "ஜெயமடையவே பணிகிருள்."

—: சுபம் :—

AI UNIVERSITY LIBRARY
RAI-625021.